www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
27-03, 6.7.1993
ரூபா 8/50
දිනමුරසු වාරමලර්


# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 5

பச்சை ரிபன்
-சிறப்பு சிறுகதை-

எக்ஸ்ரே ரிப்போர்ட்

என்று தணியும் இந்த யுத்தம்
என்றெமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும்!



வடக்கு-கிழக்கு விவகாரம்:
அரைகுறைத் தீர்வுக்கு வழிவகுக்கும்
சர்வஜன வாக்கெடுப்பு!

லேடீஸ் ஸ்பெசல்





இலக்கிய நயம்

உங்கள் குழந்தை அழுகிறதா?
மருத்துவப் பக்கம்



பாப்பா முரசு



சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புடன் உங்களுக்கு,
வணக்கம்.

ஆரம்ப அடிவைப்புக்கள் மூலம்
தினமுரசு
ஏற்படுத்தியிருக்கும் தாக்கம்
வாசகர்களை மலர வைத்திருக்கிறது.
இனிய நண்பர்கள் சிரை
எரிச்சல் படவும் வைத்திருக்கிறது.

எங்கே-தங்கள்
பலவீனங்களும் பகிரங்கமாகி விடுமோ
என்று
பரபரப்படைகிறார்கள்.
பாவம் அவர்கள்.
அவர்கள் கூவி விடியாது.
அவர்களால் எதுவும் முடியாது.

இலங்கை வாசகர்கள்
புத்திசாலிகள்.
புதுமைகளை
முகம் மலர்ந்து வரவேற்பவர்கள்.
உண்மை, இது வெறும்
புகழ்ச்சி இல்லை.
வரவேற்பிலும் விற்பனையிலும்
தினமுரசு வாரமலர்
படைத்துக் கொண்டிருக்கும்
சாதனையைத் தவிர
அதற்கு வேறு சாட்சியம்
தேவை இல்லை.

■

தினமுரசு வாரமலரில்
எப்படியோ சில
எழுத்துப்பிழைகள்-
வாசகர்கள் சிலர்
சுட்டிக்காட்டி
ஒரு பிடி பிடித்து விட்டார்கள்.
சரியான கிழியல்.
சமாதானம் சொல்ல நினைத்தால்
மேலும் கிழிப்பீர்கள்.
இனிக் கவனமாய் இருப்போம்.
விழிகளுக்கு விளக்கெண்ணை
விட்டுக் கொண்டாலும் கூட
தப்பில்லை என்று படுகிறது.

முரசு இப்போது தானே
முகம் காட்டியிருக்கிறது.
இனி

கை வீசிநடக்கும்
கலகலப்பூட்டும்.
களிப்பூட்டும்.
தவறுகளைத் திருத்துவது
உரிமையோடு கண்டிப்பது
வாசகர்களுக்கு மட்டுமே
உள்ள உரிமை.

■

மா விலை ஏற்றம்-
பாண் விலையையும்-
கொஞ்சம் உயரத்தில்
தூக்கி வைத்துவிட்டது.
அடிமட்ட மக்கள்
வருத்தப்படவே செய்வார்கள்.
கடன் சுமைகளைக் குறைத்து
சொந்தக் காலில் தன்னிறைவு காண
சிறுவலிகளை
தாங்க வேண்டி இருக்கிறது
என்பது அரசாங்கத் தரப்பு நியாயம்.
எனினும்-
ஏழை பாழைகளைப்
பாதிக்காத வகையில்
பொருளாதார சம்மந்தமான முடிவுகள்
மேற்கொள்ளப்பட வேண்டியது
முக்கியமாகும்.

ஏற்கனவே யுத்தச் சுமை
சாதாரண மக்களின்
வாழ்க்கைத் தரத்தை
வாட்டிக் கொண்டிருக்கிறது
என்பதையும்
மறந்து விட முடியாது.

ஆடம்பர செலவினங்களை
அரசாங்கம் தவிர்த்திருப்பது
வரவேற்கக்கூடிய ஒன்று.
அவ்வாறு செய்து-
அடிமட்ட மக்களின்
அதிருப்தியைச் சம்பாதிக்கக் கூடிய
திட்டங்களை,
விலையேற்றங்களை
தவிர்த்துக் கொள்வதே
நன்று.

■

அடுத்த முரசில்
மறுபடியும்
சந்திப்போம்.

அன்புடன்
ஆசிரியர்.

தினமுரசு
போன்: 820265

## அறிவித்தல்

தினமுரசு வாரமலரில் இடம் பெறும் போட்டிகளில் நீங்கள் பங்குகொள்ளும் போது- அஞ்சல் அட்டை முகப்பில் போட்டியின் பெயரைக் குறிப்பிடத் தவற வேண்டாம்.

முகவரி: தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு -05.


## கவிதைப் போட்டி இல—5



படத்தைப் பாருங்கள். மனதிலே பட்டதை மடலிலே பதிவு செய்து அனுப்புங்கள். பரிசு பெறும் இருவருக்கு தலாரூபா 100/= பரிசுப்பணம் காத்திருக்கிறது. சுருக்கம் முக்கியம். சுவை அதிமுக்கியம்.

## கவிதைப் போட்டி இல—2 வெற்றிகண்ட கவிதைகளும் வியக்க வைத்த கவிதைகளும்

அடடே நம்நாட்டில் இத்தனை கவிஞர்களா என்று வியக்க வைக்குமளவிற்கு குவிந்து விடுகின்றன கவிதைகள். இன்னொரு சிறப்பு, கவிதை எழுதுவதில் பெண்களும் காட்டியுள்ள ஈடுபாடு.



### பரிசுப்பெறும் கவிதை

**பூகம்ப அமர்வு**

ஒரு
இளந்தளிர் மீது
பூகம்ப அமர்வு
வறுமையின்
வேரூன்றலில்
பட்டுப் போகும்
சிறு நாணல் இது.

அஜீசன்
கொழும்பு-05

### வியக்க வைத்த கவிதைகள்

**பாரம்**

சிரசோடு கால்களும் தீயாய் வேக
கற்களின் பாரமோ கைகளை நசுக்க
வயிற்றுப் பசியோ குடலினைப் புரட்ட
இதயத்தின் குமுறல் எரிமலையாய் வெடிக்காதோ?

யசோதரா கதிரவேலு
வவுனியா.

**ஏன் இந்த வேலை**

பள்ளிப்பருவம் இது
பால்வடியும் பூ வதனம் இது
ஏன் இந்த வேலை
ஏழ்மைதனை வென்றிடவோ-

செல்வி.எம்.எம்.முஸ்தரி பேகம்
புத்தளம்.

**ஏது வயது?**

வறுமையே
பாரமாக இருக்கும் போது
வறுமைக்கு ஏது பாரம்?
ஏது வயது?

ஏ.எம். இளையராஜா
கபுகஸ்தலாவை.

**தின்று விட்டதோ?**

இவனின் வயதையும்
வறுமை தின்று விட்டதோ?
இல்லை
வயதை-பல படிகள்
சுமை கூட்டி விட்டதோ?

சி.சார்ள்ஸ்
லிந்துளை

**காலமிது மாறுமோ?**

கல்வி கற்கும் வேளையிலே
கல் தூக்கி உழைக்கின்றேன்
வறுமையின் கொடுமை இது
வாட்டுதுவே எனை நாளும்.
காலமிது மாறுமோ
கனவு நனவாகுமோ?

செல்வி-ஜெயசீலன் கிருஷாந்தி
கொழும்பு-13

**பேசுங்கள் மேடையிலே**

எல்லோரும்
இந்நாட்டு மன்னர்கள் தான்
மேடையிலே பேசுங்கள்.
மண்ணைச் சுமக்கட்டும்
இங்கே
மழலைகள்.

ஆர்.நிஷாந்தன்
மினுவாங்கொட.

**வெள்ளோட்டமோ இது?**

பிஞ்சுக் குழந்தையின்
பஞ்சுக் கரங்கள்
சுமப்பதேன் பாரம்
இதனால் - என்
இதயத்திலுமன்றோ ஈரம்.
கண்ணா
எதிர்காலச் சுமையை
சுமப்பதற்கான
வெள்ளோட்டமோ இது?

செல்வி.சுஜானா ரஹீம்
புத்தளம்.

**இதய வேதனை**

பூக்களைச் சுமக்கும் கரங்கள்
கற்களைச் சுமப்பது நியாயமா?
ஏன் இந்தச் சோதனை
இதய வேதனை.

செல்வி. நசூஹா பரீன் கலீல்
பாணந்துறை

**போர் வெறிக்குக் கல்லறை**

பொல்லாத போர் வெறியை
பூமிக்குள் புதைத்து மூடி
கல்லறையைக் கட்டுதற்கா
கல் சுமந்து போகின்றான்?

இல்லாமை எனும் பேயின்
இதயத்தைக் கல்லெறிந்து
கொல்லுகிறேன் பார் என்றா
குழந்தை இவன் போகின்றான்?

கல் இரண்டு மண் ஒன்று
கட்டினால் வீடு ஒன்று
உள்ளத்தால் இருயினமும்
ஒன்றுபட்டால் நாடு ஒன்று

சொல்லுங்கள் பெரியவரே
சொல்வது நான் சரிதானே
இல்லையா என்று கேட்டா
இவன் கல்லைச் சுமக்கிறான்?

செ.குணரத்தினம்
மட்டக்களப்பு.

**இளமையில் 'கல்'**


"இளமையில் 'கல்'"
என்பதன்
அர்த்தம் புரியவில்லை.
செவ்வந்திப் பூவொன்று
செங்கல்லு சுமக்குது.
காணும்போது
கண்ணீர் வரவில்லை.
செந்நீர் சொரிகிறது.

ச.கண்ணன்
பேராதனை.


**பாவச் சிலுவைகள்**

எதிர்காலத் தேடலில்
இப்போதே
வியர்வையின் விரயம்
பட்டினியுடன் ஒப்பந்தம்
யுத்தத்துடன் யுத்தம்
எங்கள்
பாவச் சிலுவைகள்
இவர்களின் பாரச் சுமைகள்.

பே.தேவமனோகரன்
வத்தளை.




## இறக்குமதிச் சிரிப்பு



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மட்டக்களப்பில் இரவு நேரப் பீதி

மட்டக்களப்பு பகுதியில் பாதுகாப்புப் படையினர் இரவு நேரங்களில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் பலர் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். இரவு நேரத் தேடுதல்கள் மக்களிடையே பீதியைத் தோற்றுவிக்கின்றன.

இதே வேளையில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் புலிகள் அமைப்பினர் இரவு நேரங்களில் ஆயுதங்களோடு பிரவேசிக்கிறார்கள். நிதி திரட்டுகிறார்கள். தமக்கு எதிரானவர்கள் என்று கருதப்படுவோரை எச்சரிக்கிறார்கள்.

புலிகள் இரவில் ஊடுருவல் செய்வதால் இராணுவம் தேடுதல் நடத்த வேண்டியிருக்கிறது என்பது இராணுவத் தரப்பு நியாயமாகும்.

இராணுவம் விழிப்பாக இல்லாத போது காரியத்தை சாதிப்பதே தந்திரம் என்பது புலிகள் தரப்பு நியாயம்.


மொத்தத்தில் மக்களுக்குத் தான் இரவுகள் தூங்குவதற்கானவை என்பது மறந்து போய்க்கொண்டிருக்கிறது.




கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நிந்தவூர் பொது நூலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றபோது சங்கத்தின் இணைச்செயலாளர் திரு. ஆர். துரைரத்தினம், எதிர்காலசெயற் திட்டங்கள் குறித்து உரையாற்றுவதைப் படத்தில் காண்க. மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சங்கத்தலைவர் திரு. செழியன் ஜே. பேரின்பநாயகம், திரு. கே. நடராஜா தர்மலிங்கம், அல்-ஹாஜ் எம். எஸ். ஹமீட் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

# 47 இலட்சம் ரூபா செலவில் எழுகிறது மணிமண்டபம்! முத்தமிழ் வித்தகருக்கு காரைதீவில் கௌரவம்!!

(தினமுரசு நிந்தவூர் நிருபர்)



மட்டு-காரைதீவில் முத்தமிழ் வித்தகருக்கு எழுந்து கொண்டிருக்கும் மணிமண்டபத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் ஞாபகார்த்தமாக அவர் பிறந்த காரைத்தீவுக் கிராமத்தில் மணிமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

கிழக்கிலங்கையிலுள்ள மேற்படி காரைத்தீவுக் கிராமத்தில் இயங்கும் சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு ஞாபகார்த்த பணி மன்றத்தினர் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியின் பயனாக இந்த மணிமண்டபம் 47 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த மணிமண்டபம், சுவாமிகள் பற்றிய அரும் பொருட்காட்சிச்சாலை நூலகம், பிரார்த்தனை மண்டபம் என்பதைக் கொண்டதாக அமையவிருக்கின்றது.

டாக்டர் திரு. மா. பரசுராமன் தலைமையில் இயங்கும் காரைத்தீவு விபுலாநந்தர் நூற்றாண்டு ஞாபகார்த்த பணிமன்றத்தினர் இந்த மணிமண்டபத்திறப்புவிழாவை விரைவில் சிறப்பாக நடத்த இருப்பதுடன், விபுலாநந்தர் நூற்றாண்டு சிறப்புமலர் ஒன்றையும் வெளியிட இருக்கின்றனர்.

# இராணுவ உளவுப் பிரிவோடு தொடர்பாம்! லொறிச் சாரதி புலிகளால் கொலை!!

கடந்த 16ம் திகதி புதன்கிழமை வவுனியா மருக்காரம்பளையைச் சேர்ந்த லொறிச் சாரதியான கிருஸ்ணபிள்ளை இராசரத்தினம் (வயது 44) என்பவர் விடுதலைப்புலிகள் அமைப்பினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

விமானத்தாக்குதல்களால் புலிகளின் முகாம்களுக்குள் ஏற்பட்ட சேதவிபரங்களை அவர் இராணுவ உளவுப்பிரிவுக்குத் தெரிவித்தார் என்றும், இராணுவம் பிடித்து வைத்திருந்த லொறிகளை விடுவித்துக் கொடுத்து லொறி உரிமையாளர்களிடம் பணம் வாங்கினார் என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் அவரது மருமகன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டபோது தனது செல்வாக்கு மூலமாக கிருஸ்ணபிள்ளை இராசரத்தினம் தனது மருமகனை விடுவித்தார் என்றும் புலிகள் தமது குற்றச்சாட்டில் கூறியுள்ளனர்.

# கைதிகளை விடுவிக்க புலிகளின் நிபந்தனை! நீராகாரம் அருந்துவதையும் கைதிகள் கைவிட முடிவு!!

(யாழ் நிருபர் வர்மா)

யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் வசமுள்ள 38 பொலிசாரையும் ஒரு இராணுவ வீரரையும் விடுவிக்க புலிகள் இரு நிபந்தனைகள் விதித்துள்ளனர்.

ஒன்று, புலிகள் என்று சந்தேகிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் பெயர் பட்டியலை அரசாங்கம் வெளியிட வேண்டும்.

மற்றது, வட பகுதிக்கான பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட வேண்டும்.

இரண்டாவது நிபந்தனை அரசுக்கு சிக்கலை உருவாக்கியுள்ளது.

அரசாங்கத்தின் சார்பாக புலிகளோடு பேச யாழ் சென்ற புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் ஆனந்த வீரசேகர யாழில் இருந்தபடியே புலிகளின் கோரிக்கை பற்றி கொழும்போடு தொடர்பு கொண்டார்.

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகமே அது பற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்று அரசாங்கம் தெரிவித்தது.

இதற்கிடையே யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதமிருக்கும் பொலிசாரும், இராணுவவீரரும் நீராகாரம் அருந்துவதையும் கைவிடமுடிவு செய்திருந்தனர். அவர்களை பிரிகேடியர் ஆனந்த வீரசேகர் சந்தித்துப் பேசியதோடு நீராகாரமும் அருந்தாமல் இருப்பது என்னும் முடிவைக் கைவிடுமாறு கோரினார். சில நாட்களுக்கு மட்டும் முடிவைத் தள்ளிப் போடுவதாகவும் அதன் பின்னரும் தமது விடுவிப்பு விடயத்தில் முன்னேற்றம் ஏற்படாவிட்டால் நீராகாரம் அருந்துவதையும் கைவிடுவோம் என்றும் உண்ணாவிரதிகள் தெரிவித்தனர்.

யாழ் சென்ற கைதிகளின் உறவினர்கள் உடன்திரும்புவது என்றே முன்னர் முடிவு செய்யப்பட்டதாகவும், ஆனால் பிரபாகரன் அந்த உறவினர்கள் மேலும் சில நாட்கள் தங்கிச் செல்ல அனுமதித்ததாகவும் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

பிரிகேடியர் ஆனந்த வீரசேகர புலிகளது நிபந்தனைகள் பற்றி ஆராய்வதற்காகக் கொழும்பு திரும்பினார்.

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகம் 38 பொலிசாரையும், இராணுவ வீரரையும் விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து ஆராய்ந்து வருகிறது.

உண்ணாவிரதிகளின் பேட்டிகள் யாழ்ப்பாணத்தில் புலிகளின் குரல் வானொலி மூலம் தினமும் ஒலிபரப்பப்பட்டன.

இதே வேளையில் புலிகளின் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் பேசும் பொலிசாரின் கதி என்னவென்று தமிழ்க்கட்சி வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள்ளன. தம்மிடமுள்ள தமிழ் பேசும் பொலிசார் பற்றி புலிகள் இதுவரை எதுவும் கூறவில்லை. அரசும் அதுபற்றிக் கேட்கவில்லை.

# குழப்பமான மொழி பெயர்ப்பால் கலக்கமான உயர்தர மாணவர்கள்

(ஏ.எல்.ஏ. ஸலாம்)

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் இந்த ஆண்டு நடாத்துகின்ற பாடசாலைகளுக்கிடையிலான க.பொ.த உயர்தரப் பரீட்சை விலங்கியல் வினாத்தாளில் பெரும் குளறுபடி நடந்திருக்கிறது. சிங்கள மொழி மூலம் எடுக்கப்பட்ட இவ்வினாத்தாள் தமிழுக்கு மொழிபெயர்த்ததில் ஏற்பட்ட தவறுகளினாலேயே இக்குழப்பம் ஏற்பட்டுள்ளது. இச்சம்பவம் கெகுணகொல்ல மத்திய கல்லூரி உட்பட பல உயர்தர பாடசாலைகளில் நடந்துள்ளன.

இதுபற்றி மேலும் அறிய வருவதாவது, வட மேல் மாகாண கல்வித்திணைக்களம் புத்தளம், குருநாகல் ஆகிய மாவட்டங்களிலுமுள்ள சகல பாடசாலைகளுக்குமான க.பொ.த உயர்தர கலை, வர்த்தக, விஞ்ஞான, வகுப்புகளுக்கான விஷேட முன்னோடிப் பரீட்சை ஒன்றை தற்போது நடாத்திக் கொண்டிருக்கின்றது.

கடந்த 16ம் திகதி நடாத்தப்பட்ட விலங்கியல் விஞ்ஞானப் பரீட்சையின் போது கெகுணகொல்ல மத்திய கல்லூரியில் மாணவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த வினாத்தாள்களை மாணவர்கள் ஏற்க மறுத்தனர். காரணம் பிழையான முறையில் சிங்களத்தில் இருந்து தமிழுக்கு மொழி பெயர்த்தமையேயாகும். இதனால் சொற்கள் குழப்பத்தை ஏற்படுத்தியதுடன், முன்னுக்குப்பின் முரணான முறையிலும் காணப்பட்டன. இதனால் மாணவர்கள் பரீட்சையை இடையில் நிறுத்த வேண்டி ஏற்பட்டது.


# கறுப்புப் பூனைப் படையும் முன்னாள் பிரதமரின் மகளும்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்காவிற்குக் கறுப்புப் பூனைப்படைகள் பாதுகாப்பளித்து வருகின்றன.

சீக்கியத் தீவிரவாதிகளின் கொலைப் பட்டியலில் அவரது பெயரும் இருப்பதாகக் கருதியே கறுப்புப் பூனைகளின் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது.

பிரியங்கா தான் எங்கு சென்றாலும் கறுப்புப் பூனைகள் நிழல் போல் தொடர்வதை வெறுக்கிறார். அதனால் சில சமயங்களில் கறுப்புப் பூனைகளின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு அவர் நழுவி விடுகிறார்.

பிரியங்கா தனியே செல்வது குறித்து கவலை அடைந்துள்ள இந்திய அரசு அதுபற்றி சோனியா காந்திக்குத் தெரிவித்துள்ளது.



பிரியங்கா எங்கெங்கு செல்ல விரும்புகிறாரோ அதைப்பற்றிய தகவல்களை முன்பே தெரிவிக்க வேண்டுமென்று கறுப்புப்பூனைகள் அரசிடம் ஒரு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

"நான் எனது நண்பர்களுடன் வெளியே போகும்போது கறுப்புப்பூனைப் படையினர் தலையிட வேண்டாமென்று விரும்புகிறேன். அப்போது எனக்குப் பாதுகாப்பும் கொடுக்க வேண்டாம்" என்று பிரியங்கா வெளிப்படையாகக் கூறிவிட்டார் என்று கூறப்படுகிறது.

தனது வீட்டை விட்டு பிரியங்கா வெளியே செல்லும் போது குறைந்தது எட்டுக்கார்கள் அவருக்கு முன்னும் பின்னும் செல்கின்றன. அவரது அன்றைய நிகழ்ச்சிகள் குறித்து டில்லி பொலிசுக்குத் தகவல் தெரிவிக்கப்படுகிறது. அந்தந்த இடங்களில் பொலிசார் உஷார் படுத்தப்படுகின்றனர்.

சிலசமயம் மாலையில், பிரியங்கா தனது நண்பர்களோடு விருந்து வழங்கும் வைபவங்களுக்கு ஏற்பாடு செய்துவிட்டால் அந்தப் பகுதியில் போக்குவரத்தே ஸ்தம்பித்து விடுகிறது. இதனால் ஏற்படும் சிரமங்களையும் கறுப்புப் பூனைப்படையினர் இந்திய அரசிற்குத் தெரிவித்துள்ளனர்.

## சாய்பாபா கொலைமுயற்சி தீவிர விசாரணைக்கு வற்புறுத்தல்

சத்யசாய்பாபாவை கொலை செய்ய நடந்த முயற்சிக்கும் ஆர்.எஸ்.எஸ் என்னும் இந்து தீவிரவாத அமைப்புக்கும் தொடர்பு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதே வேளை பாபா கொலை முயற்சி குறித்து இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு விசாரணைை நடத்த வேண்டும் பாரதிய ஜனதா கட்சி கேட்டுள்ளது.

ஆசிரமத்தில் உள்ளவர்களே கொலை முயற்சியை மேற்கொண்டதால் அச்சம்பவம் முக்கியமானதாகும் என்றும் அக்கட்சியின் துணைத்தலைவர் சுந்தர்சிங் பண்டாரி தெரிவித்துள்ளார்.

## உபவாச ஜெபக்கூட்டம்

எல்லாச் சபைகளையும் சார்ந்த எல்லாப் பெண்களுக்கும் நடத்தப் படும் சபைபாகுபாடற்ற பெண்கள் உபவாசக் கூட்டம் ஜுன் 26ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு கிராண்ட்பாஸிலுள்ள சிறீநாராயண குரு மண்டபத்தில் நடைபெறும்.

இந்த உபவாசக் கூட்டம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், சபையிலும், தேசத்திலும் 'எழுப்புதல் அக்கினி பற்றி எரிந்திட வேண்டும்' என்ற நோக்கத்துடனேயே நடத்தப் படுகிறது.

இக்கூட்டத்தை இராஜ்ஜியத்தின் வீராங்கனைகள் ஒழுங்கு செய்துள்ளார்கள்.

மலையாள ஜோதிட மாந்திரிகம்

ஆண், பெண் வசியம் 24 மணித்தியாலங்களிலும். ஜோதிடம், மலையாள மாந்திரிகம், கை ரேகை, எண் ஜோதிடம், பிரசன்ன ஆருடம் உங்கள் எதிர்காலம், நிகழ் காலம், நினைத்த காரியம், உங்கள் பிரச்சனை எதுவாக இருந்தாலும், தொழில், வியாபாரம், தீராத நோய், கிரகபீடை, வெளிநாட்டு தடை, வெளிநாட்டு கடித போக்குவரத்து, வெளி நாட்டில் உள்ளவர்களை பற்றி அறியவும், வெளி நாட்டில் உள்ளவர்களை வசமாக்கவும், மை வெளிச்சம் பார்க்கவும், உலக புகழ் மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி மலையாள ஆசான் பரம்பரை ஏட்டு சவடி மலையாள மாந்திரிக மந்திராசாரி குரு சிஷ்ய மாந்திரிகர் மந்திராசாரி குருஜியை சந்திக்க.

KURUGEE
TULIP INN
225, KOLLUPITY(JUNCTION)
COLOMBO-3
SRI LANKA
Tel.437874,435802.


## பக்கத்து நாட்டுச் செய்திகள்

# தி.மு.க.வுக்குள் பூசல்!


## கோபால்சாமி குழுமீது தலைமை பாய்ச்சல்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்குள் கலைஞர் மு. கருணாநிதிக்கு அடுத்தவராக வை. கோபால்சாமி செல்வாக்குப் பெற்று வருகிறார்.


கலைஞர் மு. கருணாநிதியின் மகன் மு. க. ஸ்டாலின் வளர்ச்சிக்கு வை. கோபால்சாமியின் செல்வாக்கு தடையாக இருந்து வருகிறது.

வை. கோபால்சாமி முன்னர் ஒரு முறை சட்ட விரோதமாக யாழ்ப்பாணம் வந்து புலிகளைச் சந்தித்தவர். அவர் கட்சித் தலைமைக்கு தெரிவானால் தீவிரவாதம் மேலோங்கும் என்று மிதவாதப் பிரிவினர் கூறுகின்றனர்.

தற்போது வை. கோபால் சாமி பெயரில் தமிழ் நாட்டில் நற்பணி மன்றங்களை அவரது ஆதரவாளர்கள் அமைத்து வருகின்றனர். அது கட்சி விதிகளுக்கு மாறானது என்று கூறி தி.மு.க. தலைமை சம்பந்தப் பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளது. மன்றங்களை கலைத்து விடவும் உத்தரவிடப் பட்டுள்ளது.



மு.க. ஸ்டாலின்



வை. கோபால்சாமி

# மீண்டும் அத்வானி!


## எதிர்க்கட்சித்தலைவர் பதவி போகுமா?

இந்தியாவின் பிரதான எதிர்க் கட்சியும், இந்துத் தீவிரவாதக் கட்சியுமான பாரதிய ஜனதாக் கட்சித் தலைவராக அத்வானி தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு வயது 67.

தற்போது இந்தியப் பாராளு மன்றத்தில் அத்வானிதான் எதிர்க்கட்சித் தலைவர்.

பாரதிய ஜனதாவில் ஒருவருக்கு ஒரு பதவி என்ற கொள்கை உண்டு. எனவே அத்வானியின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி, பாரதிய ஜனதாவின் முன்னாள் தலைவர் வாஜ்பாய்க்குக் கொடுக்கப்படும் என்று கருதப்படுகிறது.

இந்துத் தீவிரவாத இயக்கமான ஆர். எஸ். எஸ். மூலம் அரசியலுக்கு வந்த அத்வானி 1986 முதல் 1990 வரை பாரதிய ஜனதாக்கட்சித் தலைவராக இருந்தவர். மீண்டும் இப்போது அப்பதவிக்கு தெரிவாகியுள்ளார்.



# பலமாத இடைவெளிக்குப் பின் படப்பிடிப்பில் சஞ்சய் தத்

கடந்த மார்ச் மாதம் பம்பாயில் நடந்த குண்டு வெடிப்புத் தொடர்பாக கைதாகியிருந்த நடிகர் சஞ்சய் தத் மீண்டும் படப் பிடிப்பில் கலந்து கொண்டார்.

இரண்டு மாத கால பரபரப்பான இடைவெளிக்குப் பின்னர் வடமேற்கு பம்பாயில் நடை பெற்ற 'அமன் நாத்' என்ற படப்பிடிப்பில் அவர் கலந்து கொண்டார்.

காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரும்- சஞ்சய் தத்தின் தந்தையுமான சுனில் தத் படப் பிடிப்பு தளத்திற்கு வந்து மகனுக்கு வாழ்த்து தெரிவித்தார்.



இதே வேளை சஞ்சய் தத்தின் புதிய படங்கள் திரையிடப்படும் திரை அரங்குகள் முன்பாக பாரதிய ஜனதாகட்சி, மற்றும் சிவசேனா தொண்டர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

சிவசேனா தலைவரை சந்தித்த சஞ்சய் தனக்கும் குண்டு வெடிப்புக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று விளக்கமளித்தார். தனக்கு உதவுமாறும் கேட்டார்.

## பாராட்டும்- பரிசும்

தம்பதெனிய பகுதியில் இருந்து இவ்வாண்டு பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைப் பாராட்டி பரிசு வழங்கும் வைபவம் ஒன்று அண்மையில் நாரம்மலையில் உள்ள மயுரபாத மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

புடவைக் கைத்தொழில் அமைச்சர் திரு.யூ.பி. விஜயக்கோன் இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்.

தம்பதெனிய கலாசார சபை இப்பாராட்டு வைபவத்தை ஒழுங்கு செய்திருந்தது.

## இசுவா அம்மானைக்கு ஒரு அறிமுக விழா

கிழக்கிலங்கை காத்தான்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட அகமதுக்குட்டிப் புலவர் பாடி 1844.03.21ஆம் திகதி கோறளைபூரில் அரங்கேற்றிய "இசுவா அம்மானை" என்ற இலக்கிய நூல் சாய்ந்தமருதைப் பிறப்பிடமாகக் கொண்ட அலியார் முஸம்மில் என்பவரால் ஏட்டுப்பிரதியில் இருந்து பரிசோதித்து இந்தியாவில் அச்சேறி, 5ஆவது அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் சார்பாக கீழக்கரை மாநாட்டில் வெளியிடப்பட்டது.

இந்நூலின் அறிமுக விழா 1993.06.27ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு கொழும்பு 10, மாளிகாவத்தை, தேசிய வீடமைப்புத்திட்ட ராஜபொக்குண மாவத்தை இலக்கம் 10இல் அமைந்திருக்கும் இஸ்லாமிய நிலையத்தில் கலாசூரி, பேராசிரியர், அல்ஹாஜ் ம.முகம்மது உவைஸ் அவர்களின் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. இவ்விழாவில் இலங்கையில் தலை சிறந்த கல்விமான்கள் கலந்து கொள்ளவிருப்பதுடன், அல்ஹாஜ் எஸ்.எம். கமாலுத்தீன் (கௌரவப் பணிப்பாளர், ஸ்ரீ லங்கா இஸ்லாமிய நிலையம்) பேராசிரியர் சி. தில்லைநாதன் (தமிழ்த்துறைத் தலைவர், பேராதனைப் பல்கலைக்கழகம்) அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல் (செயலாளர், முஸ்லிம், சமய கலாசார இராஜாங்க அமைச்சு) ஜனாப் எம்.எஸ்.எம். அனஸ் (சிரேட்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்) கலாநிதி சி. மௌனகுரு (கலைப்பீடாதிபதி, கிழக்குப் பல்கலைக்கழகம்) ஆகியோர் உரையாற்றவிருக்கின்றனர். விழா ஏற்பாட்டினைப் பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எம்.ஏ. நுஃமான் அவர்களும், நூலின் பதிப்பாசிரியர் அலியார் முஸம்மிலும் மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்து மன்றத்தின் இன்னொரு பணி

-கண்டி நிருபர்-

மலையகத்தில் மத்திய மாகாண இந்து மன்றத்தின் மற்றும் ஒரு சிறப்புப் பணியாக வாசகசாலை ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது. கண்டியில் உள்ள இந்து கலாசார நிலையத்தில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

பல்லாயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் வாழும் கண்டி நகரில் இந்து சமய நூல்நிலையம் இல்லை என்ற குறை இதன் மூலம் தவிர்க்கப்பட்டுள்ளது.

## கல்முனை சாகிறாக் கல்லூரியில் தேசியப் பாடசாலை விழா

"கிழக்கின் ஒளி விளக்கு" என பிரபல்யம் பெற்றுள்ள கல்முனை சாகிறாக் கல்லூரி தேசியப் பாடசாலையாக தரமுயர்த்தப் பட்டுள்ளது. இதனையொட்டி பெருவிழா ஒன்றினை எடுப்பதற்கு பாடசாலை நிருவாகம் முயன்று வருகின்றது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர் அவர்கள் கலந்துகொள்ளவிருப்பதுடன், வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம்.ஏ. காதர் மொகிதீன் அவர்கள் உட்பட இன்னும் பல கல்வி அதிகாரிகளும் கௌரவிக்கப்பட விருக்கின்றனர். விழா இம்மாதம் (1993.06.29) 29ஆம் திகதி கல்லூரியில் நடைபெறும். இதற்கான மலரொன்றும் வெளியிடப்படவிருக்கின்றது.

## நிந்தவூர் கோட்டக் கல்வியதிகாரியாக மருதூர் ஏ. மஜீத்

பிரதேசச் செயலகங்கள் ஊடாக நிருவாகத்தைப் பரவலாக்கும் திட்டத்தின் கீழ் நிந்தவூர் கல்விக் கோட்டத்தின் கோட்டக் கல்வி அதிகாரியாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் மருதூர் ஏ மஜீத் (மணிப்புலவர்) கடமையேற்றுள்ளார். இவரது அலுவலகம் தற்காலிகமாக கமு/நிந்தவூர் அல் அஷ்றக் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

## -நவநாடக விழா-

### வாலிபர் முன்னணி ஆயத்தம்!

மத்திய மாகாண முஸ்லீம் பாடசாலைகளுக்கிடையே நவநாடக விழா ஒன்றினை நடத்த அக்குரணை வாலிபர் முன்னணியினர் திட்ட மிட்டுள்ளனர்.

நாடகப் போட்டியில் பங்கு கொள்ள விரும்புவோர், அமைப்பாளர், நவநாடக விழா அக்குரணை 4 என்ற முகவரியோடு தொடர்பு கொள்ளுமாறு வாலிப முன்னணியினர் கேட்டுள்ளனர்.

## கல்வி- கலாசார உதவிக்கு

### முஸ்லீம் மத்திய பேரவை உதயம்!

வடமேல் மாகாணத்தில் வாழ்கின்ற முஸ்லிம்களின் கல்வி, கலாசார நடவடிக்கைகளில் உதவும் முகமாக பட்டதாரி முஸ்லிம் மாணவர்களினால் 'வடமேல் மாகாண முஸ்லிம் மத்திய பேரவை' என்னும் ஒரு அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

## கட்டிடம் இல்லாத வித்தியாலயம்



கிண்ணியா மஹ்ரூப் நகரில் வளர்ந்து வரும் அல்- அதன் வித்தியாலயத்தின் தோற்றத்தினையே படத்தில் காண்கிறீர்கள்.

கிண்ணியா இளைஞர் சமூக சேவை ஒன்றியம் சிரமதானப் பணியொன்றினை ஒழுங்கு செய்து ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இங்கு ஆண்டு ஒன்று, ஆண்டு இரண்டு வகுப்புகளில் 193 பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றனர்.

தகுந்த கட்டிடம் இல்லாத நிலையில் மேலே உள்ள கொட்டிலில்தான் அதிபர் காரியாலயமும் இருக்கிறது. அங்குதான் பாடப்புத்தகங்களும், ஏனைய பொருட்களும் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன.

# புகார் பெட்டி

### கால்கடுக்க காத்து நிற்பு

புத்தளம்- கல்பிட்டி பாதையில் பிரயாணம் செய்கின்ற மக்கள் ஒருபஸ்ஸைத் தவறவிடின் அடுத்த பஸ்ஸிற்கு சுமார் ஒன்றரை அல்லது இரண்டு மணி நேரம் பாதையோரம்காத்திருக்க வேண்டியுள்ளது. பி.ப. 4,5மணியின் பின் பிரயாணம் செய்வதை நினைத்தும் பார்க்க முடியாமல் உள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இக்குறையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எஸ்.எம்.மஸிம்தீன்
ஏத்தாளை.

### தினமுரசு மீது குறை!

சென்ற வார தினமுரசு வாரமலரில் மூன்றாம் பக்கத்தில் விலை உயர்ந்த திருமணம் என்பதற்கு பதிலாக திருணம் என்று அச்சாகியுள்ளது. ஏன் இந்தத் தவறு? அதுவும் பெரிய எழுத்தில் - கவனிக்காமல் விட்டது மாபெரும் பிழை. இனியாவது கவனிப்பீர்களா?

செல்வி. என். வசந்தி
கொழும்பு-6

### முடிவெங்கே?

கடந்த 1992 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. உ/த பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்காக அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களுக்கான எவ்வித பதிலும் இதுவரையில் (15.6.93) கிடைக்கப் பெறவில்லை.

முகமட் சனா
கண்டி.

### பஸ்ஸிலே நெருக்கடி

இங்கிரியாவில் இருந்து கொழும்பு நோக்கி செல்லும் பஸ்களில் அளவுக்கு மீறிய சன நெருக்கடி. இதில் கொழும்புக்கு பஸ்ஸில் சென்று கல்வி கற்கும் மாணவர்களுக்கு பெரிய கஷ்டத்தை ஏற்படுத்துகிறது. பாடசாலை பஸ் சேவையை எம் பகுதிக்கும் அளிக்க போக்குவரத்து அமைச்சு முன்வருமா?

எம்.ஸ்ரீகாந்தன்,
ரயிகம மேல்
இங்கிரிய.

### வெளிவருமா?

கடந்த ஆண்டு(1992.12.30)ம் திகதி நடைபெற்ற நில அளவையாளர் பரீட்சை முடிவுகள் வெளிவரவில்லை. 6 மாதம் முடிந்துவிட்டது. அதன்பின்னர் நடைபெற்ற பரீட்சை முடிவுகள் வெளிவந்து விட்டன. பரீட்சை ஆணையாளரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இது குறித்து கவனம் எடுத்து முடிவுகளை விரைவில் வெளியிடுவார்களா?

கே. ஜெயகுமார்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.

### பாதையில்லாத பாதை!

அநுராதபுரம் புனிதப் பிரதேசத்தில் இருந்து பரசங்காவ ஊடாக கம்பிரி கெஸ்வெவ வந்தடையும் பிரதான வீதி வாகனப் போக்குவரத்து செய்ய முடியாமல் சீர் கேடான நிலையில் உள்ளது. மழைக் காலத்தில் பாதையே தெரியாதவாறு வெள்ளப்பெருக்கு வேறு . அண்மையில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலின் போது பாதையைச் சீர் செய்வதாகக் கூறிய அரசியல்வாதிகள் இன்னும் அப்பக்கம் தலைவைத்தும் படுக்கவில்லை.

எ.எம்.மிஸ்ருன்னபி
அநுராதபுரம்.

### தமிழ்ப்பாடல் பஞ்சம்!

இலங்கை வானொலி சிட்டி எப்.எம் சேவையில் தமிழ்ப் பாடல்கள் குறைவாகவே ஒலிபரப்பாகின்றன. வானொலி நிலையம் இதைக் கவனத்தில் கொள்ளுமா?

ஆஷா-பிரியங்கா
கொழும்பு.5

### திரையரங்கம் மது அரங்கம்!

கொழும்பில் திரையரங்கம் ஒன்றின் அருகே உள்ள மதுபானச்சாலை அங்கு சினிமா பார்க்கச் செல்வோரை சிரமத்திற்குள்ளாக்கி வருகிறது. சிலர் பெண்களை கேலியும் செய்கிறார்கள். கவனிக்கப்படுமா?


வே. மாறன்
கொட்டாஞ்சேனை.

புகார் பெட்டிக்கு நீங்களும் எழுதலாம். உங்கள் முகவரி சரியாக இருக்க வேண்டும். முகவரி தெரியவேண்டாம் என்று விரும்பினால் நாம் அதனை வெளியிட மாட்டோம். புகார் பெட்டியில் வரும் விடயங்களோடு மாறுபட்ட கருத்து இருந்தால் அதனையும் எழுதலாம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே

## தலைநகர நிலவரம்


உடுகம்பொல

# பலமான இடத்தில் அடிக்கத் துடிக்கும் இனவாதிகள்! தமிழ்-முஸ்லிம் தலைவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

முன்னாள் டி.ஐ.ஜி. உடுகம்பொல இந்தியாவில் தலைமறைவு வாழ்க்கையை முடித்துக் கொண்டு தலைநகருக்குத் திரும்பி வந்துள்ளார்.

ஜே.வி.பி வன்செயல்கள் உச்சக் கட்டத்தில் இருந்த போது துணிச்சலான பொலிஸ் அதிகாரியாகப் பேசப்பட்டவர்.

அக்காலகட்டத்தில் உடுகம்பொலவின் நடவடிக்கைகள் குறித்து மனிதஉரிமை அமைப்புக்கள் சில பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததாகவும், அந்த நெருக்கடி காரணமாகவே அவர் கட்டாய ஓய்வில் வீட்டுக்கு அனுப்பப்பட்டதாகவும் பேசப்பட்டது.

தன்னை அரசு பலிக்கடாய் ஆக்கிவிட்டதாக கோபம் அடைந்த உடுகம்பொல அரசாங்கத்தின்மீது குற்றச்சாட்டுக்களை தொடுக்கலானார்.

எதிர்கட்சிகள் சிலவும் அவரைத் தமது அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்த முற்பட்டன.

அதில் இன்னொரு வேடிக்கை, உடுகம்பொல மீது குற்றம்சாட்டிய சில மனித உரிமை அமைப்புக்கள் உடுகம்பொலவின் குற்றச்சாட்டு அறிக்கைகளை பத்திரப்படுத்தி முக்கியத்துவம் கொடுத்தமையாகும்.

அரசு தேடியபோது உடுகம்பொல தலைமறைவானார்.

அவர் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றிருக்கலாம் என்று கருதப்பட்ட போதும், தான் உள்நாட்டிலேயே இருப்பது போன்ற தோற்றத்தினை பிரச்சார உத்திகள் மூலமாக அவர் ஏற்படுத்தினார்.

இப்போது இந்தியாவில் இருந்து பகிரங்கமாகவே நாடு திரும்பியுள்ளமை மூலமாக அவர் அங்கு தலைமறைவாக இருந்தமை தெளிவாகியுள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு படைகளின் கண்களில் மண்ணைத் தூவிக்கொண்டு மறைந்திருந்தவர், சாகசக்காரர் என்று கருதப்படக்கூடிய பெருமை இல்லாமல் போய்விட்டது.

என்றாலும், ,இங்கு தேடப்படும் ஒருவர், அதிலும் வெகு பிரபலமான ஒருவர் கடவுச்சீட்டுகளும் பறிமுதலான நிலையில் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றமையானது பாதுகாப்பு ஏற்பாடுகளில் உள்ள கோளாற்றைக் கோடிட்டுக் காட்டியுள்ளது.

திரும்பிவந்த உடுகம்பொல விமான நிலையத்தில் வைத்து ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் பாராட்டுத் தெரிவித்துள்ளார். நன்றி சொல்லி இருக்கிறார்.

அவரது அரச எதிர்ப்புப் பிரச்சாரம் அத்தோடு முடிந்து போனது என்றே கருத வேண்டும்.

அதிலே எதிர்க்கட்சிகள் சிலவற்றிற்கு வருத்தம் இருக்கக்கூடும்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாச காலத்தில் தேடப்பட்ட ஒருவர் பகிரங்கமாக திரும்பி வந்திருக்கிறார். பாதுகாப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இரு விடயங்கள் வெளிப்பட்டிருக்கிறது.

ஒன்று - இன்றைய அரசு எதிர்க்கட்சிகளின் கரங்களில் உள்ள அம்புகளை விவேகமாக தன்பக்கம் எடுத்துக் கொள்ளுகிறது.

மற்றொன்று- கடந்த காலத்தில் பொதுவான அதிருப்திகளை உருவாக்கிய விடயங்கள் என்று கருதப்படும் விடயங்களை சீர்படுத்தும் தனது விருப்பத்தை வெளிப்படுத்துகிறது.


இவற்றின் மூலமாக மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் வாக்குவங்கிகளைத் தக்கவைத்துக் கொள்ளும்போதே, அவர் மீது அதிருப்தி கொண்டிருந்த வாக்கு வங்கிகளையும் தன்பால் ஈர்க்க விரும்புகிறது.

அடுத்து வரும் பாராளுமன்ற- மற்றும் ஜனாதிபதி தேர்தல்களில் சந்தேகமற்ற பெரும்பான்மைப் பலத்தினைப் பெற அது உதவக் கூடும். அதுதான் கணக்கு.

•

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் சற்றுத்தாராளமாகவே நடந்து கொண்டுள்ளன. அதில் தலைநகரில் அரச தலைமையினர் மத்தியில் மகிழ்ச்சி நிலவுகிறது.

இலங்கையின் பிரச்சினையும்,


தீர்வை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அகதிகள்

உள்நாட்டுப்போரும் விரைவாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று மேற்கத்தைய நாடுகள் வலியுறுத்தியுள்ளதையும் அரசு புறக்கணித்து விட முடியாது.

கடந்த மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பாக தலைநகரில் நடைபெற்று இரு பெரும் அரசியற் படுகொலைகளும், தெற்கேயுள்ள தமிழர்கள் மத்தியில் பீதியைத் தோற்றுவித்தன.

ஆயினும் அரசாங்கம் தனது கடமையில் தவறவில்லை. அதேவேளையில் தமிழர்கள் பாதிக்கப்படாமல் இருந்தது ஏதோ யாரோ சிலரது கருணையைப் பொறுத்தது என்று சித்தரிக்க முற்படுவதும் தவறானதாகும்.

தெற்கே ஒரு கலவரம் நடந்திருக்குமானால் அதன் விளைவுகளையும்- சுமைகளையும் முழுநாடுமே சுமந்திருக்க வேண்டும்.

பிரிவினைக் கோரிக்கைக்கு மேலும் சாதகமான நிலை உருவாகியிருக்கும்.

கடந்த மாகாணசபைத் தேர்தலில் அரசாங்கத்திற்கு பாரிய ஆதரவை வழங்கிய மலையகத் தமிழ் பேசும் மக்கள் வேறுவிதமான தீர்ப்பினையே வழங்கியிருப்பார்கள்.

மலையக மக்கள் ஒரு பெரும் சக்தியாக உருவாகியுள்ள நிலையில் முன்னர் போல் சுலபமாக இனவாதசக்திகள் அங்கு தம் கைவரிசையைக் காட்டவும் முடியாது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும், உதவி விடயத்தில் யோசனை பண்ணவேண்டி ஏற்பட்டிருக்கும்.

தமிழர்கள் அநாதைகள் போலவும், அவர்களது பாதுகாப்பு யாரோ சிலரது கருணை போலவும் கருதப்படுவது இனியும் சரியாக இருக்காது.

மறுபுறம்- புலிகள் அமைப்பினரும் தெற்கே தமிழர்கள் பாதிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்த்து காரியங்கள் செய்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

எரியிற வீட்டில் பிடுங்குவது போன்ற கொள்கையை புலிகள் அமைப்பினர் கடைப்பிடிக்க முற்படுகின்றமை கண்டிக்கப்பட வேண்டியதே என்பது தெளிவு.

•

வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பிற்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு என்ற குண்டைத் தூக்கிப் போட்டுவிட்டு பாராளுமன்ற தெரிவுக் குழுத்தலைவர் திரு. மங்கள முனசிங்க வெளிநாட்டுக்கு பறந்துவிட்டார்.

## ரிப்போர்ட்

*நாரதர்*

பாராளுமன்ற தெரிவுக்குழு பந்துவீசி பதிலடி எப்படியிருக்கிறது என்று பரிசீலித்துப் பார்க்கிறது என்றே கருத வேண்டியிருக்கிறது.

அரசாங்கத்தில் ஒரு அங்கமாக இருக்கும் இ.தொ.கா தலைவர் திரு சௌமியமூர்த்தி தொண்டமான் முதற்கொண்டு ஏனைய தமிழ்க்கட்சிகள் உட்பட அரசுக்கு பாரிய ஆதரவு வழங்கும் ஈ.பி.டி.பி வரை பந்தை பலம் கொண்ட மட்டும் திருப்பியடித்துள்ளன.

முஸ்லீம் காங்கிரசும் வடக்கு-கிழக்கு பிரிவினையை ஏற்கவில்லை என்றே தெரிகிறது. அது ஒரு வரவேற்கத்தக்க நிலைப்பாடாகும்.

அரசாங்கத்தில் உள்ள முஸ்லீம் தலைவர்களும் தலைநகரில் கூடி ஆராய்ந்துள்ளனர். அரசியல் முதிர்ச்சியும், இனப் பிரச்சனையின் தாற்பரியத்தை புரிந்து கொண்டவருமான அமைச்சர் ஏ.சி.எஸ் ஹமீட் அவர்கள் அந்தக் கூட்டங்களுக்கு தலைமை ஏற்று வருகிறார்.

இனப்பிரச்சனையையும் சர்வஜன வாக்கெடுப்பையும் ஒன்றோடொன்று போட்டுக் குழப்பிக்கொள்ளக்கூடாது என்று அவர் கூறியதாக பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

ஆனால் இரண்டு பிரச்சனையும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவையே. வடக்கு-கிழக்கு ஒரே நிர்வாக அலகு என்ற அரசியல் அபிலாசையை சர்வஜன வாக்கெடுப்பு உடைத்துவிடுமானால் இனப் பிரச்சனைத்தீர்வு எட்டாக் கனியாகவே இருக்கும்.

தமிழ்-முஸ்லிம் சமூகங்களின் ஒற்றுமையானது புலிகளின் விபரீத விளையாட்டுக்களால் உடைத்துப் போடப்பட்டுள்ள நிலையிலும் முஸ்லிம் தலைவர்கள் சமூக ஒற்றுமை குறித்த கருத்துக்களையே

(மறுபக்கம் பார்க்க)

# அதிரடி அய்யாத்துரை



கொழும்பில் உள்ளதாம் சிறை ஒன்று. இரண்டெழுத்து என்ற சந்தேகத்தோடு அங்க போகும் தமிழர் இளைஞர்களுக்கு வித்தியாசமான வரவேற்பாம். தமிழ்க்குரல் கேட்டாலே வாசலில் வைத்தே நாலு வாங்கு வாங்கிவிட்டு உள்ளே அனுப்புகிறார்களாம். பொறுப்புள்ள யாராவது அதனைப் பொறுப்பான இடங்களின் காதுகளில் போட்டால் என்ன? இன்னுமொரு விசயம், உள்ளே இருப்பவர்களை சந்திக்கச் செல்லும் உறவினர்களையும் சந்தேகப் பார்வையால் மேய்கிறார்களாம். இதையும் சேர்த்து மேலே சொல்லுங்கோ.

முன்னாள் பெரியவரின் பாரியார் புதுக்கட்சி தொடங்கும் எண்ணம் கொண்டபோதும் நெருங்கிய வட்டாரங்கள் தடுத்துவிட்டதாம். இப்போதுள்ள மரியாதையே போதும்தானே. பிறகேன் இருப்பதையும் கெடுக்க வேண்டும். இல்லாதவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று நோக்கமிருந்தால் அதற்கு சமூக சேவை மூலம் வழிதேடலாம் தானே. என்ன நான் சொல்லுறது? அரசியல் வாரிசு முறை தோன்றுவதை பெரியவரே விரும்பவில்லை அல்லவோ!

இரண்டெழுத்து இயக்கம் நிபந்தனை கிபந்தனை இல்லாமல் தம்மிடமுள்ளவர்களை விடப் போவதாக செய்தி நிறுவனம் ஒன்று நியூஸ் ரிலீஸ் பண்ணிவிட ஒரே களேபாரம்தான் போங்கோ. நிபந்தனையில் இருந்து ஒரு சாண்கூட விலகவில்லையாம் இரண்டெழுத்துக்காரர்.

எங்கட சனமெல்லாம் பாதிக்குமேல இப்ப வெளிநாட்டில் இருக்கிறபடியால் அங்கயும் ஒரே முசுபாத்திதான். அதிலையும் பாருங்கோ உந்த இயக்கங்களில இருந்து கழன்டு போனவர்கள் அங்கையும் குழுக்கட்டிக்கொண்டு ரோட்டிலே இறங்க, வெள்ளைக்காரன் பதுங்கு குழி தேட வேண்டிய நிலையாம்.

கொழும்பிலே வீட்டு வாடகை விண்ணுக்கு உயருது என்றால் தமிழ்சனத்தில ஒரு பகுதியினர் வெளிநாட்டுக் காசை வீசி கேட்கிற வாடகையைக் குடுக்கிறதும் ஒரு காரணம்தானாம். அங்க குளிரிலையும் அதிலையும் இதிலையும் கிடந்து அனுப்புற காசு. கொஞ்சம் பார்த்துச் செலவழிச்சால் என்ன? அதுமட்டுமோ சிலர் போனை கையில் எடுத்தால் கீழே வைக்கிறதையே மறந்து நேரில் பேசும் சுவாரசியத்தோடு ஒரு பிடி பிடிக்க பில் தொகை ஏறுகிறது. மாடு கன்று போட்ட கதையெல்லாம் பேசி முடிக்க அந்தப் பக்கத்தில் அந்த மாதச் சம்பளம் காலி.

இடைக்கிடையே தும்மல் வருமளவுக்கு, அரங்கில் ஓடமுடியாமல் பெட்டிக்குள் அடங்கிச் சுருண்ட படங்களையே நம்நாட்டு தொலைக்காட்சியில் காணும்வாய்ப்புக் கிட்டுவதுண்டு. அப்போதெல்லாம் அதில் நடித்த நட்சத்திரங்களும் தயாரித்த தயாரிப்பாளருமே மறந்து போன படங்களை நினைவு வைத்து வாங்கிவரும் நம்மூர் தொலைக்காட்சி நிலையத்தாரின் ஞாபகசக்தியை பாராட்டாமல் இருக்க முடிவதில்லை. என்றபோதும் கடந்த ஞாயிறு அற்புதமான தமிழ்படம் ஒன்றை ரூபவாஹினி ஒளிபரப்பிவிட்டது. சலங்கை ஒலி. இந்தக் கமலஹாசன் தம்பி இருக்குதே அற்புதமான நடிகன். எங்கட சிவாஜிக்கு பிறகு சத்தியமாய் கமல்தான். அதில சில டங்பாங்குத்து டப்பா படங்களிலை கமலைப் போட்டுபாழடித்து விடுகிறார்கள். சிவாஜிக்கும் உதுதானே நடந்தது. 16 வயது பிள்ளை அந்த சிறீதேவியோட சிவாஜியை கட்டிப்பிடிச்சு ஆடவெக்க ஒரே கூத்துத்தான் போங்கோ. தரம் அறிந்து பாத்திரம் கொடுத்தால் கமல் ஒஸ்கார் விருதுகளை அப்பிடியே அள்ளிக்கொண்டு வந்து சேர்ப்பார் பாருங்கோ.

கனநாளுக்குப் பிறகு சித்தர் பாடலை புரட்டினேன் பாருங்கோ. என்னமாதிரி அந்தக்காலத்திலையே சொல்லியிருக்கினம். சித்தர்களுக்கு யாவையும் தெரியும். ஆடி அடங்கிய மனுசர். ஆட்டமென்றா சும்மா ஆட்டமில்ல. ஓ.. ஆயிரத்து எட்டு இதழ் மீது அமர்ந்த ஆட்டம்.

"மனமென்னும் மாடு அடங்கில் தாண்டவக்கோனே- முத்தி
வாய்த்ததென்று எண்ணேடா தாண்டவக்கோனே.
சினமென்னும் பாம்பு இறந்தால் தாண்டவக்கோனே யாவுஞ்
சித்தியென்றே நினையேடா தாண்டவக் கோனே"

ச்...சா... என் கருத்துப் பாத்தியளோ. கண்ணதாசனே சித்தர்பாட்டை அங்கங்க டச் பண்ணியிருக்கிறார் தெரியுமோ! சொன்னா நம்ப மாட்டியள். பாரதியாரே கொப்பி அடிச்சிருக்கிறார். பண்டிதர்கள் வேட்டியை மடிச்சுக் கட்டினாக் கட்டட்டும்.

"பூட்டை திறப்பதும் கையாலே- மனப் பூட்டைத் திறப்பதும் கையாலே."

-இது வாலைச் சித்தர்-

" பூட்டை திறப்பது கையாலே- நல்ல மனம் திறப்பது மதியாலே!

இது பாரதியார்-

பண்டிதர்கள் கோவிச்சா நான் என்ன செய்யிறது.

அதுக்காக அங்க இங்க எடுத்து தங்கட ஒரிஜினல் கட்டுரை என்று பேர் போடுற விளையாட்டு சரி என்று அர்த்தமில்லை கண்டியளோ.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

வெளியிட்டு வருகிறார்கள்.

மறுபுறத்தில்- முஸ்லிம்கள் தமது பாதுகாப்பு விடயங்களில் உத்தரவாதமான நிலை ஒன்றினை எதிர்பார்ப்பதையும் தவறு என்று சொல்லமுடியாது.

நூற்றுக்கணக்கான முஸ்லீம்கள் தமிழர் அமைப்பொன்றால் வெட்டிச்சாய்க்கப்பட்ட பின்னரும் அந்தச் சமூகம் தனது எதிர்காலம் குறித்து கவலை இன்றி இருக்க முடியுமா?

சிங்களவர்களின் கருணையால் தமிழர்களோ, தமிழர்களின் கருணையால் முஸ்லிம்களோ வாழநினைத்தால் அது கௌரவமான வாழ்க்கை முறையல்ல. மாறாக அடிமை நிலையாகும்.

சகல இனமக்களும்- சமூகங்களும் சமவாய்ப்புக்களையும், சம உரிமைகளையும் கொண்டிருக்கக் கூடிய சட்டபூர்வமான அமைப்பே இன்றைய தேவையாகும்.

அந்த அமைப்பு பலமானதாக இருக்க வேண்டுமானால், வடக்கு கிழக்கு நிரந்தரமாக இணைந்திருக்க வேண்டும் என்பதே பரவலான- பலத்த அபிலாசையாகும்.

வடக்கு- கிழக்கு ஒன்றாக இருக்கக் கூடாது என்று இனவாதிகள் ஒற்றைக்காலில் நிற்கிறார்கள்.

இணைந்திருந்தால் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பலம் அதிகரிக்கும் என்றுதான் அவர்கள் அவசரம் காட்டுகிறார்கள். பிரித்தே ஆகவேண்டும் என்று பிடிவாதம் காட்டுகிறார்கள்.

ஆக, தமிழ்பேசும் மக்களுக்கு எது அரசியல் பலம் என்று அறிந்து அங்கே அடிக்க இனவாதிகள் துடிக்கும் போது தமிழ் பேசும் மக்களும், அவர்களது தலைவர்களும் தமது பலத்தை பாதுகாக்க ஒன்றுபட வேண்டும். தமிழை தாய்மொழியாகக் கொண்ட இரு சமூகங்களின் தலைமைகளும் தமது வரலாற்றுப் பொறுப்பை மறந்துவிடக்கூடாது.

●

வடக்கு-கிழக்கு பகுதிகளுக்குச் சென்று -நிலைமைகளை கண்டறிந்து கொண்டு வெளிநாட்டு நல்லெண்ண தூதுக்குழு திரும்பியிருக்கிறது.

தலைநகரில் ஒரு பத்திரிகையாளர் மாநாடு நடத்தி தாம் கண்டவற்றைக் கூறியிருக்கிறது. வடக்கு-கிழக்கு மக்கள் சமாதானம் மீது கொண்டுள்ள பிடிப்பையும் தூதுக்குழுவினர் அறிந்து வந்துள்ளனர்.

வடக்கே தூதுக்குழுவினர் புலிகளால் நன்கு வரவேற்கப்பட்டனர். நன்கு உபசரிக்கப் பட்டனர்.

புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் தமது தரப்பு நியாயங்களை எடுத்துச் சொல்லி அனுப்பியுள்ளார்.

ஏற்கனவே யாழ் சென்ற அங்கிலிக்கன் ஆயர் குழுவினரைச் சந்தித்த பிரபாகரன் வெளிநாட்டுத் தூதுக்குழுவினரைச் சந்திக்க முன்வரவில்லை.

சந்தித்திருந்தால் ஏற்பட்டிருக்கக் கூடிய பிரச்சார ஆதாயத்தை அவர் இழந்துவிட்டார் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது.

அது ஒரு புறம் இருக்க, வடக்கில் இருக்கும் மக்களும் சமாதானத்தினை எதிர்ப்பார்த்தே காத்திருக்கின்றனர்.

தினமும் கேட்கும் மரண ஓலங்கள். வீட்டுக்குள் பாதி நாளும், பங்கருக்குள் பாதிநாளும் வாழவேண்டிய அவலம்.

அரைவயிற்றோடும் , கால் வயிற்றோடும் பட்டினியோடு நடத்தும் போராட்டம்.

இயக்கத்திற்கு ஆள் சேர்க்கும் தீவிரத்தில் இருந்து தம்பிள்ளைகளைப் பத்திரப் படுத்தும் முயற்சிகள்.

இவ்வாறு மக்களின் வாழ்க்கை நரகமாகியிருக்கிறது.

"அம்மா நுரைதள்ளிவரும் என் குதிரைக்குத் தீனி கொடு. என் தோழர்களுக்கு உணவு கொடு. என்னத் தேடாதே" என்கின்ற உணர்ச்சி மிகு வரிகளுக்கு இப்போது மரியாதை கிடையாது.

குறிக்கோளற்ற யுத்தம். சொந்த மக்கள் மீதே திருப்பப்படும் ஆயுதங்கள், மக்களின் முதுகுகளில் சுமைகளைத் தூக்கிப்போட்டுக் கொண்டே, மக்களது அர்ப்பணிப்புக்கள் போதாது என்று குறைசொல்லுவது இவை எல்லாமே போதும் என்றாகிவிட்டது.

புலிகளின் மீது மட்டுமல்ல சகல ஆயுதம் தாங்கிய அமைப்புக்கள் மீதும் மக்கள் வெறுப்புக் கொண்டுள்ளனர்.

ஆயுதங்கள் என்றால் கெட்ட வார்த்தை என்று கருதப் படுமளவுக்கு அவை விளைவித்த துயரங்கள் அதிகம்.

என்று தணியும் இந்த யுத்தம் என்றெமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும் என்றுதான் தமிழ் பேசும் மக்கள் வேதனைப் பெருமூச்சு விடுகின்றனர்.

யுத்தம் களைத்துப் போகச் செய்திருக்கிறது என்பதற்காக அரைகுறைத் தீர்வினை தமிழ் பேசும் மக்களின் தலையில் கட்டிவிடலாம் என்று யாராவது கருதினால் அது தவறான கணிப்பாகவே இருக்கும்.

இத்தனை இழப்புக்குப் பின்னரும் அரைகுறைத் தீர்வுதான் கிடைக்கிறது என்றால் அதைவிட இறுதிவரை பார்த்து விடலாம் என்ற கருத்தே மேலோங்கும்.

யுத்தம் வேண்டாம் என்று கூறும் மக்கள் கௌரவமான சமாதானத்தினையே நாடி நிற்கின்றனர்.

நியாயமான அரசியல் தீர்வு மூலமே கௌரவமான சமாதானத்தினை ஏற்படுத்த முடியும்.

# பிலிப்பைன்சில் காட்சி மாறுகிறது ஜனாதிபதி ஆட்சி முறையில் மாற்றம்

பிலிப்பைன்ஸ் நாட்டில் இன்றுள்ள ஆட்சி முறை மாற்றியமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவிருக்கின்றன.

அமெரிக்க குடியேற்ற நாடாக இருந்த பிலிப்பைன்ஸ் 1936ல் அமெரிக்க முறை ஆட்சியையே இங்கு ஏற்றது. இதன்படி நாட்டின் ஜனாதிபதியே நிறைவேற்று அதிகாரம் கொண்டவராவார். மாவட்ட ரீதியாக காங்கிரஸ் உறுப்பினர்கள் தெரிவு செய்யப் படுவர். தேசிய மட்டத்தில் செனட்டர்கள் தெரிவு செய்யப்பட்டு இருசபைகளைக் கொண்ட ஆட்சியே நடைபெற்று வந்தது. தொழில் ரீதியில் மேம்பாடடைந்த 7 நாடுகளில் ஆக, அமெரிக்காவில் மட்டுமே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை அமுலில் உள்ளது. முன்னாள் ஜனாதிபதியாகவிருந்த பேடினண்ட் மாக்கோஸ் தனது பதவிக் காலத்தை சட்ட விரோதமாக நீடிக்க வேண்டும் என்பதற்காக 1972ல் மார்ஷல் சட்டத்தைக் கொண்டு வந்தார். தேசிய சபைக்கான தேர்தல்களை 1978லும் 1984லும் நடத்தினாலும் தனது ஜனாதிபதிப் பதவியை விட்டுவிடாமல் பிடித்தபிடியாக தன்னிடமே தங்க வைத்துக் கொண்டார்.

மார்ஷல் சட்டம் அமுலில் இருக்கும்போதே பாராளுமன்ற முறையிலான சபையை அமைப்பதற்கான ஏற்பாடுகளை அவர் பிரகடனப்படுத்தினார்.

மாக்கோசின் பின் 1986ல் ஜனாதிபதி பதவியேற்ற கொறஸோன் அக்கினோ ஜனாதிபதி ஆட்சியைத் தொடர்ந்தாலும் இருசபை ஆட்சி முறைக்கும் வழிவகுத்தார்.

கடந்த மாதம் பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி காங்கிரஸ் உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்தப்படவிருக்கிறது. நாட்டின் ஆட்சி முறை எவ்வாறிருக்க வேண்டும் என்பதற்கான மாற்றங்களை அரசியல் நிர்ணய சபை தீர்மானிக்கும். இன்றுள்ள சபையில் 198 காங்கிரஸ் உறுப்பினரும் 24 செனட்டர்களும் உள்ளனர். புதிய மாற்றங்களை விரும்புவோரும் உள்ளனர். அதனைவிட நாட்டில் பல முக்கியமான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டாமல் இருக்கும்போது அரசியல் மறையை மாற்றுவதில் அவசரம் காட்ட வேண்டிய அவசியம் என்ன என்று பலர் கேட்கின்றனர். அரசியல் நிர்ணய சபை உருவாகுமானால், ஜனாதிபதிக்கான தேர்தல் குறிப்பிட்ட காலத்தில் நடைபெறப் போவதில்லை. இதனால் இப்போதுள்ள ஜனாதிபதி ராமோஸ் மேலும் பல ஆண்டுகள் அப்பதவியில் இருப்பதற்கான ஒரு தந்திரம் தான் புதிய மாற்றம் பற்றிய பிரஸ்தாபம் என்று சிலர் குற்றம் சாட்டு கின்றனர்.

மக்கள் சபையான காங்கிரசும் செனட்டும் அரசாங்க முறைகளை மாற்றியமைப்பதற்காக எடுத்துக் கொண்டுள்ள தீர்மானத்தின்படி பொலிஸ்துறை மற்றும் நீதித்துறையிலும் தேர்தல் முறைகளிலும் பலமாற்றங்களையும் கொண்டுவர முடியும். நாலில் மூன்று பெரும்பான்மை கிடைக்கும்பட்சத்தில் அடுத்த வருடம் மக்களின் ஒப்புதலுக்காக திருத்தங்கள் முன்வைக்கப்படும். 19995ல் நடைபெறவேண்டிய பொதுத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு, இன்று பதவி வகிக்கும் செனட்டர்களும் காங்கிரஸ் உறுப்பினர்களும் தொடர்ந்து மேலும் 3 வருடங்கள் பதவியில் நீடிக்க முடியும்.

பாராளுமன்ற ஆட்சிமுறை அமுலுக்கு வருமானால் ஊழல்களை பிடுங்கப்பட ஏதுவாகும் என்று பெரும்பாலானோர் கருதுகின்றனர். தேர்தலில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு ஒரு வேட்பாளர் 15,000டொலர்வரை செலவு. செய்தாக வேண்டும். ஆனால் இன்றுள்ள ஆட்சி முறையில் ஒரு செனட்டர் பதவிக்கு வேட்பாளராகத் தோற்றுபவர் 3 கோடி 70 இலட்சம் டொலர் வரை செலவு செய்ய வேண்டியும் இருக்கலாம். இதேவேளை ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடுபவர் இதைவிடப் பன்மடங்கு அதிகம் பணம் செலவிட வேண்டியிருக்கும். இவ்வளவு பெருந் தொகை பணம்செலவிடும் ஒருவர் ஊழலில் ஈடுபடாமல் வேறு எவ்வகையில்தான் செலவிட்ட தொகையை மீளப்பெற முடியும் என்று காங்கிரஸ் சபையின் முதல்வர் ஜோஸ் டி வெனியா வினவுகிறார்.

செலவழித்த பணத்தை எடுக்கத்தான் அரசியல்வாதிகள் ஊழலில் குதிக்கிறார்கள் என்று ஒப்புக் கொள்ளுகிறார்.

## அணுமின் உற்பத்தி வேண்டாம் என்கிறது மக்கள் சக்தி


தைவானில் மற்றுமொரு அணுமின்சக்தி உற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்கு அங்கு பரவலான எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. தைப்போ நகருக்கு அருகில் அணுமின் நிலையத்தை நிறுவுவதற்கு கண்டனம் தெரிவித்து நகரில் பல ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. ஏற்கனவே நிறுவப்பட்ட அணுமின் நிலையங்களை சீராக நிர்வகிக்க முடியாமல் இருக்கும் போது புதிதாக ஒன்று தேவைதானா என்கிறார்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள். நியாயமான கேள்வி தான்.

## நெருக்கமாக மிக நெருக்கமாக! தேன்நிலவின் அறிகுறிகள்!!

சீனப் புரட்சியைத் தொடர்ந்து கடந்த 44 வருடங்களாக சீனாவும், தைவானும் எலியும், பூனையுமாக விளங்கி வந்தன. இப்போது தேன் நிலவு ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் தெரியத் தொடங்கி விட்டன. அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற பேச்சுவர்த்தையில் இருநாட்டு அரசியல் பிரதிநிதிகளும் கைகுலுக்கிக் கொண்டனர்.

## உலக ரவுண்டப்

## முடிவெட்டக் கூலி என்ன?



முடிவெட்டிக்கொள்ள ஆகும் செலவு பற்றி இப்போது அமெரிக்காவில் எழுந்த சர்ச்சை முன்னாள் அதிபர் புஷ்ஷையும் விட்டு வைக்கவில்லை. தெற்கு பிரெஞ்சு பகுதியில் உள்ள சேன்ஸ் நகருக்கு ஒரு முக்கிய விழாவில் பங்கேற்க வந்தபோது அவரை நிருபர்கள் சூழ்ந்து கொண்டனர். " நீங்கள் முடிவெட்டிக்கொள்ள ஆகும் செலவு எவ்வளவு?" எனக் கேட்டனர். பதிலாக புஷ், நான் அதிபராக இருந்தபோது 12 டொலர் தான் செலவானது என்றார். பின்பு எதற்காக இந்தக் கேள்வி என்று கேட்ட அவர், இப்போதும் எனக்கு முடிவெட்டிக் கொள்ள 12 டொலர் தான் செலவு எனக் கூறினார்.

சமீபத்தில் கிறிஸ்டோபர் என்பவர் அதிபர் கிளின்டனுக்கு முடிவெட்ட எடுத்துக்கொண்ட நேரம், அதனால் லொஸ் ஏஞ்சல்ஸ் விமான நிலையத்தில் ஏற்பட்ட பரபரப்பு, இந்த நடைமுறைக்கு மக்கள் தெரிவித்த எதிர்ப்பு ஆகியவைதான் அப்படி ஒரு கேள்வியை புஷ்ஷிடம் கேட்க வைத்திருக்கிறது.

## பொஸ்னியாவில் யுத்தம் பிணங்களை அடுக்கிக் கொண்டிருக்கிறது



# வடக்கு-கிழக்கு விவகாரம்: அரைகுறைத் தீர்வுக்கு வழிவகுக்கும் சர்வஜன வாக்கெடுப்பு!

அலசுவது—இராஜதந்திரி

## ஏக காலத்தில் — சமாதானப் பேச்சு இராணுவ நடவடிக்கை தேர்தல் முஸ்தீபு!









வடக்கு-கிழக்கு விவகாரத்தைப் பொறுத்தவரை சமாதானப் பேச்சு, இராணுவ நடவடிக்கை, மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு ஆகிய மூன்று அம்சங்களையும் ஏக காலத்தில் பிரஸ்தாபிக்கும் ஒரு சூழ்நிலை தற்போது காணப்படுகின்றது.

வடக்கே சர்வதேச சமாதானக் குழுவொன்று பயணஞ்செய்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினருடன் வடக்கு-கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவது குறித்து அண்மையில் ஆராய்ந்திருந்தது.

இதேவேளை கிழக்கில் இராணுவத்தினர் திடீரென நடவடிக்கையொன்றை மேற்கொண்டு புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை விடுவிக்கும் வகையில் தாக்குதல்களையும் அண்மையில் மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் கொழும்பில் வடக்கு-கிழக்கு இணைப்பைத் தீர்மானிப்பது குறித்து கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது பற்றி அரசாங்க உயர்மட்டத்தில் ஆராயப்பட்டுவருகின்றது. பாராளுமன்றத் தெரிவுக்குழு கடந்த 10ம் திகதி கூடியிருந்த போது, வடக்கும்-கிழக்கும் இணைந்திருப்பது பற்றி கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று அறிவித்திருந்தது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு வடக்கு-கிழக்குப் பிரச்சனை பற்றி இதுவரை எந்தவொரு தீர்க்கமான முடிவையும் எட்டாத நிலையில் காணப்படுகின்றது. ஆனால் வடக்கு-கிழக்கின் இணைப்பைத் தீர்மானிப்பது குறித்த சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது பற்றி மட்டும் 'திடுத்திப்'பென அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

இத்திடீர் அறிவிப்பையடுத்து, கிழக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் தலைமைப் பீடமும், தேர்தல் ஒன்றை கிழக்கில் நடத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை விரைவில் ஏற்படுத்த முடியுமென அறிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்புப் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து, கொழும்பில் உள்ள தமிழ்க்கட்சிகள் ஒரே குரலில், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

வடக்கையும் - கிழக்கையும் இணைப்பது குறித்து மக்களின் விருப்பத்தை அறிவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு, கிழக்கில் மட்டுமே நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்தே தமிழ்க்கட்சிகள் தமது எதிர்ப்பை அம்முடிவு குறித்து வெளியிட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு இணைப்பு என்ற விடயமே இலங்கை இனப்பிரச்சனையின் அடிப்படை அம்சமாக விளங்குகின்றது.

இந்த இணைப்பின் மூலமே வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்த முடியுமென்பது அரசியல் வட்டாரங்களில் இன்று உணரப்பட்டு வருகின்றது.

ஆனால் வடக்கு-கிழக்கு இணைப்பு விவகாரம் குறித்து தகுந்த வகையில் பரிசீலனை செய்யாது, அந்த இணைப்பை வலியுறுத்தி நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் உட்பட ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுடனும் ஒரு உடன்பாட்டுக்கு வராத நிலையில், வெறுமனே சர்வஜன வாக்கெடுப்பை மட்டும் நடத்தப் பாராளுமன்றத் தெரிவுக்குழு சிபார்சு செய்திருப்பது, ஓர் அரைகுறைத் தீர்பை பலவந்தமாக அடைய எத்தனிப்பது போன்றே காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்கு இணைப்பு என்ற விடயம் இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொன்றாகக் காணப்படுகின்றது.

ஆயினும் நிரந்தர இணைப்புக்குறித்து சர்வஜன வாக்கெடுப்பு வடக்கு-கிழக்கில் நடத்தப்பட வேண்டுமெனவும் அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்த நிலையில் ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்துதல்; பின்னர் அந்த நிர்வாக இயந்திரம் முழுமையாகச் செயல்படும் நிலையிலேயே வடக்கையும், கிழக்கையும் இணைப்பது பற்றிய சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது என்ற அடிப்படையிலேயே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது வடக்கு-கிழக்கு என்ற தற்காலிக இணைப்பே காத்திரமடையாத நிலையில், அம்மாகாணங்கள் ஒன்றிணைந்த ஒரு நிர்வாக அமைப்புக்கூட வெற்றிகரமாகச் செயல்படாத நிலையில், சர்வஜன வாக்கெடுப்பை நடத்தத் திட்டம் போடுவது, 'எரிகிற வீட்டில் பிடுங்குவது ஆதாயம்' என்ற பழமொழியை நிரூபிப்பதாகவே காணப்படுகின்றது.

இதேவேளை தமிழ் அரசியல் கட்சிகள் வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்த தமது நிலைப்பாட்டினை வெறுமனே மாற்றுக் கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகளின் போது மட்டுமே வெளியிட்டு வருவதுடன் நின்று விடுகின்றனவே தவிர, தென்னிலங்கையில் வடக்கு-கிழக்கு இணைப்புக்குறித்து தமிழ்க்கட்சிகள் பொதுமக்களிடையே தகுந்த விளக்கத்தைக் கொடுக்கத் தவறிவருவதையே அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு இணைப்பு என்ற விடயம் பிரிவினையுடன் சம்பந்தப்பட்ட தொன்றே என்ற கருத்தையே சாதாரண சிங்கள மக்கள் கொண்டிருப்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

எனவே சாதாரண சிங்கள மக்கள் வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்து தகுந்த புரிந்துணர்வை எட்டாத வரை இந்த இணைப்பு விவகாரம் ஒரு சர்ச்சையாகவே தொடர்ந்து கொண்டிருக்கும் எனக் கருத முடியும்.

இன்று உலக அரங்கில் இடம் பெற்று வரும் மாற்றங்கள், கூடுதல் ஜனநாயக உரிமைகள், மற்றும் இனங்களின் தனித்துவம் என்பனவற்றைப் பேணுவதை மையமாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

முன்பு சோவியத் யூனியன் என்ற அமைப்பில் இருந்த பதினைந்து மாநிலங்கள் கூட இன்று வெவ்வேறாகத் தமது தனித்துவத்தைப் பேணும்வகையில் கூடுதல் அதிகாரங்களைக் கொண்ட சுதந்திர மாநிலங்களாக விளங்குகின்றன.

இந்த மாநிலங்கள் தத்தமது மக்களின் தனித்துவம், ஜனநாயக உரிமைகள், மற்றும் சமூக, அரசியல், பொருளாதார விடயங்களைப் பேணுவதில் கூடுதல் அதிகாரங்களைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

ஆயினும் இந்த மாநிலங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து பொது நலவாய சுதந்திர மாநிலங்கள் (Commonwealth Independent States-CIS) என்ற அமைப்பின் கீழ் ஒற்றுமைப்பட்டவையாக விளங்குகின்றன.

எனவே இத்தகைய பாணியிலேயே இன்று வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும் ஒரு நிர்வாக அமைப்பு இலங்கையின் ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் ஏற்படாத நிலையில் ஏற்படுவது இன்றியமையாததாகின்றது.

ஏனெனில் வடக்கு-கிழக்கில் தமிழ் பேசும் மக்களே பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றனர். இம்மக்கள் தமது தனித்துவத்தைப் பேணி தாம் சார்ந்த பிரேதசத்தின் மூலவளங்களைப் பாதுகாத்து, தமது பாரம்பரியங்களையும் பேண வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

இதற்காகவே இப்பிரதேச மக்கள் கடந்த பல தசாப்தங்களாக அரசியல் ரீதியாகவும், பின்னர் ஆயுதமேந்திய நிலையிலும் போராட்டங்களை நடத்திவருபவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

வடக்கு-கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்க ஆயுதமேந்திய போராட்டமே ஒரே வழி என்று பல்வேறு தமிழ்க்குழுக்களும் ஆயுதப் போராட்டத்தில் குதித்திருந்த வேளை, அக்குழுக்களுக்கு அரசியல் ரீதியாக நம்பிக்கையை உண்டு பண்ணக் கூடிய வகையிலே இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகியிருந்தது.

தொடர்ந்து இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட மாகாணசபை நிர்வாக முறையும் வடக்கு கிழக்கில் அமுல் செய்யப்பட்டது. ஆயினும் இந்த மாகாண சபை நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ள முன்வராத தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர், வடக்கு, கிழக்கில் மேற்படி நிர்வாகம் இடம் பெறுவதை நிராகரித்திருந்தனர்.

இதன் மூலம் வடக்கு-கிழக்கில் தமது எதிர்பார்ப்புகளைத் திருப்திப்படுத்தாத ஒரு நிர்வாக அமைப்பை வெற்றிகரமாக நடத்தமுடியாது என்பதனையும் புலிகள் நிரூபித்திருந்தனர்.

இந்நிலையில் வடக்கு-கிழக்கில் ஆயுதமேந்திய ஒரு பிரதான தீவிரவாத இயக்கமாக இயங்கி வரும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை, இராணுவ ரீதியாக எதிர்கொண்டுள்ள அரசாங்கம், மறுபுறத்தில் கொழும்பில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளுடன் அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, தற்போது வடக்கு-கிழக்கு மாகாண இணைப்புக்குறித்த சர்வஜன வாக்கெடுப்பையும் நடத்துவது பற்றி அறிவித்துள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு ஓர் அரசியல் தீர்வே இறுதித் தீர்வாக அமைய முடியுமென்பது அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். ஆயினும் அத்தீர்வு வடக்கு-கிழக்கில் வாழுகின்ற மக்களையே பெரிதும் திருப்திப்படுத்துவதாக அமைய வேண்டியது இன்றியமையாததாகின்றது.

வடக்கு-கிழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்டு வரும் ஆயுதப்போராட்டம் பாரிய சேதங்களுக்கு இடமளித்துள்ளது. அரசாங்கமும் புலிகளும் நடத்திவரும் யுத்தம் காரணமாக பாரிய சமூக, பொருளாதார நெருக்கடிகள் வடக்கு-கிழக்கில் தோன்றியுள்ளன.

எனவே வடக்கு - கிழக்கு விவகாரத்துக்கு நிரந்தரமாக ஒரு தீர்வைக்காண அரசு விரும்பினால், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினருடனும் நேரடிப் பேச்சுக்களை அரச தரப்பினர் ஆரம்பிக்க வேண்டியது மிகவும் அத்தியாவசியமாகின்றது.

ஏனெனில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரும் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்குரிய தீர்வு யோசனைகளைத் தாம் கொண்டிருப்பதன் காரணமாகவே தம்மைச் சந்திக்க வரும் சமாதானக் குழுக்களிடம் தாம் பேச்சுக்குத் தயாராக இருப்பதாகக் கூறி வருகின்றனர்.

எனவே புலிகள் எதைப் பேசத் தயாராக இருக்கிறார்கள்? எத்தகைய தீர்வு யோசனைகளைக் கொண்டுள்ளார்கள்? என்பதை அறிய அரசாங்கமும் முன்வர வேண்டும்.

மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இறப்பதற்கு முன்னர் தாம் ஆற்றிய பாராளுமன்ற உரையிலும் கூட புலிகள் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றி அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டிருந்தார்.

புதிய ஜனாதிபதி டி.பி விஜேதுங்கவும் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதில் ஆர்வங்காட்டி அதற்கான செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றார்.


இந்நிலையில் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கென அமைக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழு, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடனும் பேச்சுக்களை நடத்தி அவர்களது நிலைப்பாட்டினையும் அறிய முன்வரவேண்டும்.

எனவே ஒரு தகுந்த அரசியல் ரீதியிலான சமரசத்திட்டத்தை உருவாக்காது, சர்வஜன வாக்கெடுப்பு என்று கூறி தேர்தல் நடவடிக்கைகளில் குதிப்பது, வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கான தீர்வை ஒரு 'குறைப்பிரசவமாக' வெளிக்கொண்டு வரும் முயற்சியாகவே அமையுமெனக் கொள்ளலாம். ●

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# லேடீஸ் ஸ்பெசல்

## முகத்திற்கு அழகு முக ஒப்பனை!




ஹேமா பர்வானி ஒரு ரெலிபோன் ஒப்பரேட்டர்.

இனிமை கலந்த- தங்கு தடையற்ற சொற் பிரயோக நடை. மறுமுனையில் செவிக்குள் தேன் சொரியும்.

ஆனால் ஒரு குறை..

### மேக்- அப் நியூஸ்

அவருக்கு குரல்வளத்திற்கேற்ற தலை அலங்காரம் இருக்கவில்லை.

தகுந்த ஆலோசனையோடு அழகு நிலையம் ஒன்றின் உதவியால் தலை அலங்காரத்தை மாற்றிக் கொண்டார். மெருகூட்டப்பட்ட தலை அலங்காரம் முகத்தோற்றத்தையும் எடுப்பாக்கியது.


முக ஒப்பனையும் செய்து கொண்டார்.

முகத்துக்கு கொஞ்சம் அடிப்படைக் களிம்பு தடவப்பட்டது. பவுடர் சிறிதளவு பூசப்பட்டது. கன்ன உப்பல்களுக்கு கொஞ்சம் சிவப்பு வர்ணம் கொடுக்கப்பட்டது. கண்ணின் கீழ் புருவத்திற்கு பழுப்பு நிற வரி தீட்டப்பட்டது. பின்னர் சற்று வெண்கல வர்ணமும்- தங்க நிறமும் கலந்த நிழல் வரை தீட்டப்பட்டது. கண்களுக்கு கீழே மெல்லிய கறுப்புக் கோடு- அதே போல இமை முடிகளுக்கும் கறுப்புமை தடவப்பட்டது.

அத்தோடு அவர் அன்று அணிந்திருந்த உடைக்கு ஏற்றாற்போல் வர்ண உதட்டுச் சாயமும் பூசப்பட்டது.

இப்போது ஹேமா பர்வானியின் தோற்றம் புதுப்பொலிவு பெற்றுவிட்டது.







## இந்தப் பயிற்சியை செய்யுங்கள்



நாள் முழுக்க அலுவலகத்தில்- பாடசாலையில் மேசையில் இருந்து கடமையாற்றிவிட்டு வீடு செல்கிறோம். முதுகு வலிக்கும். இனிக் கவலை வேண்டாம். இது ஒரு சிறு பயிற்சி. உங்கள் முதுகை இதமாக்கும்.

1. கால்களை நீட்டி உட்காருங்கள். முழங்கை மூட்டு பக்கவாட்டில் பார்த்திருக்க கைகளைத் தரையில் ஊன்றுங்கள். தலையை கீழே சாய்த்து முதுகைச் சுற்றுங்கள்.
2. முதுகைச் சுற்றியபடி, மூச்சை வெளியே விட்டபடி மெல்ல குனியுங்கள். பின் அப்படியே மூச்சை இழுத்தபடி தலை நிமிருங்கள்.
3. இப்படி மேலும்-கீழும் தலையை எட்டுத் தடவை அசையுங்கள். எழுந்து நில்லுங்கள். முதுகைச் சுற்றியபடி மூச்சை இழுத்தும் விட்டும் குனிந்து நிமிர்தலை மூன்று தடவை செய்யுங்கள்.

### செலவு குறைவு- ஆனால் அழகு

ஒரேஞ்சு அல்லது எலுமிச்சை பழத் தோலை உலர்த்தி பௌடராக்கிக் கொள்ளவும் ஈரமான முகத்தில் அதைப் பூசவும். உலர்ந்த பின்னர் கழுவவும். எண்ணெய் பசையுள்ள முகத்துக்கு இது ஏற்றது.

செலவே இல்லாமல், சிரமும் இல்லாமல் முகத்தை மிளிரச் செய்யலாம். தண்ணீர் கொண்டு முகத்தை அடித்துக் கழுவுங்கள். ஐஸ் கட்டியை முகம் பூராவும் நழுவ விடுங்கள் அல்லது குளிர்ந்த நீரால் முகத்தை கழுவுங்கள் மாறுதலை கண்ணாடியில் பாருங்கள்.

# கார் ஓட்டும் வீராங்கனைக்கு பரத நாட்டியம் மீது காதல்

இந்தியாவின் ஹிமாலயப் பிரதேசத்தில் 1989ல் கார் ஓட்டப் பந்தயம் ஒன்று நடைபெற்றது.

அப்போது ஒரு வீராங்கனையின் பெயர் அடிபட்டது. பிரபலமாகப் பேசப்பட்டது.

றிப்கா-றிப்கா-றிப்கா-

வசதியான முஸ்லிம் குடும்பப் பெண். சாதனைகள் படைக்கும் ஆர்வம் உள்ள பெண்.

றிப்கா கார் பந்தயத்தில் கலந்து கொண்டதைவிட ஆச்சரியமான விசயம் அவர் பரத நாட்டியம் பயின்றது. அதுவும் பதினொரு வருடங்கள் படுசிரத்தையோடு பயின்றார்.

தனது சமூகத்தோடு முற்றிலும் மாறுபட்ட பரத நாட்டியம் மீது அவருக்கு ஆர்வம் வரக் காரணமானவர் சாவித்திரி.

சாவித்திரி றிப்கா வீட்டின் இந்துப் பணிப்பெண்.

றிப்கா சிறு குழந்தையாக இருந்தபோது - சாவித்திரி கதை சொல்லி அவரைத் தூங்க வைப்பார்.

சாவித்திரிக்கு தெரிந்தவை இந்து புராணக்கதைகள்.

கதைகளைக் கேட்ட சிறுமி றிப்காவுக்கு ராமன்- கிருஷ்ணன் போன்றவர்களது கதைகள் பிடித்துக் கொண்டன.

பரத நாட்டியத்திற்கு முக்கியமானது நவரச பாவம்.

சிறுவயது முதல் புராணக் கதை கேட்டு, இந்துப் புராணப் பாத்திரங்களின் பாவங்களை வெளிப்படுத்தும் ஆற்றல் றிப்காவுக்கு வந்து சேர்ந்தது.

றிப்காவின் பரத நாட்டிய ஆர்வத்தைக் கண்ட பெற்றோர் கலியாணசுந்தரத்தின் சிஷ்யை சுதா தக்கரிடம் பரத நாட்டியம் பயில ஏற்பாடு செய்தனர். ஐந்து வருடம் அவரிடம் பயின்ற பின்னர், குரு கலியாண சுந்தரத்திடமே றிப்கா நாட்டியம் பயின்றார்.

தனது பதினொரு வயதில் மோட்டார் பந்தயத்தில் கலந்து முதல் பரிசை பெற்றுக்கொண்ட றிப்கா ஒரு வித்தியாசமான பரத நாட்டிய மணியேதான்.

## வசதிக்காக மட்டுமில்லை!

சைக்கிள் மிதிப்பது நல்ல உடற்பயிற்சி. நீங்கள் பணிபுரிகிற இடத்திற்கும் வீட்டிற்கும் ஐந்து கிலோ மீட்டர் தூரம் என்றால் ஸ்கூட்டர் வாங்க வசதியிருந்தாலும் உடல் நலம் கருதி சைக்கிளே வைத்துக் கொள்ளுங்கள். இடுப்பு, முழங்கால் பகுதிகள் உறுதிப்படும். கெண்டைக்கால் தசைகள் வலுப்பெற்று வளரும். முன் தொடை தசைகளும் நல்ல வடிவம் கொண்டு எஃகு போல் ஆகும். பாதுகாப்பானதும் கூட. அனால் ஓட்டும்போது மோட்டர் வண்டிகளோடு போட்டி போடக் கூடாது. மிதமான வேகம் போதுமானது. கிளம்புவதற்கு கொஞ்ச நேரத்திற்கு முன்பே சாப்பிட்டு விடுங்கள். வெறுங்காலோடு மிதிக்காதீர்கள். செருப்பு இருக்கட்டும். நீச்சல் தெரியாதவர்கள் அல்லது ஆறு, குளம் பக்கம் இல்லாதவர்கள் அவசியம் வீட்டில் ஒரு சைக்கிள் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். உங்களுக்குத் தெரியாமலேயே அது உங்கள் ஆரோக்கியத்தில் அற்புதம் விளைவிக்கிறது.



## சமைப்போம் சுவைப்போம்

ஆக்கித் தருபவர் - அன்ன பூர்ணா

### சிக்கன் ஃபிரை



தேவையான பொருட்கள்:—

கோழி -1  
மிளகாய்த்தூள்-2 தேக்கரண்டி  
மல்லித்தூள்- 2 தேக்கரண்டி  
வெங்காயம் நடுத்தரமாக-3  
உப்பு -தேவையான அளவு

செய்முறை:—

கோழி இறைச்சியை துண்டங்களாக வெட்டி வேகவிட்டு எடுக்கவும். உப்பு, மிளகாய், மல்லித்தூள் கலந்து பிசறி வைக்கவும். வெங்காயத்தைப் பொடிசாக வெட்டவும்.

எண்ணெயில் வெங்காயத்தைச் சிவக்க வறுத்து எடுத்துத் தனியே வைக்கவும்.

பிசறி வைத்த கோழித் துண்டுகளை நிறைய எண்ணெயில் மூழ்கும்படி போட்டு வறுத்து எடுக்கவும். வெங்காயத்தைக் கலந்து பரிமாறவும்.

### சுலப மீன் வறுவல்

தேவையான பொருட்கள்:-

மீன் 500கிராம், புளி 25 கிராம், எண்ணெய் 100 கிராம், மிளகாய்ப் பொடி 20 கிராம், மஞ்சள்பொடி ஒரு மேசைக் கரண்டி, உப்பு தேவையான அளவு.

செய்முறை:-

மீனைச் சுத்தம் செய்து துண்டங்களாக நறுக்கிக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் புளியையும் உப்பையும் போட்டு சிறிது தண்ணீர் விட்டு ஊறவைக்கவும். சிறிது நேரத்திற்குப் பிறகு புளி கரைசலைக் கெட்டியாகக் கரைத்து ஒரு பாத்திரத்தில் விடவும். மிளகாய் பொடி, மஞ்சள் பொடியைப் போட்டுக் கலந்து அதில் மீன் துண்டங்களைப் போட்டு நன்றாகப் பிசறி விடவும்.

தாச்சியை அடுப்பில் வைத்து எண்ணெயை விடவும். அது நன்றாகக் காய்ந்ததும் மீன் துண்டங்களைப் போட்டு சிவக்க வறுபட்டதும் இறக்கி வைத்து உபயோகிக்கவும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# மருத்துவப் பக்கம்

## உங்கள் குழந்தை ஏன் அழுகிறது?



அழுகை குழந்தையின் பாஷை. காரணத்தைப் பொறுத்து குழந்தை விதவிதமாக அழும். வயிற்றிலேயே அதன் அசைவுகளுக்கு ஒவ்வொரு அர்த்தம் கண்ட தாய்க்கு கைக்கு வந்தபின் அதன் அழுகையின் பொருள் அறிய சிரமமிருக்குமா? போகப்போக குரல் கேட்டதுமே, 'இதற்குத்தான்' என்று துல்லியமாகச் சொல்லி ஓடி வருவாள்.

பிறந்த ஒன்றிரண்டு தினங்களிலேயே படுக்கை ஈரமாக இருப்பதை, தனக்கு பசி எடுப்பதை, தாகம் எடுப்பதை, வலியை அது தெரிந்து கொள்ளலாம். உரத்த சத்தம் குழந்தையைத் தூக்கி வாரிப் போடும். பிரகாசமான ஒளி அதன் கண்களைக் கூச வைக்கும். எதிர்பாராத திடீர் அசைவுகள் அதற்கு மெல்லிய அதிர்ச்சியைக் கொடுக்கும். இதெல்லாம் குழந்தையை அழ வைக்கும். சதா அழும் குழந்தைகள் உண்டு. எப்போதாவது சிணுங்குகிறதுகளும் உண்டு. அவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வொரு வித்தியாசமான நபர் இருக்கிறாரே, இல்லையா?

பசி அழுகை. குழந்தை சத்தமாக அழும். வரவழைத்து அழும். மனதில் நிறுத்திக் கொள்ளுங்கள். குழந்தை கைக்கடிகாரம் கட்டிக் கொண்டிருக்கவில்லை. கடிகாரத்தைப் பார்த்து, 'சாப்பாட்டு சமயம் ஆச்சே' என்று சத்தம் போடுவதற்கு. 'இப்போதுதானே பால் கொடுத்தோம்' என்று நீங்கள் நினைப்பது தவறாக இருக்கும். ஒரு வேளையில் குடிக்கிற அளவுக்கு அடுத்த வேளையில் அது குடிப்பதில்லை. எனவே குறித்த சீரான இடைவெளி இருக்காது. பசி எடுத்தால் உடனே கூப்பாடுதான். அதற்கு அவ்வளவுதான் தெரியும்.

இரவு வேளைகளிலும் அப்படித்தான். சுவர்க் கடிகாரத்தைப் பார்த்து, 'அம்மா பசிக்குதே' என்று தட்டி எழுப்பாது. ஒவ்வொன்றும் அதனதன் போக்கில் செயல்படும். ஒரு மணிக்கு, நான்கு மணிக்கு என்று சரியாக 'கீ' கொடுத்த மாதிரி விழிப்புத் தட்டி பசிக்கு அழும் குழந்தைகள் உண்டு. பதினொரு மணிக்கு பால் குடித்துத் தூங்க ஆரம்பித்தாரல் அப்புறம் அவர் காலை ஆறு அல்லது ஏழு மணிக்குத்தான் எழுவார். அப்படி அம்மாவைத் தொந்தரவு செய்யாத குழந்தைகளும் உண்டு.

நீங்கள் என்ன நினைத்தாலும், செயல்பட்டாலும் உங்கள் வழிக்கு குழந்தையைக் கொண்டு வருவது என்பது சிரமம்தான். அதன் பசித் தேவையும் தூக்கத் தேவையும் தானாக மாறி வரும். பொதுவாக பதினெட்டு மாதங்கள் ஆகிற போது குழந்தை இரவில் இடைஞ்சல் தராமல் தூங்கும்.

வாயு ஏற்படுத்தும் வயிற்று வலி காரணமாகவும் அழலாம். குழந்தை உட்கொண்ட உணவு ஜீரணமாகிற போது கிளம்புகின்ற வாயு குழந்தைக்கு வயிற்றுவலியைக் கொடுக்கும். ஆகாரம் கொடுத்ததும் தோளில் சாய்த்து முதுகைத் தடவிக் கொடுக்க வேண்டும். அல்லது கைகளில் தாங்கியபடி மடியில் வைத்து அப்படிச் செய்யலாம். குழந்தை ஏப்பம் விடும். காற்றும் கழியும்.குழந்தைக்கு ஆசுவாசம் ஏற்படும்.

தாய்ப்பால் கொடுக்கிற தாய்மார்களுக்கு பத்தியம் தேவைதான். ஆரஞ்சு, முட்டைக்கோஸ் போன்ற மலமிளக்கும் தன்மை கொண்ட சில உணவுப் பொருட்கள் உட்கொள்கிற போது தாய்ப்பால் வழியாக குழந்தையின் வயிற்றுக்குச்சென்று அங்கு அது வினை புரிந்து அதன் காரணமாகவும் குழந்தைக்கு வயிற்று வலி ஏற்படலாம். பசும்பாலும் சில நேரம் ஒத்துப் போகாமல் இருக்கலாம். 'பால் குடித்தால் அதிக தாய்ப்பால் சுரக்கும் என்று சொல்லியிருக்கிறார்களே' என்று தாய் பசும்பாலாகக் குடிக்க, அதிலுள்ள புரதம் தாய்ப்பால் வழியாகக் குழந்தைக்குச் சென்று வயிற்றுவலியை ஏற்படுத்தலாம். குழந்தையின் உடலும் ஜீரண பக்குவத்தை அடைய வேண்டாமா? ஒவ்வொரு வேளையிலும் ஆகாரத்தைத் தொடர்ந்து குழந்தை அழுதால் மருத்துவரின் உதவியை நாட வேண்டும்.

குழந்தைக்கு போரடித்தாலும் அழும். அடுத்தவர் அரவணைப்பில் இருக்க விரும்பும். அப்போது ஆள் கிடைக்காவிட்டால் அழும். குழந்தையை அழப்போடக் கூடாது. உடனே என்னவென்று பார்க்க வேண்டும். அழுது அழுது காரியம் சாதிக்கிறதே. இப்படியே விடக்கூடாது என்று அழ விடாதீர்கள். காரியம் சாதிக்கிறவரை அழுகையை நிறுத்தாது. குழந்தையின் போக்கு அப்படி. தூக்கம் வந்தாலும் அழும். உடனே தாலாட்ட வேண்டியதுதான்!

-தன்வந்திரி-



# அறிந்து கொள்ளுங்கள்

## வெள்ளைப் பூண்டின் மகிமை

★ வாயுவைக் கலைக்கும்.
★ வயிறு தொடர்பான நோய்களைத் தீர்க்கும்.
★ மூட்டு வலிகளை நீக்கும்.
★ தோல் தொடர்பான நோய்களையும் நீக்கும்.
★ நீர் கனத்தைக் குறைக்கும்.
★ வாத நோயைக் குறைக்கும்.
★ தலைப்பாரம் குறையும்.
★ மலச்சிக்கலை நீக்கும்.
★ உணவு விண்டத்தைத் தணிக்கும்.
★ சுறுசுறுப்பை அளிக்கும்.
★ கல்சியம், பொசுபரசு, போன்ற சத்துக்கள் இதில் உண்டு.
★ இரத்த அழுத்தத்தை நீக்கும்.

தொகுப்பு:
எம்.ஏ. அர்ஷத். அஹமத்.
தர்கா நகர்.

## காது வலி உள்ளோரே கவனியுங்கள்!

நன்றாக முற்றிய வெற்றிலையை எடுத்துக் கசக்கிச் சாறு பிழிந்து நாலு அல்லது ஐந்து துளிகள் காதுக்குள் விட்டுக்கொண்டு பஞ்சைக் காதில் அடைத்துக் கொண்டால் காது வலி குணமாகும். லேசான வலியாய் இருந்தால் சரியாகி விடும். கொஞ்சம் முற்றின கேசென்றால் வெற்றிலைச் சாற்றால் வலிகுறையாது. உடனடியாக 'ஈ.என்.டி. ஸ்பெசலிஸ்ட்'டை அணுகவும்.

## நெஞ்சு வலியா? டோண்ட் வொறி!

உங்களுக்கு நெஞ்சு வலி நீங்க வேண்டுமா?

ஒரு கோழி முட்டையை எடுத்து, அதில் உள்ள வெண் கருவை மட்டும் தனியாகப் பிரித்து எடுத்து, அதே அளவு தேனும் கலந்து அருந்தினால் நாளடைவில் நெஞ்சு வலி நீங்கி சுகம் பெறலாம்.

## சளித் தொல்லையா உங்களுக்கு?

சீரகம், வெற்றிலை, உப்பு, வெள்ளைப்பூண்டு ஆகியவற்றை அம்மியில் வைத்து நைசாக அரைத்து, வெந்நீரில் கலந்து குழந்தைகளுக்கு கொடுத்தால் அஜீரணம், சளி ஆகியவை குணமாகும்.

## ஏன் இந்த மறதி?

மறதி நிலை மூளையின் இரத்த ஓட்டம் குறையும் போது ஏற்படுகிறது. பொதுவாக வயதானவர்களுக்கு இரத்த நாளங்களில் இறுக்கம் அதிகமாகிறது. ஆதலால் இரத்த நாளங்கள் உள்விட்டம் குறைகிறது. அப்போது ஒரு இடத்திற்குச் சென்று 'அடையக் கூடிய இரத்தத்தின் அளவு குறைகிறது. இதனால் அங்கு கிடைக்க வேண்டிய பிராணவாயு அளவு குறைந்து மூளை பாதிக்கப்படும் பொழுது மறதி ஏற்படுகிறது.

## தாய்ப்பால் கொடுக்கும் போது.....

பழச்சாறுகளில் விற்றமின் சி கூடுதலாக இருக்கிறது. இது தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு மிகமிகத் தேவை. பழச்சாற்றினைச் சூடாக்கிக் கொடுக்கக் கூடாது. சூடு செய்யும் போது விற்றமின் சத்து அழிந்துவிடும். விற்றமின் ஏ, மற்றும் பி அதிகம் கொடுப்பது நல்லதல்ல. குறைமாதக் குழந்தைகளுக்கு விற்றமின்னும், இரும்புச்சத்தும் அதிகம் கொடுக்க வேண்டும். ஏனெனில் நிறைமாதக் குழந்தைக்கு உடலில் வேண்டிய அளவு இரும்புச்சத்து இருக்கும்.

# இந்த வாரம் உங்கள் பலன்

(27.06.93 முதல் 3.7.93 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## கிரக சஞ்சாரம்

மிதுனம்- சூரியன், புதன்
சிங்கம்- செவ்வாய்
கன்னி- வியாழன்
விருச்சிகம்- இராகு
மகரம்- சனி
இடபம்- சுக்கிரன், கேது

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

ஞாயிறு- பொருள் பேறு, இனசனக் கொண்டாட்டம்
திங்கள்- மனக்கவலை நீங்கும், குடும்ப மகிழ்ச்சி.
செவ்வாய்- அன்னியர் உதவி, பொருள்பேறு.
புதன்- அகால போசனம், பெரியோர் நட்பு.
வியாழன்- பெண்கள் தொல்லை, முயற்சி பலிதம்.
வெள்ளி- காரியானுகூலம், இல்லச்சிறப்பு.
சனி- எடுத்த கருமம் வீண் தடை, எதிர்பாரா பிரயாணம்.

அதிஷ்ட நாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம் - 7

### இடபம்:

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

ஞாயிறு- வியாபார அனுகூலம், பணத்தட்டுப்பாடு.
திங்கள்- தேக சுகம் பாதிப்பு, செலவினங்கள் அதிகரிப்பு.
செவ்வாய்- பெரியோர் நட்பு, பொன்பொருள் சேர்க்கை
புதன்- நீண்டநாள் நோய் நீங்கும், மனத் தெளிவுண்டு.
வியாழன்- தெய்வ அனுகூலம், காரியசித்தி.
வெள்ளி- பணவரவு- அதிஷ்டம், எதிரிகளால் தொல்லை.
சனி- நற்சுகம், பணத்தட்டுப்பாடு.

அதிஷ்ட நாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம் - 6

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

ஞாயிறு- உறவினர் நன்மை, உயர்ச்சி
திங்கள்- காரியசித்தி, கொடுக்கல்வாங்கல் பிரச்சனை
செவ்வாய்- புதிய திட்டங்கள், பூமியால் இலாபம்.
புதன்- இழந்த பொருட்கள் மீட்பு, வீண் அலைச்சல்.
வியாழன்- பிள்ளைகளால் நன்மை, குடும்ப மகிழ்ச்சி
வெள்ளி- புதிய ஜீவன் வரும், புகழும் சுகமும், கிடைக்கும்.
சனி- தனதானிய லாபம், தாரத்தினால் கஷ்டம்.

அதிஷ்ட நாள் - புதன், அதிஷ்ட இலக்கம் - 3

### கர்க்கடகம்:

(புனர்பூசம் நான்காம் பாதம், பூசம், ஆயிலியம்)

ஞாயிறு- உல்லாசவாழ்வு, மனமகிழ்வு.
திங்கள்- துயர்நீங்கும், பொருள் நன்மையுண்டு.
செவ்வாய்- மறைமுக எதிர்ப்பு, காரியத்தடை
புதன்- காரியானுகூலம், நடைக்கஷ்டம்.
வியாழன்- நண்பர்களால் தொல்லை, சஞ்சலம்.
வெள்ளி- காரியங்களில் வெற்றி, பொன் பொருள் சேர்க்கை.
சனி- புதிய திட்டங்கள் பலிதம், தொல்லைகள் சூழும்.

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம் - 9

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

ஞாயிறு- பெரியோர் நட்பு, சுகம்,
திங்கள்- பொருள் பேறு, சுகம்.
செவ்வாய்- இல்லச் சிறப்பு, மனமகிழ்ச்சி.
புதன்- பணத்தட்டுப்பாடு, செலவு மிகுதி.
வியாழன்- எதிர்பார்த்த கருமம் வெற்றி, சாதுரிய மேன்மை.
வெள்ளி- பயணம், உறவினர்கள் உதவி.
சனி- காரியானுகூலம், விருந்துபசாரம்.

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம் - 5

### சிம்மம்:

(மகம், பூசம், உத்தரம் முதற்கால்)

ஞாயிறு- தெய்வதரிசனம், மனமகிழ்ச்சி.
திங்கள்- பொருள் வரவு மந்தம், பிள்ளைகளால் கவலை.
செவ்வாய்- வீண் பிரயாசம், பெரியோர் பகை.
புதன்- தனித்திருக்கை, குடும்ப மகிழ்ச்சி.
வியாழன்- உறவினரால் கஷ்டம், திடீர் பிரயாணம்.
வெள்ளி- அந்நியர் உதவி, ஆடம்பர வாழ்வு.
சனி- போஜன மிகுதி, துக்கம்.

அதிஷ்ட நாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம் - 1

### கும்பம்:

(ஆவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

ஞாயிறு- மனமகிழ்ச்சி, துயர்நீங்கல்,
திங்கள்- கடன்பயம், காரியத்தடை.
செவ்வாய்- கஷ்டபலன் நீக்கம், பணவரவு.
புதன்- அன்னியரால் உதவி, ஆசைகள்நிறைவேறல்
வியாழன்- பணக்கஷ்டம், பெரியோர் அனுகூலம்.
வெள்ளி- தெய்வதரிசனம், திடீர் அதிஷ்டம்.
சனி- உறவினர் வருகை, உயர்ந்தோர் நட்பு.

அதிஷ்ட நாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம் - 6

### கன்னி:

(உத்தரத்துப்பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

ஞாயிறு- கௌரவம், புகழ், பிரயாணம்.
திங்கள்- அதிகார சம்பத்து,உயர்ச்சி, முன்னேற்றம்.
செவ்வாய்- எடுத்த கருமம் வெற்றி, காரிய சித்தி.
புதன்- பொருள் பேறு, எதிர்பாரா உதவி.
வியாழன்- மறைமுக எதிர்ப்பினால் தொல்லை, மனைவியால் செலவினம்.
வெள்ளி- முதியோர் நட்பு, முதலீடுகளால் ஆதாயம்.
சனி- கௌரவம் புகழ் மேலோங்கும், பிரயாணம்.

அதிஷ்ட நாள் - புதன் அதிஷ்ட இலக்கம் - 2

### மகரம்:

(உத்தராட பின் முக்கால், திருகோணம் ஆவிட்டத்து முன்னரை)

ஞாயிறு- திடீர் பிரயாணம், தேகசுக விருத்தி,
திங்கள்- காரியசித்தி, கடிதங்களால் கவலை.
செவ்வாய்- திருடர் பயம், வீண் கலகம்.
புதன்- புதிய திட்டங்கள், பொன்பொருள்சேர்க்கை.
வியாழன்- பணவரவு, தூக்கமின்மை.
வெள்ளி- சோம்பல் தன்மை, மனைவி வழியில் தொல்லை.
சனி- இனசனக் கொண்டாட்டம், கடன் தொல்லை.

அதிஷ்ட நாள் - புதன், அதிஷ்ட இலக்கம் - 5

### தனுசு:

(மூலம், பூராடம், உத்தராம் முதற்கால்)

ஞாயிறு- வாக்கு கலகம், அன்னியர் உதவி.
திங்கள்- பொருள்வரவு, கௌரவம், புகழ்.
செவ்வாய்- தேகசுகம் பாதிப்பு, செலவினங்கள் அதிகரிப்பு.
புதன்- காதலில் வெற்றி, கவலைகள் மறைவு.
வியாழன்- பணவரவு, காரியானுகூலம்.
வெள்ளி- நடைநோயினால் கஷ்டம், அந்நியர் நட்பு
சனி- தொழிற்பேறு, அதிகார விருத்தி.

அதிஷ்ட நாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம் - 7

### விருச்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

ஞாயிறு- குடும்பநன்மை, மிகைச் செலவு.
திங்கள்- நடைக்கஷ்டம், பணத்தட்டுப்பாடு.
செவ்வாய்- பொருள்சிறப்பு, புதிய திட்டம் வெற்றி
புதன்- மனக்கஷ்டம், வீண் பிரச்சனை.
வியாழன்- பெரியோர்களால் நன்மை, காரியானுகூலம்.
வெள்ளி- பணவரவு, எதிர்பார்த்த கருமம் வெற்றி
சனி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி.

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம் - 8

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்)

ஞாயிறு- இல்லச்சிறப்பு காரிய அனுகூலம்.
திங்கள்- மனமகிழ்வு, மங்கள நிகழ்ச்சி நடந்தேறும்.
செவ்வாய்- பணவரவு, குடும்ப சுகம்.
புதன்- காரியானுகூலம், கடன்பயம் நீங்கும்.
வியாழன்- அன்னியர் பகை, அதிகார சம்பத்து.
வெள்ளி- அகால போசனம், அறிவுடையோர் நடப்பு.
சனி- பொன்பொருள் சேர்க்கை, புதிய திட்டம்.

அதிஷ்ட நாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம் - 4

## அடம் பிடிக்கும் நட்சத்திரம்



வைஜயந்திமாலா - ஸ்ரீ தேவி இருவரும் தமிழ்நாட்டில் இருந்துபோய் இந்தித் திரையுலகை கவர்ச்சியால் ஆண்டவர்கள். இப்போது இன்னொரு கவர்ச்சி நட்சத்திரம் இந்தித் திரையுலகையும் ஆளப் போகிறேன் என்று அடம்பிடிக்கிறது. அதுதான் நக்மா. [illegible]

## காதோடு சொல்லுகிறோ[ம்]

★ சான்ஸ் இல்லாமல் போனதால் மனம் உடைந்த 'ரேக' நடிகை தாராள நாயகியாக போஸ் கொடுத்[த] படங்களை சினிமா கம்பனிகளுக்கு அனுப்பி[வை]க்கிறாராம். ஒரு முறை சான்ஸ் தந்து [பா]ருங்கள், என்னாலும் முடியும் அதிரவைக்க என்கிறாராம்.

★ ரஞ்சித நடிகை ஓய்வு நேரத்தில் படிக்கத் தொடங்கி[யுள்ளார்]. தபால் மூலக் கல்வி. அதைக் கண்ட தந்[தைக்கு] வந்ததாம் கோபம். மகளே படிப்பு சோறு போடாது, [நடிப்புதான்] சோறு போடும். மறவாதே என்று அட்வைஸ் [கொடு]க்கிறாராம்.

★ அர்ச்சனை நடிகருக்கு ராசியான எண் நான்கு. [அவர்] பெயரும் நான்கு எழுத்து. அவர் இயக்கி ந[டித்த] படங்களும், இனிவரப் போகும் முரடன் எல்லாமே நா[ன்கு எழுத்து]. ராசி நல்ல ராசி.

★ ரோஜ நடிகைக்கு அடிக்கடி மனம் மாறுகிறது. [...] இயக்குநர் கைப்பிடிக்க இருக்கும் நேரத்தில் நட[...] மீது மோகம் கொண்டுள்ளாராம். இடையே ரகு[...] தாபம். சுயம்வரம் நடத்துகிறாரோ தெரியவில்[லை].

★ பாணு நடிகைக்கு பிரியமான பாத்திரம் ஒன்று கிடை[த்துள்ளது]. பாடகி வேசம். சாதி வெட்டப்பட்டு வந்த மல்லியில் [...] நடித்ததைவிட தன்னால் வெளுத்து வாங்க முடி[யும் என்று] சவால் விட்டுள்ளாராம்.

★ தனது பின்னங்கால்களே அழகு. அதனைக் கா[ட்டுவதில்] என்ன தவறு என்று ஜல் நடிகை கேள்வி எழுப்பி[யுள்ளார்]. அதுமட்டுமல்ல தனது பாட்டி அந்தக் கா[லத்து] 'செக்ஸ்பாம்'. பாட்டியை விட பேத்தி ஒன்றும் [குறைவு] இல்லை என்று நிரூபிப்பேன் என்றும் பேட்டி கொடுத்[துள்ளார்]. ரசிகர்கள் ஜாக்கிரதை.

★ கதாநாயகிகள் பலர் ஒளிவு மறைவில்லாமல் [...] நாயகிகளாக மாறிவருவதால் ஆடல் ராணிகள் [...] இருக்கிறார்களாம். எங்கள் பிழைப்பில் மண் போடு[...] நல்லா இருப்பார்களா என்று சாந்தி நடிகை துள்[ளு...] ஏன், நல்லாத்தானே இருக்கிறார்கள்.

★ நெருக்கமான காட்சிகளில் நடிக்கும் போது சில [...] அடுத்தபடத்திலும் சான்ஸ் கிடைக்கும் விதம[ாக] கொள்கிறார்களாம். அனுசரித்துப் போவது, [...] வைப்பது இரண்டும் தேவைதான் என்கிறார்கள்.

★ புது முக நடிகைகளைப் போடுவதால் எந்தத் தொ[ல்லையும்] இல்லை. சொல்வது போல நடந்து கொள்கிறா[ர்கள்]. பண்ணுவதில்லை. செல்வாக்கைக் காட்[டி] பண்ணுவதில்லை என்று சொல்லுகிறார் ராஜமா[...].

★ நாளைய சூப்பர் ஸ்டார் என்று வர்ணிக்கப்பட்[ட] நடிகர் வருத்தத்தில் இருக்கிறார். வேடன் குறி தவறி[...]

## மாபெரும் மருதநாயகம்— —ஸ்ரீதேவியும் உண்டாம்

சுப்பர் நடிகர் கமலஹாசன், ராஜ்கண்ணு தயாரிக்க, சந்தான பாரதி இயக்க நடிக்க இருப்பது அறிந்ததே. அத்துடன் நாசரைக் கதாநாயகனாக வைத்து சிங்கீதம் சீனிவாசராவ் இயக்கும் படமொன்றையும் தயாரிக்கிறார். ரேவதி, சரிதா, ஊர்வசி ஆகிய மூவரும் கதாநாயகிகளாக நடிக்கும் இப்படத்தின் பெயர் -மகளிர் மட்டும். ஆனால் ஆண்களும் படம் பார்க்கலாம். இவ்விரு படங்களும் முடிவடைந்த பின்னர் தனது இலட்சியப் படமான மருதநாயகத்தை மிகப் பிரம்மாண்டமான முறையில் தயாரித்து இயக்கவுள்ளார். தமிழக சினிமா வரலாற்றிலேயே முதன் முதலாக அதிகளவு பொருட் செலவில் இது தயாரிக்கப்படவுள்ளதாம். இதன் தயாரிப்புக்காக எட்டு கோடிக்கு மேல் செலவிடப்படவுள்ளது. ஸ்ரீதேவியும், தமிழக முன்னணி கதாநாயகர்களும் நடிக்க இருப்பதாகப் பேசப்படுகிறது.





## இந்த மாதிரி விளையாட்டெல்லாம் இங்கே வேண்டாம்

'தைமாசம் பூவாசம்' என்ற படத்தில் அறிமுகமாகி பின் பல மாசம் காணாமல் போயிருந்த தேவகி மீண்டும் முன்னுக்கு வர முயற்சி செய்கிறார். [illegible]



## நட்சத்திரங்கள் சிந்தியவை

கவர்ச்சி என்பது பார்ப்பவரின் பார்வை சம்பந்தப்பட்ட சமாச்சாரம். சேலை கட்டும் போது இடுப்பில் தெரியும் கவர்ச்சியை நீச்சல் உடையில் காணமுடியாது. என்னைப் பொறுத்தவரை கவர்ச்சி என்னோடு இருக்கிறது. போதுமான கவர்ச்சி.

-ஹீரா-

ஜென்டில்மேன் படத்தில் ஒரு பாடல் காட்சியில் நான் ஆடியதைச் சிலர் தவறாகப் பேசுகிறார்கள். தயாரிப்பாளர் எனது நண்பர். அதுதான் ஒத்துக் கொண்டேன். சான்ஸ் இல்லாமல் இல்லை.

-கௌதமி-

எதுக்கும் ஒரு திறமை வேணும். புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொண்டது போல, என்னைப் பார்த்து பல நடிகைகள் காக்கி உடை போட்டுப் பார்த்தார்கள். பெயர் வாங்க முடியவில்லை.

-விஜயசாந்தி-

அவசியம் என்றால் கவர்ச்சியாக நடிப்பதில் தவறில்லை.


-மோனிகா-

ஜனத் தொகை அதிகரிப்பால் தற்கொலைத் தொகையும் அதிகரித்திருக்கலாம்.

-கமல்-

தற்போதைய தமிழ் படங்களில் 'கிரைம் சப்ஜெக்ட்' என்ற பெயரில் வன்முறை - ரவுடியிசம் போன்றவற்றைத் தூண்டும் காட்சிகள் அதிகம் இடம் பெறுகின்றன.

-குட்டி பத்மினி-





## இணைவார்களா இவர்கள்?

அரசியல் போலத்தான் சினிமா உலகும். எதுவும் நடக்கலாம். நிரந்தர நண்பனும் இல்லை. எதிரியும் இல்லை.

பாலும்-வெண்மையும் போல் இருந்து, எலியும்-பூனையுமாக மாறிய இளையராஜாவும்-கவிஞர் வைரமுத்துவும் மீண்டும் சேர வேண்டும் என்று ஒருவர் தூது போய்வருகிறாராம். ஏற்கனவே ஒரு முறை பாரதிராஜா முயன்று தோல்வி கண்ட முயற்சிதான் எப்படியோ நல்லது நடக்கட்டும்.



# சினி




## சத்தியராஜ் மீண்டும் வில்லனாக!

எழுபதிற்கும் மேற்பட்ட படங்களில் வில்லனாக நடித்து தனக்கென ஒரு தனிப்பாணியை ஏற்படுத்தியவர் சத்தியராஜ். மிஸ்டர் பாரத், காக்கி சட்டை போன்ற படங்களில் கதாநாயகர்களுக்கு இணையாக இவரது வில்லன் நடிப்பு பேசப்பட்டது. பின்னர் இவர் கதாநாயகனாக நடித்துப் புகழ்பெற்றாலும், தமிழ்த் திரையுலகம் ஒரு அருமையான வில்லனை இழந்து விட்டது.

தற்போது மீண்டும் வில்லனாக அவர் ஒரு படம் நடிக்கவுள்ளார். வில்லன் என்றால் ஹீரோவிடம் உதை வாங்க வேண்டுமே. ஒரு முன்னணி நாயகன் இன்னொருவரிடம் உதை வாங்குவதா? சத்தியராஜ் ரசிகர்கள் ஏற்றுக் கொள்வார்களா? வில்லன் சத்தியராஜிற்கு உதை கொடுப்பது ஹீரோ சத்தியராஜ். பிறகென்ன தாராளமாக வாங்கலாம். இரட்டை வேடத்தில் சத்தியராஜ் நடிக்கும் இப்படத்தை மணிவண்ணன் இயக்குகிறார். படத்திற்கு 'அமைதிப்படை' என்று பெயரிடப்பட்டுள்ளது.





## இது ஹொலிவூட்

# கிளிப் ஹாங்கர்

அமெரிக்க ஹொலிவூட் திரையுலகின் மசாலா கூடிய சாகசக்காட்சிகளின் மன்னனாக திகழ்பவர் சில்வெஸ்டர் ஸ்ரலோன்.

றொக்கி-ரம்போ ஆகிய படங்களின் மூலமாக இலங்கை ரசிகர்களையும் பிரமிக்க வைத்தவர்.

இப்போது சில்வெஸ்டர் ஸ்ரலோன் நடித்துக் கொண்டிருக்கும் திரைப்படம் கிளிப் ஹாங்கர். (செங்குத்தான மலையில் தொங்குபவர்)

பனி படர்ந்த மலைமீது உள்ள செங்குத்தான பாதைகளில் பல சாகசங்களை ஸ்ரலோன் செய்தாக வேண்டும். ஒரு பாறையில் இருந்து மற்றொரு பாறை மீது தாவிக் குதிக்க வேண்டும். செங்குத்தான மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கிக் கீழே பாயவேண்டும்.

டூப் போட்டு நடிக்கும் நடிகர்கள் மத்தியில் சில்வெஸ்ரர் ஸ்ரலோன் எந்த டூப்பும் இல்லாமல் தானே அபாயங்களை சந்தித்து நடித்துள்ளார்.

செங்குத்தான மலையில் ஏறும்போதும், ஒரு கேபிள் மூலமாக 1,500 மீட்டர் உயரத்தில் இருந்து இறங்கும் போதும்.

"நான் கீழே பார்க்க மாட்டேன்.

கீழே பார்க்க மாட்டேன் என்று சொல்லிக் கொண்டேன்" என்கிறார், சில்வஸ்ரர்.

மலையேறும் பயிற்சியை பெறுவதற்காக 9 மீட்டர் உயரமான கொங்கிறீட்டால் ஆன மலையொன்று உருவாக்கப்பட்டது. பயிற்சியாளர் ஹென்றி ஹாலின் அவருக்கு பயிற்சிகளைக் கொடுத்தார்.

7 கோடியே 30 இலட்சம் அமெரிக்க டொலர்களை தண்ணீராய் இறைத்து தயாராகி வரும்

கிளிப் ஹாங்கர்-

சில்வஸ்ரர் ஸ்ரோலனின் நட்சத்திர அந்தஸ்தை மேலும் உச்சத்துக்கு தூக்கிச் செல்லும்.



சினிமா விமர்சனம்

# புதியமுகம்

இந்தியாவில் பெரிய திரையிலும் நம்நாட்டில் சின்னத் திரையிலும் ஓடிக்கொண்டிருக்கிறது புதிய முகம்.

புதிய முகத்தில் ரேவதியின் கணவர் சுரேஸ் மேனன் கதாநாயக அறிமுகம். ஏற்கெனவே 'இரவில் ஒரு பகல்' தொலைக்காட்சித் தொடரில் நடித்த அனுபவம் அவருக்கு கைகொடுத்துள்ளது.

தமிழுக்கு புதிய வடிவமான கதை. (கதையும் புது முகமோ?)

கொலைகாரக் குழுவின் கையாளாக இருந்த வினீத் (ஹாதிமஸ்லி, ஆயாரம் பூ புகழ்) தனது முகத்தை மாற்றிக்கொண்டு இந்தியா செல்கிறார். மாறிய முகம் சுரேஸ் மேனன். அங்கு ரேவதியை மணந்து, இராணுவத்திலும் வேலை. புதுவாழ்வு. விதி விளையாடுகிறது. மகன் பழைய முகத்தின் சாயலில் இருக்கிறான். மீண்டும் வினீத்) இலங்கை சென்ற வினீத் தந்தையின் பழைய சம்பவங்களை அறிந்து ஆத்திரத்தோடு இந்தியா திரும்ப பாசப் போராட்டம்.

இடையே ராணுவ ரகசியங்களை அறிய சுரேஸை மிரட்டும் ராதாரவிரவிச் சந்திரன் கூட்டணி. சுரேஸ் அந்தக் கூட்டணியை அழித்து தானும் அழிவோடு சோகமான சுபம்.

வில்லன் நாசர் இதில் வித்தியாசமான இன்ஸ்பெக்டர். குறையற்ற நடிப்பு.

ரேவதி வழக்கம் போல் இயல்பான நெஞ்சை அள்ளும் நடிப்பு.

இலங்கையின் எழிலில் ஒரு பகுதி முத்துகணேசனின் காமரா வழியே அற்புதமாய் தெரிகிறது.

ஏ.ஆர். ரகுமான் இசையில், வைரமுத்து எழுதிய பாடல்கள் இனிமை மற்றும் எளிமையான வரிகள்.

மொத்தத்தில் சுரேஸ் மேனன் குறை சொல்ல வைக்கவில்லை.

## பெண் வேசமிடும் பிரபல நடிகர்

ஆரம்பகால தமிழ் சினிமாவில் நடிகைகள் பற்றாக்குறை. நடிகர்கள் பெண்வேடம் போட்டு, மரத்தைச் சுற்றி ஓடி, கட்டிப்பிடித்து நடித்து பற்றாக்குறையை போக்கி வந்தார்கள். இப்போது கட்டிப் பிடிப்பது முதல், சென்சார் அனுமதிக்கும் வரை கழுப்டிப் போடுவதற்கு வரை நடிகைகள் பலர் ரெடி.

இப்போதும் இடைக்கிடையே ஆண் நடிகர்கள் சிலர் பெண் வேடமிடுவது நடக்கிறது. லேட்டஸ்டாக கார்த்திக் பெண் வேடம் போடுகிறார். தனது சகோதரர் தயாரிக்கும் 'காத்திருக்க நேரமில்லை' படத்திற்காகவே அந்த வேசம்.

அதே படத்தில் கார்த்திக்கோடு பெண்வேடம் புனையும் மற்றொருவர் நகைச்சுவை நடிகர் வடிவேலு. அதுவும் எப்படி என்கிறீர்கள். டூ-பீஸ் உடையில் ஆங்கிலப் பெண் போலவாம். படுகவர்ச்சிதான் போங்கள்.





## ரஜனி + ரகுமான்

ஜீவி பிலிம்ஸ் ரஜனியை வைத்து தயாரிக்கும் படம் இரகசியப் பொலிஸ் 009 என்பது அறிந்த செய்தி. இசையமைப்பது ரகுமான். ரகுமான் ரஜனிக்கு இசை அமைக்கும் முதல் படமும் இதுதான்.

ஜீவி பிலிம்ஸ் மே மாதம் என்ற பெயரில் இன்னொரு படத்தையும் தயாரிக்கிறது. மணிரத்தினத்தின் உதவியாளராக இருந்த பாலு கிருஷ்ண மூர்த்திக்கு அதை இயக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

அதற்கும் இசை ரகுமான் தான்.



## மினி சினி

* ★ தனது சொந்தப் படமான வள்ளியில் ரஜனி தத்துவம் பேசும் ஒரு குடிகாரனாக நடிக்க இருக்கிறார்.
* ★ வெளிவரத் தயாராகியுள்ள தர்மசீலனை அடுத்து பிரபு நடித்துக் கொண்டிருக்கும் திரைப்படம் மறவன். மறவன் முடிவடைந்ததும் பிரபுவின் 100வது படமான ராஜகுமாரன் ஆரம்பமாகும்.
* ★ சுரேஷ் கிருஷ்ணாவின் இயக்கத்தில் கார்த்திக் நடிக்க இருக்கிறார். இது கார்த்திக்கின் சொந்தப்படமாகும்.
* ★ தலைவாசல், அமராவதி போன்ற படங்களைத் தயாரித்த சோழா கிரியேசன்ஸ் அடுத்து தோழன் என்ற படத்தைத் தயாரிக்கின்றார்கள்.
* ★ தமிழில் வெற்றி பெற்ற பிரம்மா படத்தை இந்தியில் எடுக்கவுள்ளார்கள். தமிழில் இயக்கிய சுபாஷ் தான் இந்தியிலும் இயக்குகிறார். இவர் பழம் பெரும் இயக்குனரான கிருஷ்ணன் (பஞ்சு) மகன்.
* ★ நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நடிகர் மோகன் ராஜ்யம் என்னும் திரைப்படத்தில் நடிக்கவுள்ளார். சூரியன் வெற்றிப்படத்தைத்தந்த கே.டி. குஞ்சு மோன் இப்படத்தைத் தயாரிக்கிறார்.
* ★ ஒரு காலத்தில் ஓஹோவென புகழ் பெற்றிருந்த நதியா மீண்டும் நடிக்கவந்துள்ளார். மங்கள நாயகன் கணேசுடன் இணைந்து ஒரு படத்தில் நடித்து வருகிறார்.
* ★ சரத்குமார் நடித்து பாதியில் நின்றுபோன தடை உத்தரவு மீண்டும் தொடங்கப்படவுள்ளது. ஆனால் படத்தின் பெயர் மறுபரிசீலனை என்று மாற்றப்பட்டு விட்டது.
* ★ சின்னச்சின்ன ஆசை, சிறகடித்த ஆசை, சுந்தி வர ஆசை இந்தப் பாடல்வரிகளைத் தலைப்புகளாகத் தாங்கி மூன்று படங்கள் உருவாகி வருகின்றன.
* ★ மலையாள நடிகர் மோகன்லால் இருநூறு படங்களில் நடித்து விட்டார்.





# விசிட்



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பாப்பா முரசு

## முனிவர் கேட்ட வரம்

அரவங்காடு என்று ஒரு காடு இருந்தது. அங்கு அரவங்களாகிய பாம்பு இல்லை. பாம்புகளை விடக்கொடிய அரக்கன் இருந்தான். அவன் பெயர் தாடகன். அவன் நெடிய உருவமுடையவன். முகம் அகோரமாக இருக்கும். கண்கள் இரண்டும் எப்போதும் இரத்தச் சிவப்பாக இருக்கும். அரவங் காட்டையே அவன் அதம் செய்து கொண்டிருந்தான்.

கடுந்தவம் புரிந்து அவன் இறைவனிடம் ஒரு வரம் வாங்கி யிருந்தான். 'என்னை யாரும் கொல்ல முடியாமல் போக வேண்டும்' என்பதுதான் அந்த வரம். இறைவனும் அவன் புரிந்த கடுந்தவத்தை மெச்சி அவன் கேட்ட வரத்தைக் கொடுத்து விட்டார். தாடகனுக்கு அந்த வரம் அசாத்திய அகம்பாவத்தை யும், அலட்சியத்தையும் கொடுத்து விட்டது. தான் வைத்ததே சட்டம் என்று அரவங்காட்டைச் சுற்றிய பகுதியிலுள்ள மக்களைத் துன்புறுத்தத் தொடங்கினான்.




மக்களை உயிரோடு பிடித்து விழுங்கினான். பசு, எருமை களையும் அவன் விட்டு வைக்க வில்லை. அரும் பாடுபட்டு வளர்த்த பயிர்களை தன் கொடிய கைகளால் அழித்தான். காட்டி லுள்ள துஷ்ட மிருகங்கள் கூட அவன் வருவதைப் பார்த்து அஞ்சி நடுங்கின.

தாடகன் செய்யும் அநியாயங்க ளாலும், அக்கிரமங்களாலும் மக்கள் பட்ட கஷ்டங்களுக்கு ஒரு அளவே இல்லாமல்போயிற்று. இப்படியே போய்க் கொண்டிருந்தால் மனித இனமே அழிந்து விடுமோ என்று அவர்கள் அஞ்சினார்கள். தாடகனுக்கு ஒரு முடிவு கட்ட விரும்பி அரவங்காட்டுக்குள் தவம் செய்யும் சுதாகர் என்ற முனிவரிடம் சென்றார்கள்.

அனைவரும் அவர் காலடியில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து "தபோவன முனிவரே! எங்களை யெல்லாம் நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டி னார்கள்.

"குழந்தைகளே உங்களுக்கு நேர்ந்த துன்பம் என்னவோ?" என்று கேட்டார் முனிவர்.

தாடக அரக்கன் செய்யும் அட்டூழியங்களை ஒருவர் மாறி ஒருவர் விடாமல் கூறினார்கள்.

"தாடகனோ! அவன் எவராலும் சாக முடியாத வரம் வாங்கிய வனாயிற்றே" என்றார் முனிவர்.

"அப்படியென்றால் அவனை அழிக்கவே முடியாதா? அவ னால் நாங்கள் படுகிற இன்னல்கள் ஒழி யவே ஒழியாதா?" என்று மனம் வருந்தி அழுதபடி கேட்டனர் மக்கள்.

அவர்களைப் பார்க்க பரிதாப மாகவும், இரக்க மாகவும் இருந்தது முனிவருக்கு.

"மக்களே..நீங்கள் அமைதியாக உங்கள் வீட்டிற்குச் செல் லுங்கள். தாடக அரக்கனால் இனி உங்களுக்குத் துன்பம் ஏற்படாது!" என்றார் முனிவர்.

"தாடகன் உயி ரோடு இருக்கும் வரை அவன் துன்பம் விளைவித்துக் கொண் டுதானே இருப்பான்? நாங்கள் எப்படி அமைதியாக இருக்க முடியும்?" என்று கேட்டார் ஒரு பெரியவர்.

"ஒருவன் உயி ரோடு இருந்தாலும் அவனால் பிறருக்குத் தீங்கு செய்ய முடியாதபடி செய்து விட் டால்?" என்று கேட்டார் முனிவர்.

"எப்படி முனிவரே?" என்று தங்கள் துன்பங்கள் நீங்க ஒரு வழியும் இருக்கிறது போலும் என்று எண்ணி நம்பிக்கையுடன் கேட்டனர் மக்கள்.

"பொறுத்திருந்து பாருங்கள்" என்று சொல்லிவிட்டு சுதாகர் முனிவர் நிஷ்டையில் ஆழ்ந்து தவம் செய்யத் தொடங்கினார்.

மழை, வெயில், பனி என்று பருவகாலங்கள் மாறி மாறி வந்தன. இரவு, பகல் வண்டிச் சக்கரம் போல் ஒன்றன் பின் ஒன்றாக ஓடோடி வந்தன. அவரைச் சுற்றிப் புதர் வளர்ந்தது. அப்படி யும் அவர் ஊண், உறக்கமில்லாது நிஷ்டையில்ஆழ்ந்து இறைவனை நோக்கிக் கடும் தவம் புரிந்தார்.

அவரது தவ வலிமையைக் கண்டு இறைவன் அவர் முன் தோன்றினார்.

"சுதாக முனிவரே! உம் தவத்தைக் கண்டு யாம் மகிழ்ந் தோம். தங்களுக்கு வேண்டிய வரம் எதுவோ?" என்று கேட்டார் அம்மையப்பன்.

"தாடக அரக்கன்," என்று தாம் சொல்ல வந்ததை சுதாகர் முனிவர் சொல்லும் முன்பே, "அவனுக்கு யாம் சாகாவரம் கொடுத்துள் ளோமே தவசிரேஷ்டரே!" என்றார் எம்பெருமான்.

"தாடக அரக்கனைக் கொல்ல எனக்கு சக்தியைக் கொடுங்கள் என்று கேட்பது என் தவத்தின் நோக்கமல்ல கைலாசநாதா"

"பின் உம் தவத்தின் நோக்கம்?"

"தாடக அரக்கன் உயிரோ டிருக்க வேண்டும். ஆனால், நடக்கக் கூட முடியாதபடி அவன் சக்தி எல்லாம் அழிந்து போக வேண்டும். இதுவே யாம் வேண்டும் வரம் பிரபோ!" என்றார் சுதாகர் முனிவர்.

"நீர் வேண்டும் வரத்தை அளித்தோம்" என்று சொல்லி விட்டுக் கடவுள் மறைந்து விட்டார்.

அவர் வரமளித்த அக்கணமே தாடக அரக்கன் தன் உடல் சக்தியை, பலத்தை எல்லாம் இழந்து ஒடித்துப் போட்ட கீரைத்தண்டு போல கீழே விழுந்து விட்டான்.

அரவங்காட்டு மக்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள்.

ஆணவம் கொண்டு அட்டூழியம் செய்வோருக்கு இதுதான் கதி.






### உங்களால் முடியும் இதைச் செய்யுங்கள்!

உங்கள் நண்பர்களுக்கு நீங்களே அழகிய வண்ண மயமான வாழ்த்து அட்டை யை செய்து அனுப்பலாம்.

நல்ல தடிப்பான சுத்த மான தாளை உங்களுக்கு விருப்பமான வடிவத்தில் வெட்டி எடுத்துக்கொள் ளுங்கள். அதில் கருப்பு வர்ண துளிகளை ஆங் காங்கே வையுங்கள். ஒரு ஸ்டிரோ மூலம் கறுப்பு வண்ணத் துளிகள் மீது ஊதுங்கள். வண்ணம்பல திசைகளிலும் பரவி படத் தில் உள்ளது போன்ற உருவ அமைப்பு உருவா கும். அதில் உள்ள காலி இடங்களில் உங்களுக்குப் பிடித்தமான வண்ணங் களை அடித்து நிரப்புங்கள். பின்னர் உங்கள் வாழ்த்தினை அழகாக எழுதுங்கள்.

இப்போது உங்கள் தயாரிப்டில் வாழ்த்து அட்டை த்யார்.

### வேற்றுமையில் ஒற்றுமை

கூடும் மரமும் வேறானாலும்
கூட்டாய் உண்ணும் காக்கையைப் பார்!
ஓடும் நதிகள் வேறானாலும்
ஒன்றாய் கடலில் கலப்பதைப் பார்!

பார்க்கும் வண்ணம் வேறானாலும்
பொருந்தி ஓவியம் ஆவதைப் பார்!
காற்றும் முகிலும் வேறானாலும்
கலந்தே மழையைத் தருவதைப் பார்!

இனத்தால் மரங்கள் வேறானாலும்
இணைந்தே தோப்பாய் ஆவதைப் பார்!
கனத்தால் கற்கள் வேறானாலும்
கட்டிடமாகி உயர்வதைப் பார்!

நடையும் உடையும் வேறானாலும்
நாட்டால் நாம் தான் இலங்கையரே!
இடையில் முளைத்த இனமொழி பேதம்
இடர் செய் மனத்தின் கற்பனையே!

மாற்றார் நம்மை மதித்துப் போற்றும்
மகிமை நமது கைகளில் தான்!
வேற்றுமை தன்னில் ஒற்றுமை கண்டால்
வெற்றி நமது பைகளில் தான்!

தொகுப்பு:- வே. விஜயகுமாரி
ஆண்டு-10B
கொ/ விவேகானந்தா கல்லூரி.

### விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புக்களும்

(1) அலெக்சாண்டர் பிளமிங்- பென்சிலின்.
(2) வில்லியம் ஹார்வே- குருதிச் சுற்றோட்டம்.
(3) லூயி பாஸ்ரர்- விசர் நாய்க்கடி தடை மருந்து.
(4) நியூட்டன்- புவியீர்ப்பு விதி.
(5) பரடே- டைனமோ
(6) பீராங்கிலிங்- மின்அலைக் கொள்கை.
(7) கலிலியோ- தொலைநோக்குக் காட்டி.
(8) கோப்பணிகசு- சூரிய மையக் கொள்கை.
(9) கிறிஸ்டியன் பெர்னாட்-இதய மாற்றுச் சிகிச்சை.
(10) கிரான்ற் பன்ரிங்- இன்சுலின்.
(11) கிரகாம்பெல்- தொலைபேசி.
(12) கனேரிங்- பரசூட்
(13) கே.சி. பெரியார்- நீராவிக் கப்பல்
(14) யோன் லொயிக் பயர்ட் - தொலைக் காட்சி.
(15) றுடோல்ப் டீசல்- டீசல் எஞ்சின்.
(16) லிஸறர் பிரபு- சத்திர சிகிச்சை முறை
(17) வில்ஹெம் ரன்ட்கள்- எக்ஸ்ரே கதிர்.
(18) கே. மக்மிலன்- துவிச்சக்கர வண்டி.
(19) எட்வேர்ட் ஜென்னர்- அம்மைப்பால் குத்துதல்.
(20) பைதகரஸ்- கணிதத்தின் தந்தை.

தொகுப்பு:-
செல்வன்: ஜம்சீத் தாகீர்
க.பொ.த.(சா/த)
மாறை/ அறபா மத்திய கல்லூரி
வெலிகாமம்.

### எப்போது யாரால் எங்கே கண்டுபிடிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| கமரா | 1802 | தொமஸ் வெட்ஜ் உட் | அமெரிக்கா |
| புகைவண்டி | 1829 | ஸ்டீவன்சன் | இங்கிலாந்து |
| தையல் மெசின் | 1830 | தின்மானியர் | பிரான்ஸ் |
| துப்பாக்கி | 1835 | கோல்ட் | அமெரிக்கா |
| டெலிபோன் | 1836 | அலெக்சாண்டர் | அமெரிக்கா |
| மின்சாரம் | 1843 | டாட் பிரதர்ஸ் | இங்கிலாந்து |
| பேனை | 1864 | வாட்டர் மென் | அமெரிக்கா |
| கிராமப்போன் | 1876 | தொமஸ் ஆல்வா எடிசன் | அமெரிக்கா |
| மோட்டார் | 1883 | ஹென்றி போர்ட் | இங்கிலாந்து |
| டயர் | 1884 | டண்லாப் | இங்கிலாந்து |
| சினிமா | 1889 | தொமஸ் ஆல்வா எடிசன் | அமெரிக்கா |
| வானொலி | 1902 | மார்க்கோணி | இத்தாலி |
| விமானம் | 1903 | ரைட் சகோதரர்கள் | இங்கிலாந்து. |

ஆர். தம்ஸீர் முஹம்மது.
394/1, புளுகொஹத்தென்ன,
அக்குறணை.

### சில ஆண்டுகளும் இலங்கையின் நிகழ்வுகளும்

(1) 1505- போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரத்தைக் கைப்பற்றல்.
(2) 1802- இலங்கை முடிசேர் நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.
(3) 1818- இலங்கை முழுவதும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டது.
(4) 1931- சர்வசன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது.
(5) 1945- இலவசக் கல்வித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.
(6) 1948- இலங்கை சுதந்திரம் அடைந்தது. (பெப்ரவரி 04)
(7) 1972- இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. (மே.22)
(8) 1979- உணவு முத்திரைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
(9) 1979- சர்வதேச குழந்தைகள் ஆண்டு
(10) 1987- சர்வதேச வீடமைப்பு ஆண்டாகப் பிரகடனம் செய்யப்பட்டது.


தொகுப்பு:-
செல்வன்: ஜம்சீத் தாகீர்.
க.பொ.த.(சா/த)
மாறை/ அறபா மத்திய கல்லூரி
வெலிகாமம்.

| நாடுகள் | தலைநகரங்கள் |
|---|---|
| 1. பங்காளதேஷ் | டாக்கா |
| 2. ஆப்கானிஸ்தான் | காபூல் |
| 3. சோமாலியா | மொகதீஷ் |
| 4. பர்மா(மியன்மார்) | ரங்கூன்(யங்கோன்) |
| 5. மக்கள் சீனா | பெய்ஜிங் |
| 6. தாய்வான் | தாய்பிங் |
| 7. தாய்லாந்து | பாங்கொக் |
| 8. வியட்நாம் | ஹனோய் |
| 9. மலேசிய | கோலாலம்பூர் |
| 10. சிரியா | டமாஸ்கஸ் |
| 11. நியூசிலாந்து | வெலிங்ரன் |
| 12. ஓமான் | மஸ்கட் |
| 13. சைப்பிரஸ் | நிக்கோஷியா |
| 14. லெபனான் | பெய்ரூட் |
| 15. இஸ்ரேல் | ரெல் அவிவ் |
| 16. போலாந்து | வார்சோ |
| 17. கியூபா | ஹவானா |
| 18. கனடா | ஒட்டவா |
| 19. பிலிப்பைன்ஸ் | மணிலா |
| 20. நைஜீரியா | லாகோஸ் |
| 21. சிம்பாப்வே | சலிஸ்பெறி |
| 22. எகிப்து | கெய்ரோ |
| 23. ஸம்பியா | லுசாக்கா |
| 24. லிபியா | திரிப்பொலி |
| 25. துருக்கி | அங்காரா |

இளையதம்பி சரவணபவான்
31 "கமலவாசா"
ஏறாவூர்-5

**உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# கச்சிதமான கண்ணாடி கண்ணுக்கு அழகு!

## கண்ணாடியை எப்படி தெரிவு செய்வது?

திரைப்பட நாயகன் புருனோ 33 வயதைத் தொட்டு விட்டார்.

அவரது கண்களில் சிறு கோளாறு.

கண்ணாடி பாவிக்காவிட்டால் பார்வையே பறி போகும் என்றார்கள்.

அடிக்கடி தலைவலியும் தொல்லை கொடுத்தது.

தகுந்த கண்ணாடியைத் தேர்ந்தெடுப்பது மாபெரிய வேலை.

அவுஸ்திரேலியாவில் மிகச் சிறந்த கண்ணாடிக்கடை ஒன்றுக்கு அவர் சென்றார்.

அங்கு கண்ணாடிகள் மலைபோல் குவிந்து கிடந்தன.

முதலில் நீலச்சட்டம் போட்ட கண்ணாடியை எடுத்தார்.

அது அவரது முகத்தைவிடப் பெரிதாக இருந்தது.

சிவப்பு வர்ண வண்ணத்துப் பூச்சியைப் போன்ற கண்ணாடியை எடுத்தார். அது பெண்களுக்குத் தான் ஏற்றது.

கடையை தலைகீழாப் புரட்டியதைப் போல, தனக்குரிய கண்ணாடியைத் தேடிப் பிடித் தார். அம்சமாக இருந்தது. நீங்களே பாருங்களேன். எப்படியிருக்கிறார் என்று!

## கானமயில் கனவில் ஆடினால்....

ஒவ்வொருவருக்கும் உள்ளே ஒரு கனவுத் தொழிற்சாலை இருக்கிறது.

உங்கள் கனவுத் தொழிற் சாலையில் கானமயில் வந்து கலாப நடனம் ஆடியிருக்கிறதா? இல்லையென்றால் இனியாவது வந்து ஆடட்டும்.

ஆடினால் கஷ்டங்கள் விலகும். குதூகலம் ஏற்படும். வருமானம் கிடைக்கும். சுபகாரியம் நடக்கும்.


அதிஷ்டம் தரும் கலைகள், என்ற நூலில் அப்படித்தான் சொல்லி இருக்கிறார்கள். நம்புவதும் விடுவதும் உங்கள் இஷ்டம்.

## சிரிப்பால் வந்த சிறை!

பாரீசைச் சேர்ந்த பிரான்ஸிஸ் செல்டன் என்ற கோடிஸ்வரருக்கு 69 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. குற்றம் என்ன செய்தார்? கொற்வனைப் பார்த்துச் சிரித்து விட்டார்.

அதாகப்பட்டது, மன்னன் நான்காம் லூயியின் வழுக்கைத் தலையைப் பார்த்து அடக்க முடியாமல் சிரித்து விட்டாராம். வந்தது வினை. 69 வருடச்சிறை. தேவையா இது?

## முதல் தர நாய்



செல்லப் பிராணிகள் வரிசையில் நாய்களுக்கு முதல் மரியாதை. இங்கே படத்தில் காணப்படும் டாச்ஆண்ட் இன நாய்களுக்கு உலகெங்கும் முதல் பெரு மரியாதை. இந்த நாய்கள் நீளமான உடலும் கட்டையான கால்களும் கொண்டவை. சுத்தம், கட்டுப்பாடு, அன்போடு நடத்தல் என்பவை இந்த நாய்களின் தனித்தன்மை. ஜெர்மனியில் இந்தவகை நாய்களை 'ஜெண்டில் மேன்' என்று அழைக்கிறார்கள்.

## அரசியல் ஜோக்ஸ்

அதிகமாக ஆங்கிலம் தெரியாத ஒரு அமைச்சருக்கு அவர் பேச வேண்டியதை எழுதிக் கொடுப்பதற்காக ஒரு செயலாளர் நியமிக்கப்பட்டிருந்தார்.

"அணிசேரா இயக்கம் பற்றி 15 நிமிடப் பேச்சு ஒன்று எழுதித் தாருங்கள்" என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார். சரியாக 15 நிமிடம் வரும்படியாக எழுதித் தரப்பட்டது. ஆனால் அமைச்சர் அதைப் படித்த போது 30 நிமிடம் ஆயிற்று. அவருக்கு ஏக கோபம். செயலாளரைக் கூப்பிட்டுக் கடிந்து கொண்டார்.

"நான் தந்தது 15 நிமிஷப் பேச்சுதான். அதன் கார்பன் காப்பியையும் சேர்த்துப் படித்து விட்டீர்கள்" என்றார் செயலாளர்.

நன்றி:- குஷ்வந்த் சிங் ஜோக்ஸ்

## தகவல் பெட்டி

### மினி பொக்ஸ்

1. மனிதர்களுக்கும், யானைகளுக்கும் மட்டுமே துன்பம் நேரும் போது கண்ணீர்விட்டு அழக் கூடிய ஆற்றல் உண்டாம்.
2. பிஜித் தீவிலுள்ள மக்கள் யாருக்காவது மரியாதை செய்ய விரும்பினாலோ, பாராட்ட நினைத்தாலோ, அவர்களுக்கு திமிங்கிலத்தின் பல்லை அன்பளிப்பாகத் தருகின்றனர்.
3. நாய் உணவில்லாமல் சாவதை விட, உறக்கம் இல்லாததால் இறந்துவிடும்.
4. ஒரு புறாவினுடைய எலும்புகளின் எடையைவிட அதன் இறகுகளின் எடை அதிகமாக இருக்கும்.
5. விமானப் பணிப்பெண் வேலைக்காகப் பெண்கள் முதன்முதலாக அமர்த்தப் பட்டது 1930-ல் தான். அமர்த்தப்பட்ட முதல் நாடு அமெரிக்கா.

செல்வன் ஷஹிர்ஷா தாஸிம்
105, லோட்டஸ் வீதி,
தர்கா நகர்.

1. மிக மிக இளவயதில் நோபல்பரிசு பெற்றவர் பிரிட்டனைச் சேர்ந்த புரபசர் சர் வில்லியம் லாரன்ஸ் ப்ராக் என்பவர் 1915ல் பரிசு பெற்றார். அப்போது அவருக்கு வயது 25.
2. உலகில் முதன்முதல் தொப்பித் தொழிற்சாலை அமெரிக்காவில் டான்பர் என்னும் இடத்தில் 1851ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
3. உலகிலேயே அதிக செலவில் தயாரிக்கப்பட்ட படங்கள் சுப்பர் மென் (அங்கம்-2) 600 இலட்சம் டொலர்கள். ஸ்டார் டிராக் 450 இலட்சம்
4. உலகிலே அதிக தொலைபேசி வசதி உள்ள நகரம் நியூயாக்.

செல்வி நசூஹா பரீன் கலீல்
பாணந்துறை.



# சிரியுங்கள் சிறப்பீர்கள்!

சிரிப்பு! சிங்காரச் சிரிப்பில் இருந்து சீறும் வில்லத்தனமான சிரிப்பு வரை–

சிரிப்பிலும் பலதரங்கள். பல ரகங்கள்.

சிரிப்பைப் பற்றி பல வல்லுநர்கள் ஆராய்ந்தும் இருக்கிறார்கள்.

சிரிப்பு ஆயுளை அதிகரிக்கச் செய்யும் சிறப்பு 'போனஸ் என்கிறார் ஒருவர்.

சைகைகளும்- சப்தங்களும் நிரம்பியதே சிரிப்பு என்கிறார் இன்னொருவர்.

சிரிப்பின் மெல்லிய வடிவம் புன்னகை.

சிரிப்பு எப்படிப் பிறக்கிறது? உதட்டிலே மலரும் புன்னகை எப்படி உற்பத்தியாகிறது?

முதலில் முகத்தசைகள் சுருங்குகின்றன. உமிழ் நீர் மற்றும் கண்ணீர் சுரப்பிகள் தூண்டப்படுகின்றன. நமது உடலின் பிறபாகங்கள் லேசானதாக, மூளையில் ஒரு சுரப்பி சுரக்கத் தொடங்கும். அதற்கு 'எண்டார்பைன்' என்று பெயர். இது உடலில் வலி ஏற்படும் போது சுரந்து வலிமாறச் செய்யும் திரவம் ஆகும். சிரிக்கும் போதும் அதுதான் சுரக்கிறது.

மனிதன் குரங்காக இருந்த காலத்தில் இருந்தே சிரிப்பு தோன்றிவிட்டதாம்.

ஒரு சிம்பன்ஸி குரங்கு எப்படிச் சிரிக்கும்? ஆய்வு செய்து பார்த்து ஒரு வல்லுநர் அதையும் விபரித்திருக்கிறார்.

"இரண்டு மனிதக் குரங்கு தம்பதியர்(1) அவற்றுக்கு இரு குழந்தைகள். குழந்தை பிறந்து ஒரு மாதமானவுடன் தாய்க் குரங்கு எப்போது பார்த்தாலும் தன் குழந்தையை கடித்துச் சீண்டுகிறது. மேலே தூக்கிப் போட்டு கிச்சுக் கிச்சு மூட்டுகிறது.

அந்தக் குழந்தைக்கு 11 மாதம் ஆகும் போது முதல் தடவையாக அம்மாவின் சீண்டல்களுக்கு விடையாக சிரிக்கத் தொடங்குகிறது.

முகத்தைத் தளர்த்தி, வாயைத் திறந்த நிலையில் இந்தச் சிரிப்பு இருக்குமாம். அடுத்த ஒரு வாரத்தில் மூக்கைச் செருமிக் கொண்டும், ஈஈஈஈஈ என்று பல்லைக் காட்டிய படியும் அட்டகாசமாகச் சிரிக்க ஆரம்பித்துவிடுகிறது.

ஓர் எச்சரிக்கை! குரங்கு பல்லைக் காட்டினால் சிரிப்பாகத்தான் இருக்கும் என்று நிச்சயமில்லை. சில சமயம் பயம்- கோபம் என்னும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் இதே முறையைத்தான் கையாளுகிறது.

இன்னொரு வல்லுநர் என்ன சொல்கிறார் தெரியுமோ?

ஒரு குழந்தையின் சிரிப்பு அதன் தாய், குழந்தையை தூக்கிப் போடுவது போல் நடித்து சட்டென்று பிடித்து விடும் போது தூண்டப்பட்டுவிடுகிறது என்கிறார்.

குழந்தைக்கும் தாய்க்கும் இடையே அமையும் முதல் பாசப்பாலம் இந்தச் சிரிப்புத்தான்.

குழந்தைகளின் சிரிப்பின் மூலம் இயற்கையின் மூன்று அலுவல்கள் நிறைவேறுகின்றன.

1. பயத்தைத் தூண்டும் உணர்ச்சிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.
2. மற்றக் குழந்தைகளோடு சேர்ந்து கொள்ளும் சமூக இயல்பை சிரிப்பு ஏற்படுத்துகிறது.
3. சிரிப்பு அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

பெரியவர்களுக்கும் சிரிப்பு அதே நன்மையைத்தான் செய்கிறது.

நல்ல நகைச்சுவை நோயாளர்களை குணப்படுத்தும் என்று மருத்துவ வல்லுநர்களே கூறியுள்ளனர்.

சில நேரங்களில் சிரிப்பு தொற்றுநோய் போல பரவியதும் உண்டு.

1962ம் ஆண்டு ஒரு சம்பவம்:

பெண்கள் பாடசாலையில் குபீரென்று வெடித்த சிரிப்பலை பாடசாலை மாணவிகள் அனைவரையும் தொற்றிக் கொண்டது. அத்தோடு விட்டதோ- பக்கத்து கிராமங்களுக்கும் பரவிவிட்டது. எல்லோரும் சிரிக்கத் தொடங்கி விட்டார்கள். பாடசாலைகள் மூடப்பட்டன.

சிரித்துக் களைத்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

ஏன் சிரித்தார்களாம்?

அதுதான் இதுவரை யாருக்கும் தெரியவில்லை என்பதும் ஒரு சிரிப்புத்தான்.



## வயதாகும் போது வதனமும் மாறும்

பிரித்தானிய இளவரசி டயானா பேரழகி. டயானாவுக்கு இப்போது 31 வயது. வசீகரமான வதனத்திற்குரிய டயானா, வயதாகிப் போனால் எப்படியிருப்பார்? இங்கு உள்ள படங்களைப் பாருங்கள். உங்களுக்கும் கவலை வரும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பாக்கியம் ராமசாமி

# மனித வெடிகுண்டு

*அப்புசாமி:* ஐயோ! லாஸ்ட் ஸிக்னல் கொடுத்திட்டாங்க. இன்னும் ஒரே ஒரு நிமிஷம்தான் இருக்கு.

*மானேஜரின் அறைக்கதவு 'டொக் டொக்', என்று நாசூக்காகத் தட்டப்படுகிறது. சீதாப்பாட்டி!*

*சீதாப்பாட்டி:* மே ஐ கமின் சார்?

*மானேஜர்:* ஐயோ! வராதீங்க! வராதீங்க!

*காஷியர்:* மேடம்! ஓடிடுங்க, ஓடிடுங்க!

*அப்புசாமி:* அடியே கியவி! எங்கேடி இப்போ வந்து சேர்ந்தே? ஓடிடு! ஓடிடு! பீஸ் பீஸாப் போயிடுவே. நீ பொல்லாத பிசாசு தான்னாலும் என் பொண்டாட்டி! நீ நீண்டகாலம் இந்த மண்ணுலகில் விதவையாக இருந்து விட்டுப் பிறகு எம்மை வந்து சேர்வாயாக...

*சீதாப்பாட்டி:* என்ன பேத்தறீங்க? வாட்ஆர் யூ டுயிங் ஹியர்?

*அப்புசாமி:* பண்றேன்டி பானையும் சட்டியும். வயிற்றிலே குண்டைக் கட்டிவுட்டுட்டாங்க. இந்த ஆளுங்களோ ரூபா கட்டுக்களை இப்ப தான் எண்ணிக்கிட்டிருக்காங்க. சீதே! இன்னும் ஒரு நிமிஷத்திலே நாமெல்லாம் தூள் தூளாயிடுவோம்.

*சீதாப்பாட்டி:* மை காட்! உங்களை ஹ்யூமன் பாம் பண்ணிட்டாங்களா? அவங்க எங்கே சொல்லுங்க உடனே, உங்க உயிர் முக்கியமில்லை. அந்தத் தேசவிரோத சக்திகளை உடனே கண்டுபிடிக்க போலீஸுக்கு உதவணும்.

*காஷியர்:* தாயே! நீங்கதான் பாரதமாதா! என்ன தேசப்பற்று! வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரதமணித்திருநாடு! வந்தே மாதரம் ! வந்தேய்...ய் மாதரம்!

*அப்புசாமி:* அட காஷியர் பையா! குண்டு விழுந்துக்கிட்டிருக்கிற நேரத்திரலே குளுகுளு ஐஸ்க்ரீமா? நோட்டைத் தூக்கிக்கிட்டு ஓடுங்கடா? இதோ குண்டுகிட்டேருந்து இன்னொரு ஸிக்னல் டிர்ரிங்குனு அடிக்குது பாரு. சீதே! சீதே! ஓடிடு! இரண்டாம் பெல்லும் அடிச்சிட்டுது. வீரத் தியாகியாக நான் செத்துடறேன்.

*சீதாப்பாட்டி:* (அமைதியாக) இப்படி கொஞ்சம் தனியா வாரீங்களா? உங்களோட கொஞ்சம் அந்தரங்கமாப் பேசணும்.

*அப்புசாமி:* சீதே வெடிச்சுச் சாகப் போறவன் மேலே இப்பதான் உனக்கு அன்பு ஏற்பட்டிருக்கு. அன்புன்னு நான் சொல்றது ஹிஹி! காதல்! லவ்! ஈரமான ரோஜாவே! து........து! காரமான ரோஜாவே.

*சீதாப்பாட்டி:* மிஸ்டர் மானேஜர், காஷியர், நீங்க ரெண்டு பேரும் கொஞ்சம் அறையை விட்டுவெளியே போகிறீர்களா?

*அப்புசாமி:* சீதே! முதல் முத்தம் மாதிரி கடைசி முத்தம் கொடுத்து, என்னை அனுப்பி வைக்கப் போறியா? மனசுக்குள்ளே என் மேலே இத்தனை ஆசையா உனக்கு? உன் கர்வத்தைத் தவறா எடை போட்டு, காலமெல்லாம் உன்னை எதிரியா நினைச்சுக் கசப்பாக்கிக் கொண்டு விட்டேனே. என் கண்ணாட்டி... பாகற்காயென எண்ணிவிட்டேன். பாகுடி நீ கண்ணம்மா...

*சீதாப்பாட்டி:* மண்ணாங் கட்டி! நான் கேட்கப் போகிற கேள்விக்கு உண்மையை மறைக்காமல் பதில் சொல்லுங்க.

*மானேஜர், காஷியர்:* பொட்டிகள் தயார். ஆட்டோ நம்பர் என்னவோ சொன்னீங்களே...

*சீதாப்பாட்டி:* மிஸ்டர் மானேஜர்! ப்ளீஸ் வெயிட்!

*அப்புசாமி:* ஏண்டி வெய்ட்டணும்? இன்னும் அரை நிமிஷம் கூட இல்லை.

*காஷியர்:* நம்ம கடியாரம் ஃபாஸ்ட் சார். இன்னும் ஒன்றரை நிமிஷம் இருக்கு.

*சீதாப்பாட்டி:* தாங்க்யூ! ஒன்றரை நிமிஷம்... நைன்ட்டி செகண்ட்ஸ் ... அதற்குள் எத்தனையோ சாதிக்க முடியும்!

*அப்புசாமி மானேஜர், காஷியர்:* எப்படி?

சீதாப்பாட்டி அப்புசாமியை, பிளாக்மார்கெட் டிக்கெட் காரனை மஃப்டி போலீஸ் ஓரம் தள்ளிக் கொண்டு போவது போல ஒரு பக்கமாக அழைத்துச் சென்றாள்.

அதற்குள் அப்புசாமியின் வயிற்றிலிருந்த குண்டு, கிரிக் கிரிக் என்று ஒலித்து தனது எச்சரிக்கையை மீண்டும் தெரிவித்தது.

"ஐயோ! சீதே!" அலறினார் அப்புசாமி. "இறுதி எச்சரிக்கை ! இன்னும் அரை நிமிஷத்தில் நாம் தூள் பக்கோடாவா ஆகி விடப் போறோம். மரணத்திலாவது ரெண்டு பேரும் இணைவோம். என்னைக் கட்டிப் பிடிச்சுக்கோ. 'இன்னும் எத்தனை ஜென்மமெடுத்தாலும் நீ எனக்குப் பெண்டாட்டியாக வரக்கூடாது' என்று சொல்லிக் கொண்டே பீஸ் பீஸாகப் போறேன். சீதே! சீதே! இன்னும் கால் நிமிஷம்தான் இருக்கிறது."

சீதாப்பாட்டி பதற்றமில்லாமல், அப்ஸல்யூட் மெஜாரிட்டி கிடைத்த ஆட்சி போல, அலட்டிக் கொள்ளாமல் இருந்தாள். "மரியாதையாக உண்மையைச் சொல்லிவிடுங்கள். ஆர் யு நொட் அஷேம்ட் ஒஃப் திஸ் கைன்ட் ஒஃப் சீட்டிங்? இது ரொம்ப ஸீரியஸ் ஒஃபென்ஸ். திஸ் மச் ஒஃப் துணிச்சலும் ஐடியாவும் உங்களுக்கு எப்படி வந்தது?"

"சீதே! நீ என்ன சொல்றே?"

"என்ன சொல்கிறேனா? இது போலிகுண்டுதானே? ஹ்யூமன் பாமாக்கும்? அதாக்கும், இதாக்கும் என்று மிரட்டி பேங்க்கையே கொள்ளை அடிக்கப் பார்க்கிறீர்களா?"

"சீதே! என்னடி சொல்றே? இன்னும் அரைக்கால் நிமிஷத்திலே தூள்தூளாகப் போகிறேன். இப்பக் கூடத் திட்டறியே. இப்படிப்பட்ட தேசவிரோத காரியமெல்லாம் நான் செய்வேனாடி? உனக்குக் கண்ணு பொட்டையில்லைன்னா, ஜன்னல் வழியா எட்டிப் பார். பாங்க் வாசலின் பின்னாலே 0034 ZY நம்பருள்ள ஒரு ஆட்டோவும், ரெண்டு பயங்கரவாதிகளும் காத்திருக்கிறது தெரியும். எனக்குக் குண்டைக்கட்டி அனுப்பியது அவர்கள் தான். ரிமோட் கண்ட்ரோலை அழுத்திட்டாங்கன்னா நான் பலூன் மாதிரி வெடிச்சுப் போயிடுவேன் சீதே. பிராணனை விடறதுக்கு முன்னே அவசரமாக் கேட்கிறேன். 'பிராண நாதா'ன்னு பிரியமா ஒரே ஒரு தரம் என்னைக் கூப்பிடு. மூணு தரம் கூப்பிட டயம் இருக்குமோ, இருக்காதோ?" –அப்புசாமி தன் கண்ணைத் துடைத்துக் கொள்வதற்குப் பதில், மறந்து போய் சீதாப்பாட்டியின் கண்ணைத் துடைத்தார். பாட்டி சரேலென விலகிக்கொண்டாள்.

"நான் உங்களை 'நாதா'ன்னு கூப்பிடத் தயாரில்லை. நீங்க பலூன் மாதிரி வெடித்தாலும் சரி, பம்ப்கின் மாதிரி பேஸ்ட்டானாலும் சரி, கும்பலோடு சேர்ந்ததற்கு வெடித்தே சாகுங்கள். நீங்கள் வெடித்துச் செத்த பிறகும் கூட, உங்களைக் கணவர் என்று சொல்லிக் கொள்ள மாட்டேன். ஒரு சொட்டுக் கண்ணீர் விட மாட்டேன். நோ ரிக்ரெட்ஸ். இன்னும் பெரிசா குங்குமம் வைத்துக் கொள்வேன். பூச்சூடி மகிழ்வேன். புதிதாக வைரத் தோடு போட்டுக் கொள்வேன். நானே இந்தக் குண்டின் பட்டனை அழுத்தப் போறேன்."

"அடியே பாவி! தொடாதே! தொடாதே! புருஷனையே கொலை பண்ணினாள் என்கிற கெட்ட பெயர் வேண்டாம்டி. எப்படியும் இன்னும் அரைக் கால் செக்கண்டில் தானாக வெடிக்கப் போகிறது. அந்த அரைக்கால் வினாடிக்குள் ஒரு சொட்டுக் கண்ணீரை எப்படியாவது சிந்தி, இத்தனை யுகமாக என்னை அடிமைப் படுத்தி, கேவலப்படுத்திக் கொண்டிருந்த பாவத்திலிருந்து உன்னை விடுவித்துக் கொள். இல்லாவிட்டால் இரண்டு பேரும் ஆவியான பின்னும் இதே மாதிரி சண்டை போட்டுக் கொண்டிருப்போம்."

அப்புசாமி பேசிக் கொண்டிருக்கும் பேதே சீதாப்பாட்டி அவசரமாக மானேஜரிடம் சென்றாள். அவர் தலைமையில் ஜரூராக ரூபாய் நோட்டுக் கற்றைகள் பெட்டியில் அடுக்கப் பட்டு, பாங்க்கின் பின்புறமுள்ள வாசலுக்குப் போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தன.

சீதாப்பாட்டி, "மிஸ்டர் மானேஜர்! ப்ளீஸ் கரென்ஸிக் கற்றைகளை பழையபடி லாக்கரில் வைக்கச் சொல்லுங்கள். த பாங்க் இஸ் நாட் பார்ட்டிங் வித் இட்ஸ் மணி" என்றாள்.

மானேஜருக்குக் கை உதறிக் கொண்டிருந்தது. "மேடம்! எட்டிப் பாருங்கள் பயங்கர வாதிகளின் ஆட்டோ தெரிவதை. ரிமோட் கண்ட்ரோலைக் கையில் வைத்துக் கொண்டு, இரண்டு பேர் இருக்கிறார்கள்!"



தமிழ் நாட்டில் அப்புசாமி கதைகள் மூலம் பிரபலமானவர் பாக்கியம் இராமசாமி.
மனித வெடிகுண்டுகள் கிலியூட்டும் காலமன்றோ இது.
காலத்திற்கு ஏற்ப அவர் வழங்கியுள்ள படைப்பு இது.
தமிழக கதைக் கதிரில் பிரசுரமானது.

பதைப் பார்க்கிறேன். ஒருத்தன் சிவப்புச் சட்டை இன்னொருத்தன் ப்ளு கோடு போட்ட..."

"மிஸ்டர் மானேஜர், தாங்க்யூ ஃபார் யுவர் ரன்னிங் கொமன்ரி. எது எப்படி ஆனாலும், இந்தத் தெருவே பொடிப்பொடியாக ப்ளாஸ்ட் ஆனாலும், அவர்களுக்குப் பணம் நாம் தரப்போவதில்லை" என்றவள், பொறுமையாக அவரை அழைத்துக் காதோடு ஏதோ சொன்னாள்.

அப்புசாமி சிறிது தூரத்திலிருந்து, "அடியே கியவி! அவன் காதை ஏண்டி கடிக்கிறே? என் குண்டு பட்டனை அவனை விட்டு அழுத்தச் சொல்லப் போறியா? துரோகி...அப்படிப் பண்ணினால் மட்டும் கணவனைக் கொலை பண்ணின பாவத்திலிருந்து டபாய்ச்சுடலாம் என்று நினைத்து விடாதே. நீயும் வெடிச்சு ஆவியாயிடுவே. நானும் வெடிச்சு ஆவியாயிடுவேன். ஆவிக்கும் ஆவிக்கும் போர்! போர்! போர்! போர்! புனிதன் காந்தி வந்த திசையிலே போர்! போர்! போர்!"

மானேஜர், "மேடம்! இவ்வளவு ரிஸ்க் எடுத்துக் கொள்ளலாமா?" என்றார் நடுக்கத்துடன்.

"டோன்ட் வொறி மைடியர் ஜென்டில் மேன். யாரோ டாமில் ஸ்காலர் சொன்ன மாதிரி, கோழைகள் கோடிதரம் சாகிறார்கள். நான் சொன்னமாதிரி செய்யுங்கள். க்விக்!"

அடுத்த கணம் பெட்டிகளிலிருந்த ரூபாய் கட்டுக்கள் அவசர அவசரமாக நீக்கப்பட்டு, அதற்குப் பதில் பாங்கின் கனத்த கணக்குப் பேரேடுகள் பெட்டியில் வைத்து மூடப்பட்டன. அவசரப் போலீஸுக்குப் ஃபோன் செய்யப்பட்டது.

"யேஸ் ஜென்டில்மேன்" என்றாள் சீதாப்பாட்டி, அப்புசாமியிடம் "வி கான் ப்ரொஸீட்... எல்லாம் ரெடி"

அதற்குள் குண்டுக்குள்ளிருந்து இறுதி எச்சரிக்கை மணியாக, 'கிர்ர்ர்ரிங்!' என்ற நீண்ட ஒலி எழும்பியது.

"ஐயோ! நான் செத்தேன்!" என்று அப்புசாமி சீதாப்பாட்டியை கபாலென்று கட்டிக் கொண்டார்.

"ஸ்டுப்பிட்!" என்று கரப்பான் பூச்சியை உதறுவது போல உதறினாள். "கொஞ்சம் டீசன்ட்டாகப் பழகுங்க"

"சாகிறவனுக்கு சமுத்திரம் முழங்கால் ஆழம். கட்டினவள் கணுக்கால் ஆழம். ஆமாம்... இன்னும் ஏன் நான் வெடிச்சுச் சாகலை?"

"இந்த ஆபரேஷன் ஹ்யூமன் பாம் முயற்சி முறியடிக்கப்பட்டதும், எவ்ரி திங் வில் பி எக்ஸ்ப்ளெயிண்ட்."

பத்திரிகைகளில் மறுநாள் பரபரப்பாகக் கீழ்கண்ட செய்தி வெளியாகியிருந்தது.

'வீரப் பெண்மணி சீதாவின் சாகஸம்! மனித குண்டுக் கும்பலைக் கூண்டோடு பிடிக்க உதவினார்! பதினைந்து லட்ச ரூபாய் காப்பாற்றப்பட்டது!'

....நுங்கம்பாக்கத்திலுள்ள ஒரு முக்கிய வங்கியில் பட்டப் பகலில் பயங்கரவாதக் கும்பல் ஒன்று ஓர் ஆசாமியின் வயிற்றில் போலியான வெடிகுண்டை கட்டி வங்கியை நடுங்க வைத்தனர்.

அப்பாவி!

குண்டு கட்டி அனுப்பப்பட்ட ஆசாமி ஓர் அப்பாவிக் கிழவர். அவர்கள் அவரை மிரட்டிப் போலிக் குண்டை வயிற்றில் கட்டி வங்கிக்கு அனுப்பினர்.

டால்டா டப்பா

ஒரு டால்டா டப்பாவுக்குள் ஒரு கடிகாரத்தை வைத்து, மேலே குண்டு போல கறுப்புத்துணி சுற்றி, டோர்ச்லைட் மூலம் குண்டு டப்பாவில் விளக்கு எரியும் படி செய்து நிஜ குண்டுபோலப் பரபரப்பு ஏற்படுத்தி, பணம் கொள்ளையடிக்க அவர்கள் போட்ட திட்டம் தவிடு பொடியாயிற்று.

பாட்டிகள் முன்னேற்றக் கழகத் தலைவியும், சிறந்த சமூக சேவகியுமான செல்வி சீதாப்பாட்டி அவர்கள், குண்டிலிருந்து வெளிவந்த சத்தத்தைக் கூர்மையாகக் கவனித்து, 'இது போலிக் குண்டு. உள்ளே ஒரு சாதாரண அலாரம் கடிகாரம் தான் இருக்க வேண்டும்' என்று பாங்க் மேனேஜரிடம் உறுதியாகக் கூறி, கரென்ஸிக் கட்டுக்குப் பதில், பேரேடுகளைப் பெட்டியில் போட்டுப் பயங்கரவாதிகளிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்தார்.

தகுந்த சமயத்தில் அருகிலிருந்த ஸ்டேஷனிலிருந்து போலீஸ் படை கமிஷனர் திருவாசகம் மற்றும் கந்தரலங்காரம் ஆகியோர் தலைமையில் போலீஸ் படை வந்து பயங்கரவாதக் கும்பலை வளைத்துப் பிடித்து விட்டனர்.

செல்வி சீதாப்பாட்டியின் கூரிய அறிவைப் பாராட்டி, ஒரு புது மந்திரி (பெயர் ஞாபகமில்லை) நமது நிருபரிடம் பேசினார். "இம்மாதிரி தீரப் பெண்மணிகளால்தான் தமிழகத்தைக் காப்பாற்றமுடியும். புரட்சி செல்வி மாண்புமிகு டாக்டர் அவர்கள் காவல் தெய்வமாகத் தமிழகத்தைக் காப்பாற்றி வருகிறார். அவரது ஆட்சியில் தான் தீரப் பெண்மணிகள் தோன்ற முடியும். வாழ்க புரட்சி செல்வி! அண்ணா நாமம் வாழ்க! புரட்சி செல்வி நாமம் வாழ்க!" என்று கூறினார்.

செல்வி சீதாவுடன் இந்தியன் வங்கி சேர்மன் கோபால கிருஷ்ணனும் படத்தில் இருப்பதைக் காணலாம். விரைவில் செல்வி சீதாவுக்கு 'வங்கிகள் நல நிதி'யிலிருந்து ஒரு பரிசு வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அப்புசாமி ஒரு டால்டா டப்பாவைப் பரிதாபமாகத் தட்டியவாறு, "அடியே கியவி! நீ செல்வி சீதாவாமே? கியவிங்கறது தவறுதலா அச்சாயிருக்குமோ? எப்படியோ என்னாலதானே உனக்கு இவ்வளவு பெரிய பெயர், புகழ்? பணம் வேற வரப்போகுது."

"அப்படி ஏதாவது வந்தால் அதை முதியோர் நல வளர்ச்சிக்கு பா.மு.கழகத்தின் சார்பில் கொடுத்து விடுவதாக இருக்கிறேன்."

"நானும் ஒரு முதியவன் தாண்டி. என்னுடைய நல வளர்ச்சிக்கு இப்போதைக்கு ஒரு ஆறரை ரூபாய் தள்ளு!"

"அது என்ன கணக்கு?"

"ஒரு பிளேட் வடை சாம்பார்! அடியே கியவி! ஊருக்கெல்லாம் தானம் பண்ணுவே. எனக்கு மட்டும் ரூபாய் தரமாட்டே. பரவாயில்லை. ஆமாம், என் வயித்திலே கட்டியிருந்தது போலி குண்டு தான்னு எப்படிக் கண்டுபிடிச்சே. நீ சொன்ன மாதிரியே போலிஸ் வந்து பிரிச்சப்போ ஒரு அலாரம் கடிகாரம் தான் உள்ளே இருந்தது."

"உங்களுக்கு கண்ணுன்னு ஒண்ணும் மெமரின்னு ஒண்ணும் இருந்தால், அது நம்ம வீட்டுலே போன வாரம்– என் பெட்ரூம் ஜன்னல் கிட்டேயிருந்து திருட்டுப் போன கடிகாரம்தான்னு தெரிந்திருக்கும். நம்ம அலாரம் கடிகாரத்துக்கு ஒரு பெக்யூலியர் காரெக்டர் உண்டு. நீங்கள் நோட் பண்ணியதில்லை. கிர்ரிக் என்று தொண்டை கட்டினாப்பலே முதலில் செருமும். அப்புறம் கிணிங் என்று காற்றிலே மணி அசைந்த மாதிரி ஒரு ஓசை. அப்புறம் மூணாவது தடவை கிர்ர்ர் என்று கட்டைத் தொண்டை ஒலி. கடைசியாத்தான் உசிர் போற மாதிரி உரக்க மணி அடிக்கும்."

"கடிகாரத்தைத் திருடி நீங்களே குண்டு புரளி செய்றீங்களோன்னு முதலில நினைத்துவிட்டேன். அப்புறம் நீங்க கதறின கதறலில் உங்களை டம்மியாக வைத்து அதே கடிகாரத் திருட்டுப் பயல்கள் பெரிய கொள்ளைக்கு பிளான் பண்ணியிருப்பார்களோ என்று தோன்றியது. என் ஊகம் ஹண்ட்ரட் பர்செண்ட் கரெக்ட்."

"சீதே! நீ எப்பவும் எல்லா விஷயத்திலும் கரெக்ட்தான். எனக்கு துட்டு தர்ர விஷயத்தைத் தவிர" என்றார் அப்புசாமி. ●

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

**பக்கச்சார்பு இல்லாமல்**

அரசியல் அலசல் பகுதி பக்கம் சாராமல் ஆய்வு செய்கிறது. ஏதாவது ஒரு பகுதியை மட்டுமே விமர்சனம் பண்ணி பக்கச் சார்பு காட்டும் முறையை தினமுரசாவது மாற்றியுள்ளமை மகிழ்ச்சியே.

**வி.ஏகாம்பரநாதன்**
**மட்டக்களப்பு.**

அதிரடி அய்யாத்துரை வாரா வாரம் அரசியல் கிசுகிசு சொல்லி சிலரது வயிற்றெரிச்சலை கிளப்பு கிறார். அவருக்கு எமது ஆதரவு.

**எம். நசூருதீன்**
**கம்பஹா.**

**எழுத்துப்பிழை, கழுத்திலே சுளுக்கோ?**

என்ன எழுத்துப்பிழைகளைக் கவனிப்பதில்லையா?

கவனமாய் பார்க்கமுடியாமல் கழுத்தில் என்ன உங்களுக்கு சுளுக்கோ? திருத்துக - சுளுக்கை யும் எழுத்துப் பிழையையும்.

**எஸ்.வினோதினி**
**பண்டாரவளை.**

சினிவிசிட் பிரமாதம். ஓடி முடித்த படங்களின் செய்திகளைத் தராமல், உருவாகிக் கொண்டி ருக்கின்ற புதியபடச் செய்திகளை தருவதற்கு தயங்காமல் பாராட் டியே ஆகவேண்டும்.

**ஐ.சுரேந்தர்**
**நுவரெலியா.**

இனிமை தரும் இன்ப மலரே தினமுரசு உன் சேவை தொடரட்டும்!

**பீ. சிவபாலன்**
**தலவாக்கலை.**

வாரத்தில் ஒரு முறை எம்மை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்திடும் தினமுரசே நீ தரும் அம்சங்கள் அனைத்தும் பலே-பலே!

**கே. குமார்**
**வெள்ளவத்தை.**

என்-, இதய தடாகத்திலே
இருக்கும் மலர்
உனக்கு-
இணக்கமுடன் நீயிருந்தால்
இவ்வுலகம்
எனக்கு-
என்றும் உன் சேவை மலர
வாழ்த்துகிறேன்.

**ஆறுமுகம் விஜயகுமார்**
**நுவரெலியா.**

**காத்திருப்பு**

அடுத்த வியாழன் எப்போது வரும் என்று காத்திருக்க வைத்து விடுகிறாய்.

**எஸ். மோகன் தாஸ்**
**வவுனியா.**

**ஆரோக்கிய செக்ஸ்**

செக்ஸ் வக்கிரம் கொண்ட பத்திரிகைகளின் வருகையைத் தடுக்க, ஆரோக்கியமான செக்ஸ் விடயங்களை தருவது வரவேற் கப்பட வேண்டியது.

**அ. அஜீசன்**
**கொழும்பு-14**

**சினிமா வேண்டாம்**

சினிமாவுக்கு பக்கங்களை ஒதுக்குவதற்கு முற்றுப்புள்ளி யிடவும்.

**ஜே.எம்.சித்தீக்**
**கண்டி.**

**அரிச்சந்திரத்தனம்**

உண்மைகளை சுமந்து வந்து தருவதில் அரிச்சந்திரனாகி விட்டாய். தொடரட்டும் பணி.

**மகேஸ்வரன்**
**அக்கரப்பத்தனை.**

எஸ். சனா- கொழும்பு-11, எ.எல்.எம்.மசூர்டின்-கந்தப்பொல, ந.ஜெயசீலன்- அக்கரப்பத்தன, செல்வன் பிரதீப்ராஜ்- முல்ல வெல்லம்பிட்டிய, என்.எல் .அஸ்மி -கும்பலங்கை, எம். ஹயாத் - கொழும்பு-15, வி. தியாகு- கலஹா, நிஸா- வெல்லம்பிட்டிய, நசூர்தீன் - தெல்தொட்ட, கு. பிரமிளா - வெல்லம்பிட்டிய, ஆர், சுசி - கொழும்பு 13, றியாஸ்யூசுப் - கொழும்பு 3, எச். பௌசர்- கட்டு கஸ்தோட்ட, ந. சதீஸ்வரன்-கண்டி, ஜாவத்-புத்தளம். என்.எஸ்.கே. ராஜன்-கொழும்பு11, ஏ. முஹம்மது ஜலீல்-உக்குவெல, க.ஏகாம்பர மூர்த்தி -பண்டாரவளை, இரா. யுவராஜ்-நீர்கொழும்பு, எம்.ஆர்.எம். சிதாரா-மல்வானை. ம. ஸ்ரீகாந்தன் - இங்கிரிய, சரவணேஸ் டெயிசி- கலவான, அ. ஜெயக்குமார்- இராகல, எஸ். துளசி நாதன்- அக்கரைப்பற்று, எஸ். ஜெனவ ராஜா, எஸ். குகராஜா, எஸ். சிவராஜா- வத்தளை, எஸ்.ஏ.எஸ். ஷெல் -கொழும்பு 12, ச. செந்தில்குமார் -லிந்துலை, ரிஸ்வி ரியாழ்- பறகஹதெனிய. அரூஸியா இஸ்மாயில் - பாணந்துறை, பரமேஸ்வரி - ஆல்கரணோயா, என்டன் சுபாசினி- நீர்கொழும்பு, எம்.மோகன் ராஜி- கொழும்பு11, வ. நாகநாதன்- கொழும்பு 13, கே. ராஜன்- நுவரேலியா, செல்வி சுஜானா றஹீம்- புத்தளம், எஸ். வின்சென்ற்- கொழும்பு 13, ரி. கலைவாணி- வத்தளை, ஆர். லோகேஸ்வரன்- கொழும்பு 13, வாஹிட் குத்தூஸ்- பதுளை.

# வாசக(ர்)சாலை

கருத்துமிக்க கவிதைகள்- குறைகளை காட்டும் புகார் பெட்டி, சிந்தியா பதில், முத்தான சிறுகதைகள்- மொத்தத்தில் மனதில் இடம் பிடிக்கும் மலர்.

**க. இரத்தினேஸ்வரன்**
**மட்/புதுக்குடியிருப்பு.**

நாடெங்கும் வாசக இதயங் களை நேயமாக்கிக் கொண்ட தங்கள் வாராந்த இதழின் சுகந்தத்தை நானும் நுகர்ந்தேன். அபாரம்.

**கலீல்கண்டு**
**மல்வானை.**

வாரம் ஒரு முறை மலர்ந்து தித்திக்கும் தேன் சுவையாய் எத்திக்கும் உலாவரும் முத்தான மலரே உன் கவிதைப் போட்டியும்- குறுக்கெழுத்துப் போட்டியும் என் போன்ற மாணவர்களின் திறமை யை வளர்க்கின்றது.

**ஜெய்கணேஷ்**
**புத்தளம்.**

உன் போன்ற பல்சுவை மலரை நான் கண்டதே இல்லை.

**ஏ. எம். இப்திகார்**
**புத்தளம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி இல-04

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | 4 |
| | ■ | 5 | | | | |
| | | | 6 | | | |
| | | | ■ | 7 | | ■ |
| | | ■ | 8 | | | |
| 9 | | | | 10 | | |
| ■ | 11 | | | | ■ | 12 |

**இடமிருந்து வலமாக**

1. இதில் ஏழு நிறங்கள் உண்டு.
3. கடலில் கலந்துவிடும்.
5. யானையின் பலம் இதில்தான் இருக்கிறது (நான்கெழுத்துச் சொல்)
6. இது இருந்தால் தான் மேதை யாகலாம். இதில்லாமலும் சில மேதைகள் இருக்கிறார்கள்.
8. பெண்கள் அணியும் ஒரு வகை ஆடை.
9. இதை எடுப்பதற்காக உயிரைக் கொடுத்துச் சண்டை போட்டவர் களும் இருக்கிறார்கள். (நான் கெழுத்துச் சொல்)
1. பாலில் இருந்து பெறப்படுவது (குழம்பியிருக்கிறது)
11. 365 நாட்கள் உண்டு.

**மேலிருந்து கீழாக**

1. கிழக்கிலே இதைத்தான் நடந்த வேண்டும் என்கிறார்கள்.
2. மகாபாரதத்தில் ஒரு பாத்திரம்.
3. தகவல் பெட்டியில் இஃதைப் பற்றியே ஒரு கட்டுரை உண்டு.
4. பூட்டானின் தலைநகரம்.
6. வகுப்பில் ஆசிரியரின் கேள்வி களுக்கு இதைச்சொல்லாவிட்டால் அடிதான் விழும். (தலைகீழாக உள்ளது)
7. தபாற்காரருக்கு இது ஒரு சுமை.
11. இது போனால் அவ்வளவுதான். (தலைகீழாக உள்ளது)
12. ஹிட்லரின் காலத்தில் இது நிறை இருந்தது. (தலைகீழாக உள்ளது)

இதற்கான சரியான விடையை கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டை ஒன்றில் வெட்டி ஒட்டி 03/07/93 ற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பி வையுங்கள்.

சரியான விடையை எழுதி அனுப்பும் 10 அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/- பகிர்ந்தளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 02ற்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 க | ற் | பூ | 2 ர | ம் | ■ | 3 அ |
| த | 4 ப | ய | ம் | ■ | 5 க | டி |
| வ | ல் | 6 வா | ப | 7 எ | ரு | மை |
| டை | லி | ன | ம் | ■ | மை | ■ |
| ப் | ■ | ம் | ■ | பொ 8 | லி | வு |
| 9 பு | ழு | பா 10 | ர | தி | யா | ர் |
| ■ | 11 வே | டி | க் | கை | ■ | 12 சோ |

**குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் 02ல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.**

1. எல். சாஜகான் கல்முனை.
2. பெ.தேவானந்தன் வத்தளை.
3. செல்வி. சுஜானா ரஹீம் புத்தளம்.
4. அ. துரைசிங்கம் கொழும்பு-05
5. ஏ. சி. நஜீவ் குருணாகல
6. டி. துஷ்யந்தன் கொழும்பு-11
7. வி. சச்சிதானந்தன் திருகோணமலை
8. சி. வல்லிபுரம் கொழும்பு-13
9. எம். இலியாஸ் காத்தான்குடி
10. ஆர். சுகந்தினி பண்டாரவளை
11. எஸ். நரேந்திரன் பதுளை
12. எஸ். என். நிஜாம் நீர்கொழும்பு
13. கு. விஜேந்திரன் ஹட்டன்
14. மு. சதீஷ் கொழும்பு-06
15. பா. ரகுநாதன் புத்தளம்.
16. வி. என். மஃவ்றூப் குருனாகல.
17. ரி. சொரூபா இரத்மலாணை
18. பி. எச். சலீம் கண்டி.
19. யூ. எல். ரஊப் நீர்கொழும்பு
20. சி. ஜெகசோதி ஏறாவூர்
21. ஏ. சந்திரகுமார் பொரலங்கொட
22. க. நிசாந்தன் வவுனியா
23. எச். என். இப்ராஹிம் பொலநறுவ
24. ஜெ. ரவி கொழும்பு-05
25. எம். குமரகுருபரன் சிலாபம்.

இந்த அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப் பணம்ரூபா 500/- பகிர்ந்தளிக்கப்படும்.

# சிந்தியா பதில்கள்

டியர் சிந்தியா, நேரடியாக உரையாடிக் கொள்ளும் காதலுக்கும், தொலைபேசி மூலம் உரையாடிக் கொள்ளும் காதலுக்கும் இடையே வித்தியாசம் என்ன? நன்மைதான் என்ன?

யூ.எல்.எம்.நஸீர்
ராஜகிரிய.

*மலரைக் குதிரையில் இருந்து ரசிப்பதற்கும், அருகில் சென்று ரசிப்பதற்கும் இடையே உள்ள வித்தியாசம். தொலை பேசியில் உரையாடும் போது நேரில் சொல்ல முடியாத சில விசயங்களை சொல்லிவிட முடியும். மற்றும் கை, கால்களுக்கும் அதிக வேலை இருக்காது.*

உங்களை வெட்கத்தில் ஆழ்த்த வேண்டும் என்பதற்காக ஒரு கேள்வி கேட்கட்டுமா?

இ.யுவராஜ்
நீர்கொழும்பு.

*நான் இப்போதே வெட்கப்பட ஆரம்பிக்கட்டுமா யுவராஜ்!*

சுப்பர்ஸ்டார் ரஜனியிடம் காணக்கூடிய சிறப்பம்சம் என்ன?


ரஜனிப்பிரியன்
ஆ.றொபின்சன்
மாத்தளை.

*எளிமை-பழையனவற்றை மறக்காமை.*

ஹலோ சிந்தியா! அன்று இருந்த குஷ்புவுக்கும் இன்று இருக்கும் குஷ்புவுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசம் என்ன?

ஏ.பரீனா
புத்தளம்.

*பரிமாண வித்தியாசம்.*



ஞாபகசக்தி அதிகமுள்ளது ஆண்களுக்கா? பெண்களுக்கா?

எம்.ஐ.எம் முஸாம்மில்
கெகுனாகல

*ஞாபகசக்தி விடயத்திலும் பாகுபாடு தேவைதானா முஸாம்மில். சரி, என்ன கேள்வி கேட்டீர்கள்......?*

அன்பின் சிந்தியா! சென்றவாரம் சமாதானக் குழுவொன்று யாழ் சென்றதே. என்ன மாதிரி? தலைவரைக் கண்டார்களா?

உதயகுமார்
தெகிவளை.

*யார் தலைவர்? யாருடைய தலைவர்? என்னைவிடும். தலைவரும் வேண்டாம். தொண்டரும் வேண்டாம்.*

ஒரு பெண்ணைக் காதலித்து திருமணம் செய்வது சிறந்ததா? இல்லை திருமணத்தின் பின் காதலிப்பது சிறந்ததா?

ஆறுமுகம் விஜயகுமார்
நுவரேலியா.

*காதலித்து கைப்பிடித்தபின்னும் காதலிக்கலாம். காதலிக்காமல் கைப்பிடித்த பின்பும் காதலிக்கலாம். காதலிக்காமல் கைப்பிடித்து காதலிக்காமல் இருப்பதும், காதலித்து கைப்பிடித்து காதலிக்காமல் இருப்பதும் தப்பு விஜயகுமார்.*

தற்போது ஆசியாவில் உள்ள இயக்கங் களில் (கெரில்லா) பலமானது எது?

ப.ரவிராஜ்
கண்டி

*சரியோ, தவறோ, புலிகள் அமைப்புத்தான்.*

மண்ணில் நாங்கள் மனிதராகப் பிறந்திருக்காவிட்டால்?

பி.சிவனேசன்
கம்பளை.

*புல்லாகிப், பூடாகி, புழுவாகி அப்படியே ஒரு ரவுண்ட் போய் வந்திருக்கலாம்.*

தன் உடலின் மேல் அழுக்கை வைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு புத்திமதி கூறுபவர்களைப் பற்றி...?

எஸ். பாஸ்கரன்
பதுளை.

*கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல்லெறிகிறார்கள்.*

நடிகை ரேகாவை முத்தமிட ஆசை. பலிக்குமா?

கே.எஸ்.பாலா
ஹாலி-எல

*ரேகாவும் ரெடிதான்- நீர் ஒரு கதாநாய கனாக மாறினால். அது சரி எந்த ரேகா? இருவர் உண்டு இந்திய சினிமாவில்.*

என் பெற்றோர் காதலித்துத்தான் கல்யாணம் செய்தார்கள். நான் காதல் செய்யும் போது தடுக்கிறார்கள். அது ஏன்?

எஸ்.துளசிநாதன்
அக்கரைப்பற்று

*அதற்குரிய வயது உமக்கு வரட்டும் என்று நினைக்கலாம்.*

தற்கால பாடசாலை மாணவர்களின் ஒழுக்கத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?


பாலகிருஷ்ணன் திருஞானம்
புப்புரஸ்ஸ.

*குறைசொல்ல முடியாது. காலம் மாறுகிறது. பழமை என்ற கண்ணாடியை கழட்டிவிட்டு பாருங்கள்.*

வவுனியாவில் புலிகள் பொதுசனம் மத்தியில் தாக்குதல் நடத்தியது சரியா?

கே. பிரகாஸ்
வவுனியா.

*மாபெரும் பிழை. பாவம் மக்கள். மத்தளத்திற்கு ஒரு பக்கம் தான் அடி. மக்களுக்கோ...*



அன்றைய காதலுக்கும், இன்றைய காதலுக்கும் இடையே என்ன வித்தியாசம்?

ஆதவன்
கொழும்பு-11.

*அன்றைய கறுப்பு வெள்ளைப்படத் திறகும, இன்றைய கலர்ப்படத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் என்று சொன்னால் புதிய காதலர்கள் கோபிக்க மாட்டார்களே?*

மனிதனால் திரும்பப் பெற முடியாதது எது?

ஜானி மதுரலிங்கம்
கொட்டாஞ்சேனை

*இழந்து கொண்டிருக்கும் பொன்னான நேரம்.*

வாழ்க்கையில் சோதனைகளும்- வேதனைகளும் வரும் போது என்ன செய்ய வேண்டும்?

எஸ். மெஹார்பான்ஹசன்.
புத்தளம்.

*வெற்றிகொள்ளும் துணிவையும், சமாளிக்கும் விவேகத்தையும் அதிகளவில் உற்பத்தி செய்ய வேண்டும்.*

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திக்க வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்?

வடிவேல் உதயகுமார்
உன்னாஸ்கிரிய .

*பலர் முயன்றும் வெற்றி பெற்றவர் ஆயர் கென்னத் பெர்னாண்டோ, அவரோடு தொடர்பு கொண்டு பாருங்களேன்.*

தமிழகத்தின் தற்போதைய ஆட்சி கவிழுமா?

எஸ். ரஞ்சிதா
கண்டி.

*மாலுமி 'ஜெ' தப்புக்கு மேல் தப்புச் செய்வதால் கப்பல் தத்தளிக்கிறது. கவிழுமா என்பது இந்திய மத்திய அரசின் கோப அலை எழுவதைப் பொறுத்தது.*

பெண்ணுக்கு ஆண் ஒரு சுமையா?

ப. தவச்செல்வி
சிலாபம்.

*பூவுக்கு வண்டு பாரமா? பூவைக்கும் அப்படித்தான்.*

இலங்கையில் தயாராகும் 'ஷர்மிலாவின் இதயராகம்' ரசிகர்களின் ஆதரவு பெறுமா?

எஸ். சிவபாலன்
வத்தளை.

*பெறவேண்டும் என்று வாழ்த்துவோமே.*

முஸ்லிம்களை புலிகள் கொலை செய்தது சரியா?

என். நிஜாம்தீன்
நீர்கொழும்பு.

*சிந்திக்கக் கூடிய எவரும் சரி என்ற ஒரு சொல்லை கூறமாட்டார்கள். சிந்தியாவால் ஏதோ கொஞ்சம் சிந்திக்க முடியும். எனவே மகா பிழை. வரலாற்றுப் பதிவான பிழை.*

வடக்கே தினம் குண்டுமழை பொழிவது போரை வெல்ல உதவுமா?

ஆர். குகதாஸ்
கொழும்பு.

*உதவுமோ இல்லையோ மக்களின் மனங்களை வெல்ல உதவாது. போரில் வெல்வது தற்காலிகம். மக்கள் மனங்களை வெல்வதே நிரந்தரம்.*

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார்?

எம். தயாநிதி
பூண்டுலோயா.

*நிச்சயமாக நான் இல்லை. அநேகமாக நீரும் இல்லை. பிறகேன் முடியைப் பிய்க்க வேண்டும்?*

செக்ஸ் இல்லாவிட்டால் வாழ்க்கையே இல்லையா?

பி. மகேஸ்வரா
பதுளை.

*வாழ்க்கை ஒன்று இருப்பதால்தானே 'செக்ஸ்' இருக்கிறது.*

-இம்முறை இடம்பெறுவதாகஇருந்த
ரசிகன் எழுதும்
-கண்ணே மதுமிதா-
புதுமை+ இளமைத் தொடர்
— அடுத்த வாரம்—
காரணம் — இட நெருக்கடி

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# பச்சை றிபன்




"டோய் குமார்....... இங்க பார்டா"

"என்னடா அது...?"

"நீ தான் பாரேன்....." ஆனந்தன் தனது இரு கைகளையும் விரித்தான். அந்த மின் விளக்கின் ஒளியில் அவை பிரகாசித்தன. அத்தனையும் முடிச்சவிழ்க்கப்படாத றிபன் துண்டுகள். பச்சை, சிவப்பு, கறுப்பு....... இப்படி பலவர்ணங்களில்.

இளம்பெண்கள் தங்கள் பின்னல் சடையில் கட்டும் றிபன்கள் - இவன் கைகளில்....! அப்படியே கட்டுப் போட்ட மாதிரியே கிடக்கின்றன. பல பெண்களின் சடைகளிலிருந்து அத்தனையும் முடிச்சவிழ்க்கப் படாமல் உருவி எடுக்கப் பட்டவை.

குமாருக்குப் புரிந்து விட்டது. அந்தக் கடைகளை மொய்த்த அந்த பெண்கள் கூட்டத்தை, குமாரையும் இழுத்துக்கொண்டு ஆனந்தன் பின் தொடர்ந்ததும், அவர்களை முட்டி மோதியதும் இதற்குத்தான் போலிருக்கிறது.

ஆனந்தன் துணிந்தவன் தான். அசட்டுத்தைரியம் அவனுக்கு - அதுவும் பெட்டைகள் விடயத்தில் இந்தப் பெடியன்- பொல்லாத வம்புக்காரன்.

மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கப்பிள்ளையார் கோவில் ஆடி அமாவாசை தீர்த்தம் பிரசித்தி பெற்றது. கிழக்கு மாகாணத்தின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் ஆயிரக் கணக்கில் மக்கள் வந்து கூடுவர். தீர்த்தத்துக்கு முதல் நாள் திருவிழா -அன்று தான் அமோக கூட்டம் கடல் அலைபோல் மோதும். தீர்த்தக்குளத்தை அண்டிய பிரதேசம் பல தெருக்களாகப்பிரிக்கப்பட்டு அங்கு பலதரப்பட்ட விற்பனை மையங்கள் முளைக்கும். வெண்கலப் பாத்திரக்கடைகள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்களை விற்பனை செய்யும் கடைகள், சாப்புச்சாமான்கள், பெண்களுக்குரிய அழகு சாதனங்களின் கடைகள்- இவ்வாறு தனித்தனிப் பகுதிகளாக ஒதுக்கப் பட்டிருக்கும். மற்றொரு புறம் கரும்புகள் குவிக்கப்பட்டிருக்கும். அன்னாசிப் பழங்கள் மலைமலையாகக் குவிக்கப்பட்டிருக்கும். எங்கு திரும்பினாலும் கூட்டம் மொய்த்துக்கிடக்கும்.

உண்மையில் கோயில் பூசை கண்டு, திருவிழாவில் கலந்து பக்திசெலுத்தும் கூட்டம் மிகவும் குறைவு. பண்டங்களை வாங்குவோர் கூட்டம் தான் அதிகம். இங்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு நோக்குடன் வருவர். அதில் இளவட்டங்களின் குறிக்கோள் தனிச்சிறப்பானது. ஒருவரோடொருவர் பார்க்க - பேச, புதுப்புது சினேகங்களைப் பிடிக்க மாமங்கப் பிள்ளையார் இந்த வனிதையருக்கும் வாலிபருக்கும் நல்ல சந்தர்ப்பங்களை வழங்குவார்.

குமார் தனக்குள் கணக்குப் போட்டுக் கொண்டான். முதல் நாள் இரவு அந்தக் கூட்டத்தோடு கூட்டமாக தன்னை ஆனந்தன் இழுத்துத் திரிந்தான். ஐந்துபேர் கொண்ட ஒரு இள மங்கையர் குழு...அத்தனை பேரும் சுமார் 17-18 வயதுக்குட்பட்டவர்கள். பெண்களுக்கான அழகு சாதனப் பொருட்கள் குவித்துவைக்கப் பட்டிருக்கும் க்டைகளை அவர்கள் ஒன்றாகவே மொய்ப்பர். இவர்களை ஆனந்தனும் தொடருவான்.

அந்தக்கடையில் கியூரெக்ஸ்- நகப்பூச்சுப் புட்டியின் விலையைக் கேட்டாள் அவர்களில் ஒருத்தி.

ஆனந்தன் இடைமறித்து அவளை இடித்துக்கொண்டு அந்த கியூரெக்ஸ் பெட்டியின் அருகே இருந்த குரங்கு பொம்மையை எடுத்துத் தரும்படி அந்தக்கடை சிப்பந்தியைக் கேட்டான்.

சிப்பந்தி திண்டாடித் திணறினான். குரங்கு பொம்மை அளவில் பெரியது. சிப்பந்தியின் கையில் முதலில்பட்டது. எடுத்து ஆனந்தனிடம் நீட்டினான். மங்கையர் கூட்டத்துக்குப் பொத்துக்கொண்டு , வந்தது கோபம். "சார்பூர்" என்று வசைமாரிகள்- ஆனந்தனும் விட்ட பாடில்லை. எதையெதையோ சொன்னான். இடையில் குரங்கோ, கியூரெக்சோ எதுவுமே விலைபோகவில்லை. சிப்பந்தியின் முணுமுணுப்பு மங்கையரின் சங்கநாதத்தோடு சங்கமமாகியது.

இந்த மோதல் முடியவில்லை. காப்புக்கடையை அணுகிய அந்த வனிதையருடனும் முண்டியடித்துப் பேரம் பேச ஆனந்தன் முனைந்துவிட்டான். அவர்கள் பளிங்கு வளையல்களைத் தெரிவு செய்யும்போது ஆனந்தன் அவன் அக்காவின் குழந்தைக்கு சங்கு வளையலும் அவன் தங்கைக்கு பிளாஸ்ரிக் வளையலும் வாங்க முண்டிக்கொண்டு போய் விடுகிறான்- குமாரையும் துணைக்கு அழைத்துக் கொண்டுதான்!

குமாருக்கும் இந்தக் குறும்புகளில் ஈடுபட கொள்ளை ஆசை தான். ஆனால் அதற்கேற்ற துணிவு அவனிடம் துளிகூடக் கிடையாது. இதில் நாட்டமில்லாதவன் போல் இழுபட்டான்.

இந்த இரவு மோதல்களின் அறுவடைதான் ஆனந்தனின் கையில் காணப்பட்ட றிபன் துண்டுகள்.

கடையில் பொருட்கள் வாங்குவதுபோல் முட்டிமோதி 'நைஸா'க அவர்களின் பின்னல் சடையில் கட்டித் தொங்கவிடப் படும் றிபன்களை உருவி எடுத்து விடுகிறான். இத்தனையும் "சாதித்த" வெற்றிக்களிப்புடன் தன் விருதுகளை குமாரிடம் பெருமையாகக் காட்டினான் ஆனந்தன்.

அருகேயிருந்த "சர்பத்" கடைக்கு தன் வெற்றியைக் கொண்டாட - குமாரை அழைத்துக் கொண்டு போனான். ஐஸ்போட்டு ஜில்லென்றிருந்த சர்பத் பானத்தை குமார் ரசித்துக்குடிக்கும் வரை ஆனந்தனால் பொறுத்திருக்க முடியவில்லை. பாத்திரத்தைப் பறித்து கடை சிப்பந்தியிடம் கொடுத்து விட்டு குமாரை இழுத்துக்கொண்டோடினான். அங்கும் இங்கும் ஓடினார்கள். கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு ஆனந்தன் பறந்தான். இந்த வேகத்தைத் தாங்க முடியாத அந்த மக்கள் கூட்டம் திட்டித்தீர்த்தது.

அப்பாடா...ஓட்டம் நின்றது. ஆனந்தன் தேடிய அந்த மங்கையர் கூட்டம்- அதோ அந்த மரத்தடியில், கொஞ்சம் இளைப்பாற - கடைகளில் அலைந்த களைப் புத்தீர- அமர்ந்திருந்தது. அவர்களின் அருகே ஒரு பத்தடி தள்ளி ஆனந்தன் அமர்ந்தான்- குமாரையும் இழுத்து இருக்க வைத்தான். அன்றைய அறுவடை றிபன்களை ஒவ்வொன்றாக எடுத்து அவற்றிலிருந்த இழு முடிச்சுகளை அவிழ்த்தான். ஒவ்வொன்றும் ஒன்றரை முள நீளம் வரை இருந்தது. அவற்றை நடுவிரல் நுனியிலிருந்து முளங்கை வரை நீட்டி அளந்தான். "அவர்"களுக்குக் கேட்கக்கூடியதாக- "சிவப்பு ஒரு அடி ஏழு அங்குலம்... நீலம் ஒரடி எட்டு அங்குலம்... அடடே இந்தப் பச்சை கிட்டத்தட்ட இரண்டடி வரை இருக்குடா....." என்றான் ஆனந்தன். அதுகளின் காதுகளில் இதுகேட்காமலாயிருக்கும்? கண்களிலும் பட்டு விட்டது. அப்போதுதான் "அதுகள்" அததுகளின் பின் புறமுள்ள பின்னல்சடைகளை முன்னால் எடுத்துப் பார்த்ததுகள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு றிபன் குறைந்தது. வசைபாட ஆரம்பித்தார்கள்.

அப்போதுதான் குமார் அவர்களை நேருக்கு நேர் பார்த்தான். அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவனுடைய அக்கா கணவன்-அத்தானின் ஒன்றுவிட்ட தங்கை விமலாவும் அந்தக் குழுவில் காணப்பட்டாள். அவளுடைய ஒரு சடையில் பச்சை றிபன் காணப்பட்டது. மற்றச் சடையில் றிபன் இல்லை. ஒவ்வொன்றாக ஆனந்தன் எண்ணியெண்ணி அளந்து அவனிடம் கொடுத்தான். அந்தப் பச்சை வர்ண றிபன் குமாரின் கையில் அப்போது தொங்கியது. விமலா குமாரைப் பார்த்த பார்வை மதுரையை எரித்த கண்ணகியை அவனுக்கு நினைவூட்டியது.

அந்த வனிதையர் கூட்டம் அவர்களை வைதது. அந்தக் குழுவில் கண்டதும் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து விடுபடாத- குமாரின் காதுகளுக்குள் அவர்கள் செய்த அர்ச்சனை எதுவும் ஏறவில்லை. தன் பொல்லாத அக்காவின் காதுகளுக்கு றிபன் பறிப்பு விளையாட்டு பற்றி விமலா போட்டு விட்டால்......! அதை நினைக்கவே குமாரால் முடியவில்லை. கூனிக்குறுகிப் போனான்.

பள்ளிப்படிப்பின் இறுதிப் பரீட்சையில் குமாரும் ஆனந்தனும் சித்தியடைந்து, எழுதுவினைஞர் பரீட்சைக்குத் தோற்றி விட்டு முடிவுகளை எதிர் பார்த்துக்கொண்டிருந்த வேளை அது. இதனால் ஓரளவு வீட்டுக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு கொஞ்சம் சுதந்திரமாகத் திரிந்த காலம். வனிதையர் கூடும் இடங்களையெல்லாம் வாலிபர் வட்டமிடுவதற்கு வாய்ப்பான காலமும் கூட. இந்த வேளையில் வந்த மாமாங்கத்தீர்த்தம் இரு திறத்தாருக்கும் இன்பக்கிளுகிளுப்புக்கு ஏற்ற தருணம்.

அந்த இளமங்கையர் கொடுத்த 'டோஸ்' ஆனந்தனின் காதுகளில் விழுந்திருக்க வேண்டும். முகத்தை என்னவோ போல் வைத்துக் கொண்டான். கொஞ்ச நேரம் இருவரும் பேசவில்லை. மணி சாமம் கடந்து மூன்றாகி விட்டது. தங்கள் சால்வைகளை மணலில்விரித்து படுத்துக் கொண்டனர். விடிந்ததும் தீர்த்தத்துக்கான ஆயத்தங்கள் ஆலயத்தில் நடைபெற்றன. இருவரும் காலைக்கடன்களை முடித்துக் கொண்டனர். ஆனந்தனின் அடுத்த நடவடிக்கை எதுவாக இருக்கும் என்று குமார் சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே ஆனந்தன் ஆலயத்தை நோக்கி நகர்ந்தான். குமாருக்கும் அதுதான் சரியெனப்பட்டது. விமலாவின் கண்களில் மீண்டும் பட அவனுக்குத் தைரியம் இல்லை.

தீர்த்தமும் முடிந்து வீடு திரும்பிய குமாருக்கு எதிலும் மனம் ஓடவில்லை. அதே தெருவில் ஆறாவது வீட்டிலிருக்கும் அவனுடைய அக்கா பூரணி எப்போது வந்து தன்மீது சொல்லம்புகளை வீசுவாளோ என்ற பயம் பிடுங்கித்தின்றது. அக்கா அவன் வீட்டுக்கு ஒரு நாளுக்கு ஒரு தடவையாவது வருவாள். இரண்டு மூன்று நாட்கள் அவள் வரும் தருணங்களில் அவன் வீட்டில் தங்காமல் எங்காவது போய்விடுவான்.

அன்று மாலை வீடு திரும்பும் போது, அக்கா வீட்டு வாசலில் நின்றாள். அவனுக்குத் தலை சுற்றியது. அவனைக் கண்டதும் "அம்மா இந்தா குமார் வாறான் அம்மா" என்று பலத்த சப்தமாகக் கத்திக் கொண்டு உள்ளே ஓடினாள். அவனுக்கு பூமி இருந்த இடத்தில் வானம் கிடந்தது போன்று இருந்தது. கீழே விழுந்து விடாமல் கேற்றை ஒரு கையால் பிடித்துக் கொண்டான். அம்மா ஓடி வருவது தெரிகிறது. அவனுடைய உள்ளத்தில் விமலாவின் வெறித்த பார்வை அப்படியே நின்றது.

ஓடிவந்த அம்மா அவனை வாரி அணைத்து இரண்டு கன்னங்களிலும் முத்தமழை பொழிந்தாள். திட்டு வாங்குவதற்குத் தன்னைத் தயாராக்கிக்கொண்டிருந்த அவனுக்கு இது என்ன வரவேற்பு! திகைத்தான். மண்டபத்தை மெல்ல- அம்மாவின் அரவணைப்புடனேயே சென்றடைந்தான்.

எப்போதும் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகத்துடன் காணப்படும் அவனுடைய அக்கா பூரணியின் முகம் அன்று பூரண நிலவுபோல் இருந்தது. அவளுடைய கையில் ஒரு நீண்ட உறை.

"டேய் தம்பி குமார்! நீ கிளறிக்கல் சோதனை பாஸாயிட்டே.... இந்தா உன்ன கொழும்புக்கு இண்டர்வியூவுக்கு வரட்டாம்... விமலாதான் வாசிச்சிச் சொன்னவ...."

வெடிகுண்டை எதிர்பார்த்தவனுக்கு வானவேடிக்கை வரவேற்பு...!

அன்று கண்ணகி உருவில் கண்ட விமலா கதவு இடுக்கில் கண் புதைத்து அவனைப்பார்த்து நின்றது அவனுக்குத் தெரிந்தது.

இரண்டு நாட்களில் குமாரும் ஆனந்தனும் கொழும்பு நோக்கிப் புறப்பட்டனர்.

இதற்கிடையில் அந்த விமலாவை ஒரு தரம் கண்டு நன்றி கூறலாம் என்று எவ்வளவோ முயன்றான். முடியவில்லை.

அவளாக அவன் வீட்டுக்கு வரமாட்டாள். அக்காவோடாவது வந்திருக்கலாம். அன்று கொழும்பு புறப்படும்போது அக்காவும் அத்தானும் பிள்ளைகளும் மட்டுமே வந்திருந்தனர்.

அவளைக் காணாதது என்னவோ போலிருந்தது. அந்த றிபன் பறிப்புச் சம்பவத்தை அக்காவிடம் சொல்லாமல் விட்டமைக்கு அவன் அவளுக்கு நன்றி கூற வேண்டும் என்று துடித்தான். அந்தத் துடிப்பே அவனை தொடர்ந்து வாட்டியது. ஆனந்தன் எப்போதும் போல் ஆனந்தமாக - கலகலப்பாகவே இருந்தான்.

"என்னடா இத்தனை பேர் வழியனுப்ப வந்திருக்காங்களே. ஒரு தடவையாவது அவர்களுக்கு உன் பற்களைக்காட்டிக் கொள்ள முடியாதா உனக்கு...?" ஆனந்தன் திட்டியமைக்காக ஒரு முறை எல்லாரையும் பார்த்து இளித்ததை ஆமோதிப்பது போல் ரயிலும் கூக்குரலுடனும் ஒரு குலுக்கலுடனும் புறப்பட்டது.

குமாருக்கு -திருகோணமலை கச்சேரிக்குச் செல்லுமாறு கட்டளை கிடைத்தது. ஆனந்தன்- அவன் ஆசைப்படியே கொழும்பில் கடமையேற்றான். அவனுக்கு தன் லீலாவிநோதங்களுக்கு ஏற்ற இடம் கிடைத்ததில் இரட்டிப்பு மகிழ்ச்சி. இருவரும் பிரிந்தனர்.

மூன்று வருடங்கள் இடையில் உருண்டன. குமாரும் ஆனந்தனும் மூன்று மாதங்கள் மட்டும் கடிதங்கள் மூலம் தொடர்பு கொண்டனர். பின்னர் ஒருவரை ஒருவர் மறந்து தங்கள் கடமைகளில் கண்ணாயினர்.

அன்று மாலை குமார் வீடு திரும்பும்போது அவனுக்காக ஒரு கடிதம் காத்திருந்தது. ஆனந்தன் தான் எழுதியிருந்தான். ஒரு முறை கொழும்பு வரும்படி கோரிக்கை விடுத்திருந்தான். வெசாக் விடுமுறையுடன் மேலும் சில நாட்கள் விடுப்பு எடுத்து வரும்படி ஆனந்தனின் கோரிக்கை

தட்டிவிட முடியாத அன்பு அழைப்பு. மறந்துவிட்ட நட்பு மீண்டும் துளிர்க்க ஒரு சந்தர்ப்பம்.

காலையில் ரயில் கோட்டையை அடைந்தது. கொட்டாஞ்சேனையை ஒரு வாடகை வண்டியில் போயடைந்தான்.

வீடு தேடி முன்கதவை நாடி அதன் அருகிலிருந்த பெல்லை அழுத்தியது அவன் விரல், கதவும் திறந்தது.

அவன் கண்ணெதிரே ..... அவன் காண்பது கனவா...? இல்லை. நனவுதான்! அவள் தான் விமலா! தலைமுடியை விரித்துப் போட்டிருந்தாள். அப்போதுதான் குளியல் அறையிலிருந்து நேராக வருகிறாள் என்பதை விரிந்த கூந்தலும், வீசிய நறுமணமும் உணர்த்தின.

"வாருங்கள்..." அவனை வரவேற்றபடி, "அத்தான்..." உள்ளே இருந்த ஆனந்தனை அழைத்தா....?

அவன் உள்ளக் கோட்டையின் ஒரு மூலையில் அரசோச்சிக் கொண்டிருந்த அவள்....இன்று ஆனந்தனின் வீட்டில்....!

ஆனந்தன் வருகிறான்...தன் இளங்கால நண்பன் குமாரைத் தழுவுகிறான். இருவரும் நாற்காலிகளில் அமர்கின்றனர். இதற்கிடையில் கையில் கோப்பி கோப்பையுடன் விமலா.

அதனை வாங்கும் போது அவன் கையில் உள்ள சூடும் அவள் கையின் குளிரும் ஒன்றோடொன்று மோதுகின்றன. கோப்பியை பருகாமலே எதோ நினைவுச் சுழியில் சுழன்ற குமாரை............

"என்னடா எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்த ஆலோசனை?" ஆனந்தன் கேட்கிறான்.

"கோப்பியைக்குடி....."

குமாரின் உள்ளக் கோட்டை சற்று முன்னர் தான் உடைந்து விழுந்து விட்டதை ஆனந்தன் எவ்வாறு உணர முடியும்?

"ஆனந்தன் உனக்கு...." கேட்டு முடிப்பதற்குள்,

"கலியாணம் ஆச்சு-பையனும் பிறந்திருக்கிறான்....மூணுவாரம் தானாச்சு அவன் பிறந்து.

"எனக்கு ஒண்ணுமே தெரியாதே..."

"என் கலியாணம் ஒரு திடீர் 'அரேஞ்ச்மென்ற்' . பொன்னம்பல வாத்தியார்...அவர் உனக்கு மாமா முறையில்லையா? அவர் திடீரென செத்திட்டார்... அப்பதான்..."

இதன்மேலும் குமாரால் ஆனந்தனின் கதையை கேட்க முடியவில்லை. விமலாவின் அப்பா தான் பொன்னம்பல வாத்தியார்.

"எழுந்திரு போய்க் குளிச்சிட்டு வா .... விமலா! சோப்பு- டவல் எல்லாம் எடுத்து வை...."

இயந்திரம் போல் எழுந்தான். காலைக்கடமைகளை முடித்து விட்டு வந்தான்.

"ஏன் இங்கு வந்தோம்" என்றே அவன் மனம் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தது. மூன்று வருடங்களுக்கு முன்னர் மாமாங்கத் திருவிழாவில் நடைபெற்ற சம்பவம் இன்னும் அவன் மனத்தில் பசுமரத்தாணிபோல் நிற்கிறது.

திருமலையில் பணியேற்ற பின்னர் மூன்று தடவை ஊர் சென்றிருந்தான். ஆனால்


www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# குறளோவியம்

-கலைஞர் மு. கருணாநிதி-

அரசியல் ரீதியில் அவரோடு முரண்பட்ட கருத்துக்கள் உள்ளவர்கள் கூட அவரது தமிழ் இலக்கியச் செழுமையைப் போற்றவே செய்வர். அவரது தமிழ் துள்ளும் தமிழ், நெஞ்சை அள்ளும் தமிழ், இதயங்களை வெல்லும் தமிழ். அவர்தான் கலைஞர் மு.கருணாநிதி. அவரது குறளோவியத்திலிருந்து ஒரு சிறு துளி, உங்களுக்காக:

## இலக்கிய நயம்



வழிமேல் விழியோட்டிக் காத்திருந்த வஞ்சிக்கொடியின் முன்னால் அவன் வந்து நின்றான். அருகில் யார் இருக்கின்றார் என்ற அச்சம் கூடச் சிறிதுமின்றி அவள் அழகிய கண்கள் அவன் முகத்தின் மீது மேயத் தொடங்கின.

வீட்டிலிருந்தோர் விலகிக் கொண்டனர்.

"பிரிவு, என் நெஞ்சைத் துளைத்தெடுத்துவிட்டது கண்மணி" என்றான்.

"என் நெஞ்சுக்கு என்ன நேர்ந்ததோ எனக்குத் தெரியாது! காரணம் அது, நீ என்னைப் பிரிந்து சென்ற போது உன்னுடனேயே வந்து விட்டது" என்றாள் அவள்.

கரங்களை நீட்டிக் கார் குழலாளைக் கட்டியணைத்தான். அவளோ, தன் தலையை அவனது மார்பினில் அழுந்தப் புதைத்துக்கொண்டு ஆனந்த சுகம் கண்டாள்.

உச்சந் தலையில் உதிர்த்தான் முத்தங்களை! அவளோ அவன் மார்பில் மழையாகப் பொழிந்தாள் முத்தங்களை!

"ஏனடி தங்கம்! உன் தேனிதழ்கள், திரும்பிப் பார்க்க மறுக்கின்றன என் உதடுகளை?" எனப் புன்னகையரும்பிட வினவினான்!

"அத்தான்! அதற்கென்ன அதற்குள் அவசரம்? இரவு முழுவதும் ஈரத்தால் நனைந்திடத்தான் நான்கிதழ்களநளெல்லாம் தவம் கிடக்கின்றனவே; கிடக்கட்டும்! வரம் அளிப்போம் பின்னர், நமது வாய்முகப்பின் கரும்புக் கதவு கட்கு! இப்போதென்ன உந்தன் மார்பில்? இறுகப் போர்த்திக் கொள்க! என் கன்னங்கள் சுவையேறட்டும்!"

அவன் நெஞ்சப் பஞ்சணையில் அவள் முகத்தைப் படுக்கவைத்து மெய்மறந்தாள்!

"மார்பகத்தால் என்னைப் புலன்மாற்றிப் போட்டவளே! கண்ணொளியால் என்னைக் கவர்ந்து கொண்ட பொன் மணியே! என் மார்பில் சாய்வதில் தான் உனக்கேனிந்த மயக்கம் மானே?

தழுதழுத்த குரலில் கேட்டான்; இன்ப மயக்கத்தில் தள்ளாடிக் கொண்டு!

அவள் சொல்லுகிறாள்;

"என்னைக் கொள்ளை கொண்ட கள்வனே! கள்ளுண்டவர்களைக் கண்டிருக்கிறாய் அல்லவா? அவர்கள் அந்த மயக்கத்தில் இழிவு தரத்தக்க செயல்கள் கூடப் புரிந்திடுவர். கள்ளுக்கு அடிமையாகித் துன்பங்களையும் ஏற்றுக் கொண்டு பிறர் தூற்றுதலுக்கும் கூட ஆளாகிவிடுவர். ஆனாலும் அவர்கள் அந்தக் கள்ளையுண்டு களித்த நிலையில் மேலும் மேலும் அந்தக் கள்ளையே அருந்திட விரும்புவர்! தன்னையுண்டு மயங்கியோர் மென்மேலும் தன்னையே விரும்புமாறு செய்கிற கள்ளைப் போன்றது கள்வர்; உன் மார்பு! அதனால் தான் நான் உன் மார்பில் முகம் புதைத்திடும் சுகத்தைத் திரும்பத் திரும்ப விரும்புகிறேன்."

அவளின் இந்த விளக்கத்திற்குப் பிறகு பேச்சுக்கே இடமில்லை!

*இளித்தக்க இன்னா செயினும்*
*களித்தார்க்குக்*
*கள்ளற்றே கள்வநின் மார்பு*

*(அதிகாரம் 129- புணர்ச்சி விதும்பல் பாடல் - 1288.)*



# கத்தரித்த கடி ஜோக்ஸ்

ஒருவர்: இந்த ரோட்டு கண்டி போகுமா?
மற்றவர்: இல்லையப்பா கண்டியில் இருந்து வருகிறது.

■

நீலா: கல்யாண வீட்டிலே எதற்காக வாழை மரம் கட்டுறாங்க?
மாலா: கட்டாமல் விட்டால் விழுந்திடுமே.

■

ரகீம்: மூன்று எறும்பு போய்க்கொண்டிருந்தது. முதல் எறும்பு எனக்குப் பின்னால் இரண்டு எறும்புகள் வருகின்றன என்று சொன்னது.

இரண்டாவது எறும்பும் தனக்குப் பின்னாலும் மூன்று எறும்பு வருவதாகச் சொன்னது, அது எப்படி?
நஜீம்: கணக்கிலே வீக்கோ.
ரகீம்: போடா முட்டாள். இரண்டாவது எறும்பு பொய் சொன்னது.

■

நீலா: கொக்கு ஏன் குளத்திலே ஒற்றைக்காலில் நிற்கிறது?
மாலா: அதன் விருப்பம். அது நிற்குது.

■

ஆசிரியர்: கம்பராமாயணத்தை எழுதியது கம்பர். மணிமேகலை எழுதியது யார்?
மாணவர்: மனிதர்.

■

நீலா: டவர் உச்சியிலே போப் பாண்டவர் நின்றார் என்பதை ஆங்கிலத்தில் எப்படிச் சொல்லுவாய்?
மாலா: போப் On டவர்.

■

ஆங்கிலஆசிரியர்: மிஸ் அண்டர்ஸ்டாண்டிங் என்பதை மொழி பெயர்த்துச் சொல்லுக.
மாணவன்: கன்னிப் பெண் கீழே நிற்கிறாள்.

■

ரகீம்: குரைக்கிற நாய் கடிக்காது. குரைக்காவிட்டால்.....
நஜீம்: அது ஊமை. அதுவும் கடிக்கும். ■

ஆசிரியர்: செக்ஸ் கல்வி நேரத்தில் வகுப்பில் என்ன கலாட்டா?
மாணவன்: இவன் ஹோம் வேர்க் வேணுமெண்டு அடம் பிடிக்கிறான் சேர்.

■

அவர்: என்னடப்பா இது, இப்படி நனைஞ்சு போய் வாறாய்?
மற்றவர்: நீ தானே பஸ்சிலே வந்து தண்ணிடாங் அடியிலே இறங்கச் சொன்னாய்.

■

அப்பா: போன்ல யாரோட இவ்வளவு நேரமா பேசிக் கொண்டிருந்தாய்?
மகள்: யாரோ ரோங் நம்பர்.
அப்பா: ....?.... ■

அதிகாரி: மிஸ்டர் 'ரே' யை மெதுவாகப் போனில் பேசச் சொன்னேன் அல்லவா? அவரிடம் சொன்னாயா?
ஊழியர்: சொல்லிவிட்டேன் சேர்.
அதிகாரி: அப்படியானால் இப்போதும் உரத்துக் கத்துகிறாரே விசாரிச்சாயா?
ஊழியர்: விசாரித்தேன். இது வெளிநாட்டில் உள்ள யாருடனோ பேசுகிறாராம்.
அதிகாரி: அவரைப் போனை மட்டுமே பயன்படுத்தச் சொல்லு போ. ■

ஆசிரியர்: நீ வாங்க விரும்பும் விருது எது?
மாணவன்: ஒஸ்கார் விருது சார்.

■

ஆசிரியர்: 1,2,3,4,5,6....தொடர்ந்து சொல்லுங்கள்.
மாணவர்கள்: (ஒரே குரலில்) எந்த ஊரு, சொந்த ஊரு, என்ன போரு......

■

*(இந்த இரண்டு கடிகளைத் தந்தது என். கஜேந்திரன், கொழும்பு 13 )*

முதலாளி: ஏனடா இவளவு வாழைப்பழம் வாங்கி வந்தாய்?
பணிப்பாளர்: நீங்கதானே ஐயா சீப்பா வாங்கிவரச் சொன்னீர்கள்.

*இந்தக்கடியை அனுப்பியது- ஏ.ரவிவர்மா)*

■

நீலா: கடிகாரம் பதின்மூன்று தடவை- பெல் அடிச்சா அதுக்குப் பேர் என்ன?
மாலா: ரிப்பேர்.

# தேன் கிண்ணம்

"சீக்கிரம் புறப்படுங்கள்"

ஓ.....ஆண்களே!
வரதட்சணை
வில் கொண்டு
கன்னியரை தாக்க
இனியும் முற்படாதீர்கள்.
ஆண்களுக்கு
பலமும் வீரமும்
மட்டுமல்ல
தன்னம்பிக்கையும் வேண்டும்.
அத்தகைய
தன்னம்பிக்கை
உங்களுக்கிருந்தால்
வரதட்சணை வில்லை
தூக்கி எறிந்து விட்டு
சீக்கிரம் புறப்படுங்கள்
வரன் கேட்டு!
ம்......
புறப்படுங்கள்!

கவிப்பிரியா நிஷா
வெல்லம்பிட்டிய.

சவாலே
சமாளி

நாங்கள்
இலக்கியமெனும்
தேசத்தில்
எழுத்தை
ஆழ்பவர்கள்

எங்கள் தார்மீக
ஆட்சியில்
பல திட்டங்களை
உருவாக்குகின்றோம்.

அவையாவன...!
கவிதை கட்டுரை
நாடகம் சிறுகதை
சிந்தனைகள் -எமது
திட்டங்கள்
சஞ்சிகை பத்திரிகை
வானொலியில்
நிறைவேற்றப்படுவதால்
நாம் நிறைவேற்று
அதிகாரம்
கொண்டவர்கள்
சவால்கள் வந்தாலும்
சமாளிப்போம்

கே. எஸ். சந்திரஷேகர்
கொண்டக்கெலை.

வாழ்க்கை

கருவறையை
விட்டு
கீழிறங்கி
கல்லறையை நோக்கி
போகும் தூரம் தான்
மனித வாழ்க்கை.

த. சாந்தினி
கொழும்பு.

வாலிபத்தின்
வாசலிலே!



என்
வாலிபத்தின்
ஆரம்ப அரும்புகளை
முகவரி தெரியாத
புயல் ஒன்று
முட்டி மோதியது.

அவள் நினைவுகள்
பூவைப் போல
மனதிற் படர்ந்து
தீயைப் போல சுட்டது.

புன்னகைக்க மட்டும்
கற்றுக் கொண்ட
அந்தப்
பொன்னுதடுகள்

அவள்
தளிர்களின் தங்கை
அந்த
உருளும் விழிகள்
புரளும் பூக்கள்
தங்க நிலவைத்
தங்க வைத்த
முகம்.

அவள்
பார்வையின்
பரவல்களில்
என்
உள் முதுகில்
ஒரு
குறுகுறுப்பு

அவள்
என்- உயிரையே
உறிஞ்சிக் குடித்த
புதுமையான
ஒரு
"பெண் நுளம்பு"

முதற் காதல்
வாலிப வாசலில்
வரையப்படுகின்ற
"அழியாத கோலம்"

கல்லொளுவையூர்
சர்ஹான்.

காதல் இன்பம்

அவன் வருவானே-நான்
நினைத்தேனே
அவன் வந்தானே-அருகில்
அழைத்தானே
வெட்கத்தில் நானே
தலைகுனிந்து நின்றேனே-பின்
அவனே அருகில் வந்தானே
என்னை இழுத்தணைத்தானே
கனிக்கன்னம் மென்று
தின்றானே-நானே
காதல் இன்பத்தில்
எனை இழந்தேனே!

ஜஹான் ஆராஜப்பார்
கல்பிட்டி.

பழையது மெட்டு
புதியதோ கருத்து?

அன்றொரு நாளினிலே
பொன்னான வேளையிலே
பூப்பூத்த சோலையிலே
அவன் வந்தான் காலையிலே
அள்ளி எடுத்தான் கைகளிலே
மயங்கிச்சரிந்தேன் மார்பினிலே!

சுக்கிரியா
கொழும்பு-15

இதழ் சிவப்பு!



உன்
இதழ் சிவப்பாக
இருப்பது
ஆபத்தானவள்
என்று
அர்த்தமா?

எஸ். துளசிநாதன்
அக்கரைப்பற்று.



நிலவே...
மேகம் உன் காதலனோ?
அடிக்கடி நீ
காணாமல் போய்விடுகிறாயே
அவன் அணைப்பில்

நிலவே
வானம் நீ வாழும் வீடோ?
நட்சத்திரங்கள்
உனக்கென்ன முறை?
ஆ.....
உன்னைத் தீண்ட
நினைத்து,
தீய்ந்தவர்களா?

நிலவே
மேகக் காதலன் இருக்க,
பூமிக்கிணற்றுடன்
உனக்கென்ன தொடர்பு?
இரவுக் காதலென்றால்
கள்ளக் காதலா....?

நிலவே
உன்னையும் பெண்ணையும்
ஏன் ஒப்பிட்டார்கள்....?
இரவிலே ஒளிர்ப்பவர்கள்
என்பதாலா?

நிலவே நீ ஆணா பெண்ணா...!
பெண்ணை மட்டும்
உன்னிடம் சேர்த்தாய்
எம்மை விட்டு
ஏன் பிரிந்தாய்.

திருமலை -திலா

---

அவளை - விமலாவை ஒரு தடவையேனும் காண வாய்ப்புக் கிட்டவில்லை.

அவள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் படித்துக் கொண்டிருக்கிறாள் என்பது மட்டும் வீட்டில் அடிபட்ட பேச்சுக்களில் கிடைத்த செய்தி.

இதோ இன்று அதே விமலா... ஆனந்தன்!

உள்ளே குழந்தை அழும் குரல் கேட்டது. அவன் சிந்தனைக்கு அது தடை விதித்தது. 'தாரமும் குருவும் தலை விதிப்பயன்' எப்போதோ கேட்ட மொழி.... தன்னைத்தானே தேற்றிக் கொள்ளுகிறான்.

தலைசீவி உடை மாற்றிக் கொண்டு, அறையை விட்டு வெளியே வந்தான்.

"குமார் என் பையனப் பாக்கிறதில்லையா? வா வந்து பார்.... அவன் அவங்க அம்மா மாதிரியா... இல்ல என் மாதிரியா... நீயே சொல்லு."

இது என்ன சித்திரவதை? ஓடிவிடலாமா என்ற ஏக்கம்! அந்த அறையை எட்டிப் பார்க்கிறான்....!

குழந்தையின் அருகில் படுத்திருப்பது... விமலா... இல்லை விமலா இல்லை.... அவளுடைய அக்கா கமலா.... அப்போது தான்- இதுவரை போட்ட கணக்கெல்லாம்......?

வெட்டப்பட்டது போல் விழுந்து கிடந்த அவன் மனச் சிறகுகள் சிலிர்த்துக்கொண்டு சந்தோசவானின் எல்லையைத் தேடுகின்றன.

பிஞ்சுக்கால்கள் வயிற்றில் உதைக்க சிறகசைப்பு நிற்கிறது. குழந்தையை வாங்க கரங்களை நீட்டுகிறான்.

குழந்தையை அவனிடம் கொஞ்சக் கொடுக்கிறாள் விமலா.

குழந்தையை வாங்கிக் கொள்ளும்போது கரங்கள் தொட்டுக் கொள்ளுகின்றன.

சற்று முன்னர் கோப்பிக் கோப்பையை அவள் தரும் போதும் கரங்கள் பட்டுக் கொண்டன. அப்போது அவை பேசிய கதை வேறு.

இப்போது பேசியது புதுக் கதை. அவளைப் பார்க்கிறான்.

பார்க்கிறான் என்று கடைக் கண்ணால் அறிந்து கொண்டு பின்புறம் கட்டியிருந்த கூந்தலை முன்புறமாய் எடுத்துக்காட்டி விட்டு உள்ளே ஓடி மறைகிறாள்.

அடர்த்தியான அந்தக் கூந்தலை அலைபாயவிடாமல் இறுக்கப் பிடித்திருந்தது அந்த... பச்சை றிபன்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்


சென்றவாரத்தின் தொடர்-


## காமன் தொடுக்கும் கணைகளும் வாழ்வு சுவைகாணும் முறைகளும்!



**கேள்வி:** பல திருமணங்கள் பாலியல் ரீதியில் முறிந்து விடுவதன் காரணம் என்ன? நெருக்கடியால் ஏற்படும் அழுத்தமா? அல்லது காலத்திற்கேற்ற சாதாரண காரணங்களா?

*பதில்:* நெருக்கடிகள், கருத்துக்களை செம்மையாகப் பகிர்ந்து கொள்ள முடியாத தன்மை, கருத்து வேற்றுமையால் எழும் பிரச்சனைகள் தீர்க்கப்படாமை என்பவை பாலியல் ஈடுபாடுகளின் சுகம் பாதிக்கப்படக் காரணமாக அமையலாம்.





**கேள்வி:** எனது நண்பர்களுடன் அன்றொருநாள் பாலியல் விடயங்கள் பற்றிப் பேசியபோது, துர்நடத்தை பற்றிய விளக்கங்களில் கருத்தொற்றுமை ஏற்படவில்லை. துர்நடத்தை என்றால் என்ன?

*பதில்:* அது ஒவ்வொருவருடைய கண்ணோட்டத்தையும் பொறுத்தது. வழக்கத்திற்கு மாறான உறவு கொள்ளும் முறைகள் மற்றொருவருக்கு துர்நடத்தையாகப் படலாம்.

**கேள்வி:** காதல் என்பது பாலியல் அல்ல, பாலியல் மட்டுமே காதல் அல்ல என்று மடோனா கூறுகிறார். நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

*பதில்:* பாலியல் காதலின் வெளிப்பாட்டுக்கானதோர் அம்சம். ஆனாலும் காதலை வெளிப்படுத்த வேறு பல வழிகள் உள்ளன. ஒருவர் கருத்தை மற்றவரோடு பகிர்ந்து கொள்வது, அரவணைப்பது போன்ற வழிகளும் உள்ளன.

**கேள்வி:** அன்பான காதல் வாழ்வில் செக்ஸ் ஏன் முக்கியம் பெற வேண்டும்?

*பதில்:* தம்பதியர் தங்கள் பிணைப்பையும், அடிப்படை உணர்வுகளையும் மீள உறுதி செய்யும் வாய்ப்பை அது வழங்குகிறது.

## மகிழ்வூட்டும் முறையால் உணர்வூட்டும் இசை

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஒரு இசைக்குழு கேட்போரை கிறங்கடித்துக் கொண்டிருக்கிறது.

நம் நாட்டில் ஒரு காலத்தில் 'பொப்' இசை மோகம் இளம் உள்ளங்களை மயக்கத்தில் ஆழ்த்தியது போல-





நியூயோர்க்கில் 'கரோக்கே' ஒரு கலக்குக் கலக்குகிறது.

மதுபானக் கடைகளிலும், உல்லாசப் பொழுதுபோக்கு அரங்குகளிலும் 'கரோக்கே' இசை கவர்ந்திழுக்கிறது.

**அது என்ன 'கரோக்கோ' ?**

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இசைக்கருவி, நவீன உயர் தொழில் நுட்பத்தினால் முன்கூட்டியே பதிவு செய்யப்பட்ட இசையை வழங்குவதுடன், அதற்கான இசை வடிவத்தோடு கூடிய வார்த்தைகளையும் கம்புயூட்டர் திரையில் காட்டுகிறது.

'கரோக்கே' என்றால் ஒன்றுமில்லாத இசைக்குழு என்று ஜப்பானிய மொழியில் அர்த்தமாம்.

நியூயோர்க்கில் இளைஞர்களும் யுவதிகளும் 'கரோக்கே' குழுவினரை மொய்க்கின்றனர்.

"'கரோக்கே' குழுவினர் உணர்வுகளை தூண்டுகின்றனர். தங்கள் காதல் அனுபவங்களை அதற்குரிய பாவங்களோடு பாடும்போது உணர்வுக் குதிரைகள் எழுந்து கொள்ளத் தொடங்குகின்றன" என்கிறார் ஒரு பிரியமான ரசிகர்.

'கரோக்கே' இசைக்குழு போட்டி ஒன்றை நடத்தியது. போட்டியில் நடுநிலையாளர்களாக இருந்தவர்களில் ஒருவர் பெண்.

போட்டியில் எரிக் என்னும் பாடகர் வெற்றி பெற்றார்.

நடுவராக இருந்த பெண் எரிக் அருகே சென்று "நீ ஒரு சிறந்தவன். அதுதான் உன்னை வெற்றிபெறவைத்தேன்" என்று கூறினாள்.

இன்னொரு ஆசையையும் அந்தப் பெண் சொன்னாளாம்-

"ஒருவன் பாடும்போதே என்னுடன் உறவு கொள்வதையே விரும்புகிறேன்"

எரிக் அதிர்ந்து போனான்.

'கரோக்கே' இன்று 2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வர்த்தக வருமானத்திற்கு வழி செய்கிறது.

'கரோக்கே' வெறுமனே உணர்வுகளை சுண்டிவிட்டு கிளர்ச்சியூட்டுவது மட்டுமல்ல-

"மக்கள் கூட்டத்தின் முன் நின்று பாடும் ஆற்றலையும் பெரும் பரிசாக வழங்குகிறது" என்கிறார்கள் 'கரோக்கே' குழுவினர்.

## காந்தம் போல் - ஒரு கவர்ச்சிப் பாடகி!



அமெரிக்காவின் கவர்ச்சிப் பாடல் அழகி விற்னி ஹாஸ்ரன்.

விற்னியை மொய்க்கும் ரசிகர் பட்டாளத்திடமிருந்து பாதுகாக்க ஒரு மெய்காவலர் படையே இருக்கிறது.

அதிலே-விற்னி ஹாஸ்ரனின் நம்பிக்கைக்குரிய மெய்காப்பாளர் டேவிட்.

விற்னியை மொய்த்துக் கொள்ள ரசிகர் பட்டாளம் காத்திருக்கும் போது விற்னியின் பார்வையோ மெய்காவலர் டேவிட்டை மொய்த்துக் கொண்டது.

மெய்காவலரை தன் காதலர் ஆக்கிக் கொண்டார் விற்னி.

## தூரத்து

டேவிட், சுறுசுறுப்பானவர். 40 வயதிலும் விற்னி ஹாஸ்ரனால் கவரப்படக்கூடிய இளமையோடிருப்பவர்.

டேவிட்-விற்னி காதல் மலர்ந்து அவர்கள் இன்பக் கடலில் கலந்து கொண்ட செய்திகேட்டு துடித்துப் போய் இருக்கிறார்- டேவிட்டின் மனைவி மார்லின்.

விற்னியின் விழி வீச்சில் வீழ்ந்து தன்னை அவர் புறக்கணித்துவிட்டதாக மார்லின் புலம்புகிறார்.

டேவிட், விற்னி அழைக்கும் போதெல்லாம் செல்வதற்கு வசதியாக விற்னியின் வீட்டருகே குடி புகுந்துவிட்டார்.

டேவிட்டின் அறையில் விற்னியின் பல கோண பாவனைகள் கொண்ட புகைப்படங்கள் நிரம்பி இருக்கின்றன.

விற்னி பாடகி மட்டுமல்ல. 'பொடி காட்' என்ற படத்தில் நடித்தும் இருக்கிறார்.

அந்தப்படத்தில் விற்னி வேறொருவருடன் நெருக்கமாக நடித்த போது டேவிட் பொறாமையால் துடித்துப் போனார். என்றாலும் "டேவிட் விற்னியை விட்டு விலகவில்லை. மேலும் நெருக்கமாகியிருக்கிறார்கள்" என்று மார்லின் முறையிடுகிறார்.



கவர்ச்சிப் பாடகி ஒரு காந்தம்போல டேவிட்டை கவர்ந்து கொண்டார்.

"பழையனவற்றை எண்ணிப் பார்க்காமல் மறந்து விடலாம்" இவ்வாறு மார்லின் கூறிக்கொள்கிறார்.

## லவ் பீச்

அற்புதமான சூழ்நிலை. தலை உயர்த்தி நிற்கும் மலைகள். மலை முகட்டில் முத்தமிட்டு தவழ்ந்து வரும் தென்றல். சல சலத்து வந்து வெண்ணுரை வீசும் நீர் வீழ்ச்சி. அணைத்துக்கொள்ள அருகில் கட்டுடல் கொண்ட இள நங்கை.

ஆனாலும் இன்பத்தேர் ஏறிச்செல்ல முடியாமல் சுற்றிவர வட்டமிடும் 50 ஜோடிக்கண்கள்.

கவர்ச்சிப் பாவை மாற் லட்டான்ஸியை அணைத்தபடி நின்ற ரிபானி லாம்ப் இப்படித்தான் கவலைப்பட்டிருப்பார்.

"இடது பக்கம் பார்த்தபடி கண்கள் இருக்கட்டும்...ஆனால் தலையின் பின்புறம் என்பக்கம் திரும்பக்கூடாது. என்ன சரிதானே.... ரைட், காமரா ஸ்டாட்....ஆக்ஷன்..." இயக்குநர் குரல் கொடுத்தார். அதிகாரம் கலக்கப்பட்ட குரல்.

அவுஸ்திரேலியாவில் தயாரிக்கப்படும் தொலைக்காட்சித் தொடர் 'காதலர் கடற்கரை'. அதற்காகத்தான் பெரும் செலவில் அந்தக் காட்சி எடுக்கப்படுகிறது. (பின்னே... நம்நாட்டு தொலைக்காட்சி போல பஞ்சத்திலா அடிபடுவார்கள்?)


அக்காட்சிக்கு உடைகள் வாங்கும் செலவு மிச்சமே தவிர, ஏனையவற்றுக்கு பணம் தண்ணீராய்ப் போகிறது.

கடற்கரைகள் காதலர்களின் அரங்கங்களாக மாறிவருவதால் காமராவும் கடற்கரைக்குச் செல்கிறது.

அமெரிக்காவின் 85 வீதமான தொலைக்காட்சிச் சந்தைக்கு 'காதலர் கடற்கரை' விற்பனையாகியிருக்கிறது.

காதலர்கள் மத்தியில் படத்திற்கு பெரும் எதிர்பார்ப்பு! இருக்காதா பின்னே?

### ....கடற்கரையிலே - ஒரு காதலர் சொர்க்கம்! .......



## - விடாமல் வெளிவந்து கொண்டிருக்கும்
## - ராஜவம்சத்து ரகசியங்கள்

# நாகரிகம்

பிரித்தானிய அரச பரம்பரையின் அந்தப்புர இரகசியங்கள் அடிக்கொரு தடவை அம்பலமாகிக் கொண்டுதான் இருக்கின்றன.

லேட்டஸ்ட்டாக வெளிவந்துள்ள கிளு-கிளுப்பான விவகாரம்-

29 வயதான அழகான இளவரசர் எட்வேட்டின் லீலைகளாகும்.

'எட்வேட்' தன்னினச் சேர்க்கையாளர் என்று இலண்டன் பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதித் தீர்த்தன.

அரச பரம்பரையின் அந்தப்புரம் வரை காமராவோடு நுழைவது,

அரச பரம்பரையின் வாரிசுகளை நிழல்போலத் தொடர்ந்து, அவர்களின் அந்தரங்க விவகாரங்களை 'கிளிக்' செய்து பளிச் பண்ணுவது என்று இலண்டன் பத்திரிகைகள் புகுந்து விளையாடுகின்றன.

இளவரசர் எட்வேட் பற்றி பத்திரிகைகள் எழுதியது தவறு.

எட்வேட் பலவீனமானவரல்ல என்று வாக்குமூலம் கொடுத்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார் முன்னாள் மொடல் அழகி ரோமி.

தனது வாக்குமூலத்தை உறுதிப்படுத்த பத்துவருடங்களுக்கு முன்பு நடைபெற்ற சுவையான சம்பவங்களையும் 'ரோமி' விபரிக்கத் தயங்கவில்லை.

ஆண்டு-1983. அப்போது இளவரசரின் வயது 19.

மொடல் அழகி ரோமிக்கு 16 வயது.

வைட் தீவில் உல்லாச வேளையொன்றில் 'ரோமி' நடன விருந்தளித்துக் கொண்டிருந்தாள்.

அவளோ இளமை கொஞ்சும் மங்கை. இடமோ நாட்டியச் சாலை.

இளமை துள்ளியது. இனிமை நெஞ்சை அள்ளியது.

இளவரசர் எட்வேட், இமைகள் மூடித்திறக்கக் கூட அவகாசம் கொடுக்காமல் அவள் இளமையை விழிகளால் மேய்ந்து கொண்டிருந்தார்.

நடனம் முடிந்தது. இளவரசரின் இதயத்தில் மட்டும் ரோமியின் நடனம் நடந்துகொண்டேயிருந்தது.

ரோமியும்- எட்வேட்டும் சந்தித்துக் கொண்டனர். நடன சாலையில் நள்ளிரவு வரை பேசிக் கொண்டிருந்தனர்.

தன்னோடு 'பக்கிங்ஹாம்' அரண்மனைக்கு வருமாறு ரோமியை அழைத்தார் இளவரசர்.

எட்ட முடியாத இடத்தில் இருந்து வரும் அழைப்பல்லவா? தட்டமுடியவில்லை.

அண்மையில் உள்ள தன் அந்தப் புரத்திற்கு ரோமியை அழைத்து சென்றார் எட்வேட்.

எலிசபெத் மகாராணியும் அன்று அரண்மனையில்தான் தங்கி இருந்தார்.

அன்று விடியும் வரை இளவரசர் ரோமியைத் தூங்க விடவில்லை. விடிந்தபின்பும் அணைப்பில் இருந்து விடவில்லை.

அதன்பின் ரோமியும்- இளவரசரும் கரம்கோர்த்துக் கொண்டு பல விருந்துகளுக்கு ஒன்றாகவே சென்றனர்.

எட்வேட், ரோமி உறவு ஒன்றும் இரகசியமானதல்ல.

இருவரும் அரண்மனையின் தனி அறையில் தங்கி இருக்கும் போது அரண்மனைப் பணியாளர்களே உணவு பரிமாறுவதுண்டு.

"இளவரசர் காதல் லீலைகளில் அப்போது முன் அனுபவம் இல்லாதவராக இருந்தார். எங்கள் இருவருக்குமே புது அனுபவம் தான்" என்கிறார் ரோமி.

அன்றொருநாள்- மகாராணியார் பெரிய விருந்தொன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

அறைக்கதவு தட்டப்பட்டது. காலை வணக்கம் சொல்லிக் கொண்டு காலை உணவோடு பணியாளர் உள்ளே வந்தார்.

"ஒரேகட்டிலில் இருவரும் இருப்பதைப் பார்த்துவிட்டு என்ன நினைக்கப் போகிறாரோ என்று சஞ்சலப்பட்டேன். பணியாளர் எதையும் பொருட்படுத்தவில்லை. காலை உணவு கச்சிதமாக இருந்தது" என்று ரோமி சொல்கிறார்.

பணியாளர் வெளியே சென்றபோது இளவரசர் எட்வேட் ரோமியைப் பார்த்து குறும்புப் புன்னகை ஒன்றை வீசினார்.

"ஒரு பெண்னோடு தான் இருப்பதை பணியாளர்கள் அறிந்து கொள்ளட்டும். அது ஒரு பெருமைதான் என்று அவர் கருதியிருக்கக்கூடும்" என்று ரோமி அபிப்பிராயப்படுகிறார்.

அரண்மனையில் நடக்கும் விருந்துகளில் அடிக்கடி கலந்து கொள்ள வேண்டி ஏற்பட்டதால் அரண்மனை நடைமுறைகளையும் அறிந்து கொள்ள வேண்டி ஏற்பட்டது.

காலையில் 'பாக் பைப்பர்' இசைகேட்டு அரண்மனையில் உள்ளவர்கள் துயில் எழுகின்றனர். 9 மணிக்கு அனைவரும் உணவு அருந்தும் மண்டபத்திற்கு செல்கின்றனர். காலை உணவின் போதுதான் அன்றைய நிகழ்ச்சிகள் நிச்சயிக்கப்படும்.

ரோமியை இளவரசர் விடுமுறைக்காக அழைத்தமை அவர் தந்தை பிலிப்புக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியதாம்.

"ஒரு தடவை இரவுப் போசன விருந்தொன்றின் போது இளவரசர் பிலிப் என்னருகில் இருந்தார். நான் முன்புறமாக குனியும் சந்தர்ப்பங்களில் அவரது பார்வை என் முன் அழகுகளை நோக்கி தாவுவதைக் கண்டேன்" என்று ரோமி சொல்கிறாள்.

-அத்தோடு விடவில்லை-

"நான் உணவு முடிந்து செல்லும் போது என்னைப் பார்த்து அந்த மனிதர் கண்ணடித்துவிட்டு, என் பின்புறமாக மெல்லத் தட்டினார். எனக்கு தர்ம சங்கடமாக இருந்தது" என்றும் ரோமி சொல்லியுள்ளாள்.

ஒரு நாள் உணவு நேரத்தின் போது மகாராணியாரும் கலந்து கொண்டார். அன்று பரிமாறப்பட்ட உணவில் இறைச்சியை முள்ளுக்கரண்டி, கத்தியினால் பிரித்தெடுப்பது கடினமாக இருந்தது. உடனே மகாராணியார் இறைச்சியை கையால் எடுத்து பற்களால் சதையைக் கடித்து சுவைக்கலானார்.

"என்னுடைய மதிப்புக்குரிய முன்னோர்கள் எல்லாம் இவ்வாறுதான் உணவை ருசித்து சாப்பிட்டிருப்பார்கள். இப்படி உண்ணுவதில் கேவலம் எதுவும் இல்லை" என்று மகாராணி கூறினார்.


1983முதல் 1985 வரை எட்வேட்- ரோமி இருவரும் பலமுறை தனிமையில் தம் பொழுதைக் கழித்தனர்.

பின்னர் நிலமைகள் மாறத் தொடங்கியது.

ரோமி மொடல் அழகி என்பதால் உலகின் பல பாகங்களுக்குச் செல்லவேண்டி இருந்தது.


"எடவேட் என்னை தன் எதிர்கால துணைவியாக்க எண்ணியிருந்தார். நான்தான் அதற்கு தயாராக இருக்கவில்லை" என்கிறார் ரோமி. ●







வாரமலர்
தினமுரசு





## -குற்றவாளிக் கூண்டில்-
## -ஹொலிவூட்டின் வழக்கறிஞர்-



**தூரத்து நாகரிகம்**

டாக்டர் லவ் கேள்வி-பதில்

ஹொலிவூட் நட்சத்திரங்களின் விவாகரத்து விடயங்களை வெற்றிகரமாக வழக்காடி, அவர்கள் கையில் வெற்றிக்கனியை கொடுப்பவர்தான்
-மார்வின் மில்சல்சன்-

அந்த 64வயது தந்திர மூளைக்காரர் இன்று கண்ணீர் விடுகிறார்.

காரணம்- அவர் இப்போது சிறையில் இருக்கிறார்.

அவர் செய்த குற்றம் என்ன?

1983 முதல் 1986 வரை தான் பெற்ற வருமானத்தில் 20 இலட்சம் அமெரிக்க டொலர்களை கணக்கில் காட்டவில்லை.

மூன்று வருட விசாரணை. எட்டு வாரம் வழக்கு. முடிவில் 21/2 வருட சிறைத்தண்டனை.

உலகப் பேரழகிகளின் குடும்பச் சிக்கல்களை வழக்காடி வென்று கொடுக்கும் மார்வின், அந்தப் பேரழகிகளை விட ஆடம்பரமாக வாழ்ந்தார்.

'பிளேபோய்' என்ற பத்திரிகையின் ஆசிரியருக்கும்- அவரது முன்னாள் காதலி காரிலீக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கில் அவர் காரிலீக்கு உதவினார்.

மார்வின் போதை வஸ்து வழக்கத்திற்கு அடிமையானவர். அதுமட்டுமல்ல 5000 முதல் 10000 வரை அமெரிக்க டொலர்களை தினமும் சூதாட்டத்தில் இழந்து விடுவார்.

மார்வினின் காதல் நாயகி நினா என்பவள் அவரால் ஏமாற்றப்பட்டு, பின்னர் அவரைப்பற்றிய இரகசியங்களை வெளியிட்டுள்ளாள்.


முன்னாள் பிரபல வழக்கறிஞரை காப்பாற்ற அவரது உதவிபெற்ற எந்தப் பேரழகியும் முன்வராதது சோகம்தான்.

இப்போது மார்வின் 5 இலட்சம் அமெரிக்க டொலர் பிணையில் வெளியே வந்துள்ளார். அப்பீலும் செய்துள்ளார்.

**உலகமோ உலகம்**











எகிப்தின் பழம்பெரும் பிரமிட்டுக்கள்

**உங்கள் சந்தோசமே எங்கள் தேவை**



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை சோமாதேவி பிளேஸ், 88/14ஆம் இலக்கத்தில் டிடி என்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினரால் 29, வெல்பார, நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஜூன் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.